


# விஷ வைத்தியம்









வைத்திய கலாநிதி

**கணேஸ் ஸ்ரீதரன்**

# விஷவைத்தியம்

(ஆயுர்வேத வைத்தியசபையில் விஷவைத்தியர்களாக பதிவுசெய்யவுள்ள பரம்பரைவைத்தியர்களுக்கும், சித்தமருத்துவ மாணவர்களுக்கும், சித்தமருத்துவ ஆராய்ச்சியாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் பயன்படும் வகையில் யாழ்ப்பாணத்து அனுபவமுள்ள விஷவைத்திய முறைகளை உள்ளடக்கியுள்ளது)

வைத்தியகலாநிதி க. ஸ்ரீதரன்
**BSMS (SL). M.Phil (Jaffna)**

**651 (1207) கே. கே. எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

நூல் : விஷவைத்தியம்

ஆசிரியர் : டாக்டர் க. ஸ்ரீதரன்

முகவரி : 651 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

பதிப்பு: முதலாம்

பதிப்புரிமை: ஆசிரியர்களுக்கு

அச்சுப்பதிப்பு : ஸ்ரீ சாயி பிறிண்டேர்ஸ்,
1227 கே. கே. எஸ் வீதி,

ஆண்டு: தை 2009.

விலை : ரூபா. 250/-



# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| முகவுரை | 4 - 5 |
| முன்னுரை | 6 - 7 |
| அறிமுகம் | 8 |
| நிதானம் எனும் ஆருடம் | 9 - 20 |
| திரட்டுப்பாகம் மந்திரம் | 20 - 28 |
| சிகிச்சை | 29 - 36 |
| தாதுவகுப்பு | 37 - 38 |
| தாவரவகுப்பு | 39 - 40 |
| அமுதாகாரம் | 40 - 54 |
| விசர்நாய் கடி வைத்தியம் | 55 - 58 |
| விஷ முதலுதவி முறைகள் | 59 - 85 |
| மருந்துச் சரக்குகளின் சுத்திமுறைகள் | 86 - 89 |
| பின்னிணைப்பு | 90 - 100 |
| உசாவியவை | - 101 |

குருவே துணை

# முகவுரை

இற்றைக்கு பல ஆயிரம் வருடங்களுக்கு முன் பாவமறியாத காலத்தில் சித்தர்கள், முனிவர்கள், ரிசிகள், ஞானிகள் இறைவனருளினால் தோன்றினர். அது வேதகாலமென்பர். அவர்கள் தத்துவத்தைக் கண்டறிய வாசியை அடக்கினர். வாசியென்பது சுவாசம் ஆகும். இது 3வகைப்படும். அவையாவன இடகலை 31/2 அடிச்சுவாசம், ஆண்சுவாசம் சூரிய கலை எனவும் பின்கலை 3 அடிச்சுவாசமெனவும் அது பெண்சுவாசமெனவும் சந்திரகலை யெனவும் சுழிமுனை அலிச்சுவாசமெனவும் 1/2 அடிச்சுவாசம் எனவும் அக்கினிக்கலையை ஆண் பெண் சுவாசங்களுடன்வாயின் அறிந்து தியானம், யோகம், தவம் எனவும் ஐம்புலன்களையும் அடக்கி கருவி கரணாதிக்களையும் மனதில் ஒடுக்கி லயனப்படுத்தி யோகாசனத்துறையில் இருந்து இடகலையை பின்கலையாக மாற்றி இந்த இரு சுவாசங்களையும் அக்கினிகலையாகிய சுழிமுனையில் நிறுத்தித் தவமிருந்தனர். தியானத்திலிருந்து யோகநிலையடைந்து யோகத்திலிருந்து தவநிலையடைந்து வாசியோடி மருவி மும்மண்டலங்களையும் தாண்டி அனந்த கோசியில் அறிவுண்டாக்கி ஒலியும் ஒளியுள் ஐக்கியப்பட்டு தம்முடைய தவவலிமையால் இறைவனைப் பிரசன்னப்படுத்தி நால்வேதங்களையும் கற்றுணர்ந்து அதன் உபவேதங்களாகிய தர்ம சாஸ்திரம் இறைவனுக்கு பூசை அதன் வேதமந்திரங்களையும் வைத்தியம், சோதிட சந்த அலட்சணம் தத்துவஞானங்களாகிய இவைகள் நால்வேதங்களின் உபவேதமாகவும் இன்னோரன்ன பிறவுமாக வகுத்து தங்களின் சொந்த ஞானக்கருவியினால் பகுத்தறிந்து கண்ட அனுபவங்களை ஒளிவுமறைவின்றி எழுதி வைத்துப்போயினர்.

ஆறு உபவேதங்களும் மனித ஈடேற்றத்துக்காக முன்னோர்கள் தந்த அரும்பெரும் பொக்கிஷமாகிய கருவூலங்கள்.



இவற்றை வயிற்றுப்பிழைப்புக்காக பலரும் அரும் பெரும் கலைகளை சிறப்புறச்செய்யாமல் கற்றிந்த ஆசானிடம் கேட்டுத்தெளிந்து கற்காது வீண டிக்கிறார்கள். முன்புபோல் குருஷேத்திரமோ, கலைகளைக் கற்பிக்கும் இடங்களோ தற்போது இல்லை. அப்படி இருந்தாலும் தேடிக்கற்கும் மாணவர்களும் இல்லை. ஆகவே இக்கலைக்கு உயிரூட்டுவது போல சித்தஆயுர்வேத உண்மைகளை மருத்துவ கலாநிதி ஸ்ரீதரன் முயற்சி எடுத்து அச்சுவாகனம் ஏற்றுகிறார்கள். இக்காலச் சூழ்நிலையில் தேவையறிந்து விஷவைத்திய முறைகள் அழியாது அவற்றை ஆராய்ந்து, களப்பணியில் ஈடுபட்டு, ஆய்வுசெய்து யாழ்ப்பாணத்தில் சித்தவைத்தியர்கள் கையாண்ட முறைகளை தொகுத்து நூலாக விஷவைத்தியம் எனும் நூலை வெளியிடும் அவர்களின் முயற்சி வெற்றியளிக்க வாழ்த்துகின்றேன்.

சித்தஆயுர்வேதவிஷக்கடி வைத்தியர்

***த. சண்முகம்***

துரைவீதி தாவடி வடக்கு,

தாவடி

யாழ்ப்பாணம்.

21 .06. 2008

# முன்னுரை

யாழ்ப்பாணத்தில் சித்தவைத்தியம் சிறப்பாக விளங்கிய காலத்தில் விஷவைத்தியம் மிக உன்னதமாகக் கையாளப்பட்டு வந்துள்ளது. இவ் வைத்தியப்பகுதியை இற்றைக்கு 260 வருடங்களுக்கு முன்னரே யாழ்ப்பாணத்தின் சுன்னாகத்தில் வசித்த புலவர் சிகாமணி பிரம்மஸ்ரீ அ. வரதபண்டிதர் அவர்கள் 32 பாக்களால் அமுதாகாரம் எனும் பெரிய நூலாக அருளினார். அதேவேளை திருகோணமலையில் வித்துவான் ஸ்ரீமான் சு. தம்பையா அவர்கள் 1852இல் விஷவைத்தியம் எனும் ஒரு அச்சுப்பிரதியைப் பதிப்பித்தார். மட்டக்களப்பில் வசித்த ஆரம்பத்தை சி.பொ.த. கண்ணப்பர் (பரிகாரி கண்ணப்பர்) அவர்களும் விஷவைத்திய கையெழுத்துப்பிரதியை வைத்திருந்தார். இவைகள் எல்லாவற்றிலும் வடிக்கப்பட்ட விஷவைத்தியம் ஒரேமாதிரியாகக் காணப்பட்டன. இதிலிருந்து அறியமுடிவது யாதெனில் சித்தவைத்தியத்தில் உள்ள விஷவைத்தியம் இலங்கையில் ஒரு மூலநூலில் இருந்து உருவாகியிருப்பதை அனுமானிக்கக் கூடியதாகவுள்ளது. இவ்வாறு இலங்கை பூராக பரவி வளர்ந்த விஷவைத்தியக்கலை இன்று செயலிழந்து அழிந்துபோய்க்கொண்டிருக்கிறது. வைத்தியர்கள் தமது குடும்பச்சொத்தாக இவ்வைத்தியத்தை பயன்படுத்தியதாலும் பிறருக்கு சொல்லிக் கொடுக்காமல் விட்டதாலும், விஷவைத் தியர்கள் எவருமே இடைக்காலத்தில் இவ்வைத்தியத்தை நூலில் எழுதி தமது அனுபவமுறைகளை ஆராய்ச்சி செய்யாமல் விட்டதாலும் விஷவைத்தியம் அழிவடைந்து போய்விட்டது. காடுகள் அழிந்து வீடுகள் உருவாகினதாலும், ஆங்கில வைத்திய முறைகள் புகுத்தப்பட்டதாலும் இவ்வைத்தியமுறை தன் முக்கியத்துவத்தை இழந்தாலும் அது தன் தனித்துவத்தை இழக்கவில்லை. இன்றைய காலகட்டத்தில் இவ்வைத்திய முறைகளில் ஆய்வுகள் மேற்கொண்டு இவ்வைத்திய முறைகளை அழியாது காக்க



வேண்டியது சித்தவைத்தியர்களின் தலையாயகடமையாகும். சித்தமருத்துவ மாணவர்களுக்கும், சித்த வைத்தியர்களுக்கும் இலகுவில் விளங்கக்கூடிய முறையில் தொகுக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள முறைகளை சித்த வைத்தியர்கள் சிறப்பாக கையாண்டு விஷவைத்தியம் செய்துள்ளார்கள். விஷவைத்தியத்தில் கருடனை அழைத்து விஷம் இறக்கிய சந்தர்ப்பத்தை இந்நூலாசிரியர் நேரடியாகக் கண்டிருக்கிறார். இங்குள்ள விடயங்களை சில விஷவைத் தியர்களிடமும், அவர்களிடம் சிகிச்சை பெற்ற நோயாளிகளிடமும், அவர்களை கூட்டிச் சென்றவர்களிடமும் மற்றும் செவிவழித்தரவுகள் மூலம் பெறப்பட்ட தரவுகளை அடிப்படை யாகக் கொண்டு இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளதால் சித்தமருத்து மாணவர்களுக்கும், சித்தவைத்தியர்களுக்கும், ஆயுர்வேத மருத்துவ சபையில் ஆயுர்வேத வைத்தியர்களாக பதிவு செய்யவுள்ள பரம்பரை வைத்தியர்களுக்கும் ஒரு வழிகாட்டு நூலாக அமையும் என எதிர்பார்க்கின்றேன்.அத்துடன் பின்னிணைப்பாக பொதுமக்களுக்கு விஷசம்பந்தமான முதலுதவி முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த முதலுதவி முறைகளை குடும்பத்தில் உள்ள அங்கத்தவர்களில் ஒருவராவது அறிந்திருத்தல் மிகவும் பயனுடையதாகும். பாடசாலை மாணவர்களின் பாடத்திட்டத்தில் இவ் முதலுதவி முறைகள் சேர்க்கப்படுமானால் சமூகத்திற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் எனக் கருதுகின்றேன்.

**வைத்தியகலாநிதி**
**க.ஸ்ரீதரன்**
**BSMS(SL).M.Phil(Jaffna)**
**651கே.கே.எஸ்.வீதி**
**யாழ்ப்பாணம்**
**14.01.2009.**

# அறிமுகம்

## புராண வரலாறு:

அசுரரும் தேவர்களும் பாற்கடலைக் கடைந்த போது அமிர்தத்திற்கு பதிலாக கோரைப்பற்களுடன் புருடரூபமாக ஓர் உருவம் கிளம்பியது. அவன் தேதோஜா (ஒளி) மயமாகவும் 4 கோரைப்பற்கள் உடையனவாகவும் பொன் நிறமான உரோமம் உடையவனாகவும் நெருப்புப் போன்ற நேத்திரம் உடையனவாகவும் காணப்பட்டான். உலகம் அவனைக் கண்டு பயந்து அவனுக்கு விஷம் என பெயரிட்டனர். அவனை பிரமதேவன் கண்டு சங்காரம் செய்து விரட்டியதும் அவன் தனது மாயை உருவகத்தை விட்டு தாவரங்களிலும் ஜந்துக்களிலும் தன் விஷத்தன்மையையும் பிரித்து சேர்த்து விட்டான் என்று அஸ்டாங்ககிருதயம் கூறுகின்றது.

## விஷ வைத்திய பிரிவுகள்:

விஷவைத்தியம் முழுவதையும் மூன்று அத்தியாயங்களாக வகுக்கலாம். அவையாவன:

1. நிதானம்
2. மந்திரம்
3. சிகிச்சை

சாஸ்திரங்களில் வைத்தியவிலக்கணம் பலவாகக் கூறப்பட்டிருப்பினும் விஷவைத்தியம் செய்வோருக்கு அமைந்திருக்க வேண்டிய முக்கிய இலக்கணங்களாவன, கடவுளிற் பூரண நம்பிக்கையும், பக்தியும், மருந்து, மந்திரங்களில் சந்தேகமற்ற விசுவாசமும், உயிர்களிடத்தே நிரம்பிய இரக்கமும், தெளிந்த அறிவோடு கூடிய அமைதியான திடபுத்தியும் சமயோகிதமாய் நடக்கும் திறனும், சோம்பலின்மையும், பொருள் வருவாய்மேல் இம்மியும் அவா இன்மையும், உண்மையைக் கடைப்பிடிப்பவராய் இருத்தல் வேண்டும். நாம் எவ்வித கஷ்டமான துன்பமான நிலையில் இருப்பினும் நோயாளி இருக்குமிடஞ்சென்று எம்மாலான எல்லாஞ் செய்து உயிரை மீட்டல் வேண்டும்.



## நிதானம் எனும் ஆரூடம்:

பிரதானமாக மனிதரையும், விலங்குகளையும் தீண்டும் விஷ செந்துகள் பின்வருமாறு:

நாகம், விரியன், வழலை, கொம்பேறி மூக்கன், சாணாமூக்கன், புடையன், மண்டெலி, சவுடி, மயக்கரா, நீர்ப்பாம்பு, மலைப்பாம்பு ,மண்ணுண்ணி, சாரை, செய்யான், இருதலைமணியன், சிலந்தி, புலிமுகச்சிலந்தி, தேள், பூரான், திருநீலகண்டான், புள்ளிவண்டு, பச்சோந்தி, செவ்வட்டை, நாய், நரி, பூனை, புலி, பிலவங்கம், காட்டுத்தவளை, அரணை, நட்டுவாய்காலி, எறும்பு, குரங்கு, கரடி, கீரி, எலி, பன்றி, திருக்கை, செந்திருக்கை, கெடுத்தல், மசறி, அழுங்கு, ஆமை, கருடன், பருந்து, கழுகு முதலாயின.

இவற்றுள் நாகம், தேள், வழலை, நீர்ப்பாம்பு, அரணை, எலி, மண்டெலி, சுருட்டைப்பாம்பு, சாரை, மாநாகம், எறும்பு, மயக்கரா, வண்டு.செய்யான் பூரம், விரியன், சிலந்தி எனும் 16 வகையும் தவிர்ந்த ஏனைய எந்த விஷசெந்துவும் தீண்டினால் அவற்றை ஆருடம் பார்த்து அறியவேண்டியதில்லை. கடியுண்டவரிடம் கேட்டறிந்து கொள்ளலாம். ஆகவே இப் பதினாறு வகை இனத்துள்ளும் அறியவேண்டிய விபரங்கள்:

**நாகம்:-** அனந்தன், வாசுகி, தட்சகன், காற்கோடகன், பத்மன், மகாபத்மன், சங்கபாலன், குளிகன் என்பன அட்டமா நாகப்பெயராம். அவற்றுள்:-

அனந்தன், குளிகன் இரண்டும் பிராமணசாதி 'பிரம்ம்' என்றும் வாசுகி, சங்கபாலன் இரண்டும் அரசசாதி 'சஷத்திரிய' என்றும் தட்சகன், சங்கபாலன் இரண்டும் செட்டிசாதி 'வைசிய' என்றும் காற்கோடன், பத்மன் இரண்டும் பறையன்சாதி 'சூத்திர' என்றும் கூறப்படும். அனந்தன், வாசுகி, தட்சகன், காற்கோடகன் என்பன ஆண் பாம்புகளாகும். பத்மன், மகாபத்மன், சங்கபாலன், குளிகன் என்பன பெண்பாம்புகளாகும். அனந்தன் ஞாயிறு முழுவதும் வெளிவந்து உணவருந்தும் எனவே இப்பாம்பு ஞாயிறு மட்டும் தான் கடிக்கும் என்பதும் ஏனைய நாட்களில் கடிக்க முடியாது என்பதும் அறிக.

இவ்வாறு வாசுகி திங்களும், தட்சகன் செவ்வாயும், கார்கோடகன் புதனும், பத்மன் வியாழனும், மகாபத்மன் வெள்ளியும், சங்கபாலன் சனி பகலும், குளிகன் சனி இரவும் புறப்படும். எனவே அவை அத்தினங்களில் மட்டுமே கடிக்கவும் முடியும் என்பதையும் அறிக. இந்நியதி எதனாலும் மாறுபடாது. ஏனைய விஷசெந்துக்களுக்கு இவ்வளவு விபரம் தேவையில்லை. ஏனெனில் அவை நியதியாய்ப் புறப்பட்டு உண்டு சீவிப்பவை அல்ல.

## கடிக்கும் அளவும் சிகிச்சையளவும்:

ஒரு பல் பட்டால் அது 1/4காற்கடி மந்திரத்தால் மட்டும் தீர்க்கலாம்.

இரு பல்பட்டால் அது 1/2அரைக்கடி விஷக்கல் வைத்து மந்திரம் செய்து தீர்க்கலாம்.

மூன்று பல் பட்டால் 3/4 முக்காற்கடி மந்திரம், விஷக்கல், மூலிகைகளினாலாய மருந்துகளாலும், நசியங்களாலும் தீர்க்கலாம். 4பல் பட்டால் முழுக்கடி ஷெயுடன் தெய்வச் செயலும், ஆயுட்பலனும் இருந்தால் தீர்க்கலாம்.

## விஷம் கடித்தால் தீர்க்கமுடியாத உறுப்புகள்:

உள்ளங்கால், உள்ளங்கை, நெற்றி, மார்பு, கழுத்து, முலை, மூக்கு, புருவம், தொப்புள். சந்துகள், விலா, குதிக்கால், இருசெவி, மர்மஸ்தானங்கள் இவற்றில் விஷம் தீண்டினால் தீர்க்கமுடியாது.

## தீராத இடமும் நேரமும்:-

தேரடி, ஆவாரம்பற்றையடி, புன்னை, புளி, மூங்கில், அரசு, நாணல், தர்ப்பை, புற்று, கிணறு, குளக்கரை, புதுவாய்க்கால், பழங்கோயில், பாழ்வீடு, விறகு, சுடலை, நந்தவனம், பொதுமடம், நதிக்கரை, ஏரிக்கரை, யாகசாலை, முச்சந்தி, நாற்சந்தி, நித்திரையிடம், ஐயனார் கோயில், காளிகோயில் முதலிய இடங்களிலும், சூரியேதயம் உச்சிக்காலம், அஸ்தமனம், நடுச்சாமம் முதலிய நேரங்களிலும் விஷம் தீண்டினால் எவராலும் தீர்க்கமுடியாது.



## மீளாத நாட்கள்:-

பரணி, மகம், ஆயிலியம், திருவோணம், மூலம், திருவாதிரை, கார்த்திகை, விசாகம், சுவாதி, சித்திரை ஜென்மநாள், ஜென்ம முதநாள் இவையும் இவைசேர்ந்த அமாவாசை நவமி, சஷ்டி குளிகன் காலம் இவைகளில் தீண்டினால் அவ்விஷம் தீராது. (ஜென்ம நாள் கடியுண்டவர் பிறந்த நட்சத்திரம், கிழமை என்னும் இரண்டுமாவது நட்சத்திரம் மட்டுமாவது பொருந்திவரும் நாளாம். ஜென்ம முதல் நாள் பிறந்த நட்சத்திரத்துக்கு முதல் நட்சத்திரம் வரும் நாள்).

## மீளாத சில குறிக்குணங்கள்:-

அரவம் கடித்தபின் ஆடினும் கீழே புரண்டாலும், கடித்த இடத்திலே ஆடிக்கிடந்தாலும் அந்தக்கடி தீராது. மேலும் கடித்தவாய் தடித்தாலும், வீங்கிக்கடுத்தேறினும், கழுத்துச்சேர்ந்து தலை சரிந்து விட்டாலும், ஏட்டிலே மருந்து தேடிணபோது திறந்தவுடன் குறித்தமருந்தே எதிர்ப்படினும் கடிவாயில் செவ்விரத்தம் குமுறிப்பாய்ந்து கொண்டிருந்தாலும், கடிபட்ட இடம் தவிர்ந்த வேறு இடங்களிலிருந்து இரத்த சம்பந்தமான ஏதாவது வெளிப்பட்டாலும், நாவரண்டு விழிசிவந்து நடுக்க முண்டாயிருந்தாலும் பாம்பின் 4 பற்களும் பதியப்பட்டிருந்தாலும், கடித்தவாய் நீலநிறம் போல நைந்து கறுத்திருந்தாலும், கடிபட்டவருக்கு உடனே தானாக மலசலம் போனாலும், உடல், கை, கால் விறைத்து நிமிர்ந்திருந்தாலும், இரு விழியும் சொருகிக் கொண்டாலும் அக்கடியுண்டவர் தப்புவதற்கில்லை.

## கண்களின் குறிகள் முதலியன:-

ஆண் பாம்பு கடித்தால் கண்கள் மேல்நோக்கும்
பெண்பாம்பு கடித்தால் கண்கள் கீழ்நோக்கும்
மலட்டுப்பாம்பு கடித்தால் வியர்வை மிகும்.
அலிப்பாம்பு கடித்தால் விஷம் அதிகரிக்கும்.

## பற்களின் விளக்கம்:-

பாம்புகளில் 4 பற்களில் மட்டும்தான் விஷமுண்டு. அவற்றை விஷப்பல், கோரைப்பல் என்று நாடோடியாகக் கூறுவர். வைத்திய சம்பந்தமாக இவை ஒவ்வொன்றுக்கும் தனிப்பெயருண்டு.

கீழ்த்தாடை காளி எனும் இடப்பல் காகபாத வடிவம் 1/4 பங்கு வலிமை.

கீழ்த்தாடை காளாஸ்திரி எனும் வலப்பல் முக்கோண வடிவம் 1/2 பங்கு வலிமை.

மேல்தாடை யமன் எனும் இடப்பல் துறட்டி வடிவம் 3/4 பங்கு வலிமை.

மேல்தாடை யமதூதன் எனும் வலப்பல் வில்லு வடிவம் முழுப்பங்கு வலிமை.

குறிப்பு:-

1. நாலாவது பல் மட்டுமே ஒருவருக்கு பட்டிருப்பினும் அக்கடியினால் உண்டாகும் விஷம் அவரைக் கொல்லக்கூடும் என அறிக.
2. கடிபட்ட இடத்தில் விபூதி அல்லது முகப்பவுடர் போன்றவற்றைப் பூசி உற்று நோக்கினால் வடிவம் தெரியும்

## தூதன் வரவும் வடிவமும்:-

இராகுகால நிலையில் பதறியாவது, பதறாமலாவது வந்து, நல்ல இடத்தில் நின்று, நல்ல முறையாகச் சொன்னபோதும் அது தீமையே குறிக்கும். ஆகவே இராகு காலத்தில் வந்து சொன்னவுடன் கடியுண்டவருக்கு கூடாதென உணரவும். சிவந்த பூவைச் சூடிவருவதாலும், கறுப்பு அல்லது சிவப்பு அல்லது இரண்டும் கலந்த நிறமுடைய ஆடை உடுத்து வருவதாலும், கையில் தடி ஊன்றி வருவதாலும், கொலை, ஆயுதம் எவற்றையேனும் கையில் கொண்டு வருவதாலும், கண்ணீர் சோர நிற்பதாலும், வாய் குளறிச் கையை விரித்து நின்று சொல்லலும், வந்தவர் துணியிலாயினும், விறகிலாயினும் சார்ந்து நின்று சொல்லுதலும், வானத்தைப்பார்த்துச் சொல்லுதலும், மண்ணைக்



காலால் கீறிக்கொண்டு சொல்லுதலும், தலையில் கையை வைத்துக்கொண்டு வருதலும், ஏங்கிப்புலம்பி அழுது விழுந்து சொல்லுதலும்,ஆடையை உடலில் சுற்றிக்கொண்டு வருதலும், தலையில் மிகுதியாக எண்ணெய் இட்டு வருதலும், கொடிய பாம்பின் பெயரையேனும் அதனால் கடியுண்டவர் பெயரையேனும் தொடக்கத்திலே கூறலும், பெரு மூச்சுவிடலும், முரிமுரித்துக் கொட்டாவி விட்டுக்கொண்டு சொல்லுதலும், தடுமாற்றம் அடைதலும், தலைமயிரை கையினால் கோதிக்கொண்டு கூறலும், வந்தவன் உயர் இடத்தில் ஏறி நின்று கூறலும், கடினவிஷத்தால் கடிபட்டவர் தானே தனித்து வந்து கூறலும், மொட்டைத்தலையன், பிராமணன், கால் கை கரிபட்டோன், மூக்கு காது அறுபட்டோன், ஒற்றை விழி மறைபட்டோன், பூனைக்கண்ணன் இவர்கள் வந்து கூறினாலும் கடிபட்டவர் இறந்து விடுவர் என்றும் அறிக.

## திக்கு ஆருடம்:-

தூதன் 1ஆம் இடமான அருக்கன் நிற்கும் ஸ்தானத்தில் நின்று கூறினால் நாகம், 2இல் தேள், 3இல் வழலை, 4இல் நீர்ப்பாம்பு, 5-அரணை, 6-எலி, 7-மண்டெலி, 8-சாரை, 9-மாநாகம், 10-எறும்பு, 11-மயக்கரா, 12-வண்டு, 13-செய்யான், 14-பூரான், 15-விரியன், 16-சிலந்தி இவற்றின் இனங்கள் தீண்டிணதன்று அறிக. இது நிச்சயகுறி.

## திக்குகள் 16ஆவன:-

கிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு என்னும் 8ம் இவற்றின் இடை 8ம் சேர்த்து 16 திசைகளாகும்.

## அருக்கன்நிலை:-

சனி பகல் கிழக்கிலும், சனி இரவும் ஞாயிறு பகலிலும் தெற்கிலும், ஞாயிறு இரவும் திங்கள் முழுவதிலும் தென்மேற்கிலும், செவ்வாய் இரவு 10 மணி வரையும் மேற்கிலும், செவ்வாய் இரவு 10 மணியின் மேலும் புதன் பகலிலும் வடமேற்கிலும், புதன் இரவிலும் வியாழன் இரவு 10 மணி வரையும் வடக்கிலும், வியாழன் இரவு 10 மணியின் மேலும் வெள்ளி முழுவதிலும் வடகிழக்கிலும் அருக்கன் நிற்கும்.

## தூதன் நிலை:-

வந்த தூதன் முகத்தையும் மூக்கையும் தொட்டால் நல்ல பாம்பு, கையைத் தொட்டால் வழலை, நெஞ்சைத் தொட்டால் விரியன் சந்துகளைத் தொட்டால் மண்டெலி, இரு முழங்காலும் புடையன், அதன் கீழ் தொடில் சிலந்தி.

## ஆண், பெண், திசை முதலியன அறிய:-

கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு எனும் 4 திசைகளிலும் வந்தோர் சொன்னால் ஆணைத் தீண்டியதென்றும், வடகிழக்கு, தென்கிழக்கு தென்மேற்கு எனும் 3 திசைகளிலும் நின்றோர் சொன்னால் பெண்ணைத் தீண்டியதென்றும், வடமேற்கில் நின்று சொன்னால் ஆடு, மாடு முதலிய மிருகங்களைத் தீண்டின தென்றும் அறிந்து கூறுக.

## மணத்தினால் விஷம் அறிய:-

நல்ல பாம்பு கடித்தால் தாழம்பூவும்,வழலை கடித்தால் பாதிரிப்பூவும், விரியன் கடித்தால் புளியம்பழமும், மண்டெலி கடித்தால் மல்லிகைப்பூவும், சிறு விஷங்கள் கடித்தால் மிளகு,சுக்கு இவையும் ஒரு விஷமும் கடிக்க வில்லையானால் பனம்பழமும் மணக்கும் என்பதை அறிந்து கூறுக.

## சோதனைவேர்:-

ஆடுதின்னாப்பாலை வேரை விஷமுண்டவனிடம் மென்று தின்னும்படி கொடுத்துச்சுவையை அறியவும். இனித்தால் நாகபாம்பு, புளித்தால் வழலை, துவாத்தால் வீரியன், கார்ப்பாயிருந்தால் மயக்கரா, உவர்த்தல் புடையன், உறைத்தால் மண்டெலி, நாக்கில் கடுப்பு உண்டானால் நெடுமூக்கன் என அறியவும்.

### குறிப்பு:-

16 திசைகளையும் கொண்டு அருக்கன் நிலைக்கு ஏற்ப இன்ன விஷம் என அறிவது சரியாகவே அமையும். அக்குறியை அவதானிக்க தவறி விட்டால் சோதனை வேர் முதலியவற்றின் உதவி தேவையாகும்.



## நித்திரைக்குறி:-

தூதன் வந்து சொன்னபோது வைத்தியன் நித்திரையாய்க் கிடக்கையில் வலப்பக்கம் கீழாகில் அற்பவிஷம், இடப்பக்கம் கீழானால் விஷமில்லை. மல்லாந்து கிடந்தால் விஷமுண்டு. குப்பிறக்கிடந்தால் காலக்கடி என்பர்.

## வைத்தியன் போகும் போது சகுனம்:-

மொட்டைத்தலையன், விரிதலையன், தவசி, சந்நியாசி, பிராமணன், கைம்பெண், மூக்கறை, ஊமை, குருடு, எண்ணெய்க்காரர், அம்பட்டன், கெட்டநோயாளன், சிவந்தபூ அல்லது ஆடைஉடுத்தவர், ஒற்றைக்கண்ணர், செல்லும் போது தடைசெய்தாலும் விஷமுண்டவர் இறப்பர்.

## விஷமேறும் வகையும் காலமும்:-

விடிந்து உச்சி மத்தியானத்திற்குள் சூத்திரபாம்பு தீண்டினால் அந்த விஷம் தோலைப்பற்றி விரைவாய் ஏறும். உச்சிப்பொழுதிலிருந்து அஸ்தமனம் வரையில் வைசியப்பாம்பு தீண்டினால் அவ்விஷம் தோலையும் தசையையும் பற்றிக் கடிதாய் ஏறும். மாலை தொடங்கி நடுச்சாமம் வரை அரசநாகம் தீண்டினால் அவ்விஷம் எலும்பைப்பற்றி விரைவாய் ஏறும். நடுச்சாமம் முதல் விடிவதற்குள் பிராமணசாதிப்பாம்பு தீண்டினால் அவ்விஷம் மூளையைப்பற்றி விரைவாக ஏறும். குறித்த நேரத்தில் குறித்த இனம் தவிர்ந்த வேறு பாம்புகள் தீண்டினால் அவ்விஷம் விரைவாக ஏறாது. அல்லாமலும் வேகம் போடுதலும், அடக்க நிலைக்கு போதலும் அதிவிரைவில் நிகழாமல் மெல்ல மெல்லவே நிகழும். எனவே வைத்தியம் செய்தல் இலகுவாகும்.

## வேகக்குறி:-

வேகம் என்றால் கடுமை, கதி, கோபம், சினம், தீவிரம், சுழற்சி என்பன பொருள். ஆனால் இங்கே உள்ள கடிவாயின் மூலம் உள்ளே சென்ற விஷத்தின் ஒரு பகுதி இரத்த்துடன் கலந்து ஒரு முறை இரத்தாசயத்துக்குச் சென்று மீளும் கால எல்லையாம். அதாவது ஒரு இரத்தச்சுற்றோட்டக் காலமாகும்.

இது 3வகை.

1. வாயுவேகம்- 8முறை 1வேகம் 50வினாடிக்கு 1 சுழல்
2. வருணவேகம்-10முறை 1வேகம் 27வினாடிக்கு 1சுழல்
3. தேயுவேகம்-10முறை 1வேகம் 98வினாடி 1சுழல்

கடியுண்டதிலிருந்து 50,27,98 வினாடிகளுக்கு முன்பு விஷம் இரத்தத்துடன் கலப்பதில்லையென்று திடமாயறிக.

**வேகம் போட்டதன் குறிகுணங்கள்**

| வாயுவேகம் | வருணவேகம் | தேயுவேகம் |
|---|---|---|
| வியர்வை அரும்பும் வெதுப்பு உண்டாகும் | மயிர்கூச்சாதி உடல் சிவக்கும் உடல்கருவாய் உலர்ந்துவெதும்பும் | பார்வைசிந்தும் முகம் கருகும் மூத்திரம் கடுத்து இறங்கி முகம் வெளுத்துமயிர் சிலிர்க்கும் |
| கண்ஏறிச் சொருகும் | உள்மயங்கும் | வாய் குன்றி உடல் நொந்து விழும் |
| சத்திஎடுக்கும் | சிலேற்பனம்மிகும் | குடல் இரைந்து சோகமாய்நாசியில் நீர்வடிந்துஉடல் மாறும். |
| கோழை கண்ணும்உடலும் அடங்கும் | தலைநடுங்கி | |
| அறிவு குறையும் உடல்விறைக்கும் | அறிவுஅழியும் கண்விழித்து மேல் நோக்கும் உடல்விறைக்கும் | வெளுத்துநடுங்கும் பல்கிட்டிவிறைத்தல் உடல்பதைக்கும் சொல்தடுமாறி நாவிழும் |



## அடக்கக் குறி உயிர்:-

உயிர் அடங்கியிருக்கும் போது கண்விழி மேல் நோக்கில் உயிரும் மேல் நோக்கும். அதாவது கண்டத்தின் மேலே உயிர் அடங்கியது என அறிக. விழி கீழ்நோக்கினால் உயிர் கீழ்நோக்கும் அதாவது வயிற்றை நெஞ்சறை எங்கேனும் ஓரிடத்தில் உயிர் அடங்கியதென அறிக. விழி பக்கத்தில் நோக்கினால் உயிரும் பக்கத்தில் இருக்கும் என அறிக. விழி நேரே பார்த்தபடி இருக்குமானால் உயிர் உடம்பில் இல்லை என அறிக. இறந்ததென நிட்சயிக்கலாம்.

## அடக்கம் அறிய வேறு பரீட்சை:-

உடம்பில் பிரம்பினால் அடித்தால் தேகம் தடிக்குமாயினும், வெதும்பிச் சிவக்குமாயினும், குடத்துடன் தண்ணீர் ஊற்றினால் மயிர் சிலிர்க்குமாயினும், கைவிரல்களில் நெட்டி உடையினும், பெலத்திழுத்தால் தலைமயிர் வலிந்து வராமல் இருப்பினும்,சிறிது கீறினால் செவ்விரத்தம் வருமாயினும், நவதாதில் ஒன்று நடக்குமாயின் ஆவி உள்ளே அடங்கியிருக்கிறது என அறிக. நவதாது என்பது கண் 2, காது 2, மூக்குத்துவாரம் 2, வாய் 1, மலவழி 1, சலவழி 1

**குறிப்பு:-** விஷம் முதிர்ந்து ஒருவருக்கு அடக்கமான பின்னர் 5 மணித்தியாலம், 12 நிமிடம் வரையில்தான் உயிர் அடங்கியிருக்க முடியும். அதன் பின் மருந்து, மந்திரங்களினால் பயனில்லை.

## விஷம் கடிப்பதற்கான காரணம்:-

ஆகாரத்தின் நிமித்தம், பயம், கோபம், வைராக்கியம், சாபம், ஏவல், ஜென்மபகை, தெய்வகதி, காலகதி, சுபாவகுரூரம், கோரையில் விஷமிகுதி, தன்னைமிதித்தல் ஆகிய காரணங்களால் சர்ப்பங்கடிக்கும்.

## விஷம் ஏறவில்லை என்பதற்கு அறிகுறி:-

கடிவாயைப் பற்றி விஷம் ஏறியதாய் இருந்தால் அந்த இடத்தில் நோவும், தினவும், எரிச்சலும், வீக்கமும் உண்டாகும்.

இக்குணங்களில் ஒன்றேனும் இல்லாதிருந்தால் விஷம் இல்லை என்றே நிதானிக்கவும்.

## விஷம் ஏறிய குறி:-

சர்ப்பம் கடித்த உடன் கசப்பு பொருட்களைத் தின்றால் சுவை மாறுபடல். விரல்களில், நகங்களில் கிள்ளினால், தலை மயிரை இழுத்தால் நோ தெரியாமை. காதை மூடினால் நோ தெரியாமை. காதை மூடினால் இரைச்சல் தெரியாமை, சந்திர, சூரிய அக்கினி, விளக்கு இவற்றின் சுய ஒளி தெரியாமை ஆகிய இக்குணங்கள் இருந்தால் விஷம் தலைக்கேறிற்று என நிதானித்துச் சகல சிகிச்சைகளையும் தாமதியாமல் உடனே செய்க.

## கடிவாய் நிற நிதானம்:-

பாம்பின் கடிபட்ட இடம் கறுப்பு நிறமாகவும், கனிந்த நாவற்பழ நிறமாகவும் இருந்தால் அவ்விஷம் மகாகொடிதென அறிக.

## வேகக்குறிப்பு பற்றிய சிறப்புவிதி:-

வேகங்கள் வாயு, வருணை, தேயு என மூவகைப்படும். அவற்றுள் ஒருவருக்கு இருப்பது எந்தவேகம் என வைத்தியர்கள் கூறும் நாடிசாஸ்திர அறிவுமிக்கோரே அறிய முடியும் அன்றி நாடி சாத்திர அறிவின்மையோர் அறியமுடியாது. எனவே இதனை அறியும் முறை பின்வருமாறு

வாத, பித்த, சிலேற்பன நாடிகள் உண்டு. ஒருவருக்கு நாடி பார்க்கும் போது பெருவிரலை இழுத்து நெட்டி உடையச்செய்து பெருவிரல் அடியில் இருந்து (அதாவது உள்ளங்கை முடிவும் மணிக்கட்டும் சந்திக்கும் இடம்) ஒரு விரற்கிடை தள்ளி நடுவிரல் மூன்றினாலும் அழுத்தி நாடியின் அசைவு பார்த்தறியலாம். நோயாளியின் இடக்கையை நமது வலக்கை நடுவிரல் மூன்றினாலும் வலக்கையை நமது இடக்கை நடுவிரல் மூன்றினாலும் நாடிபார்த்தல் வேண்டும். ஆண்களில் வலக்கையிலும், பெண்களின் இடக்கையிலும் நாடி அசைவு



நன்கு தெரிதல் இயல்பு. சுட்டுவிரலின் கீழ் வாதமும், நடுவிரலின் கீழ் பித்தமும், மோதிரவிரலின் கீழ் சிலேற்பனமும் துடிப்பது தெரியும். இம்மூன்றுள்ளும் எந்த நாடியின் அசைவு பலமாக அடிக்கிறதென அவதானிக்கவும். வாயு என்பது வாதம்,அக்கினி (தேயு) என்பது பித்தம், வருணன் (நீர்) என்பது கபம் என அறிக.

வாதநாடி பலமாக அடித்தால் வாயுவேகம் ஏறியதென்றும், பித்த நாடி பலமாக அடித்தால் தேயு வேகம் உண்டெனவென்றும், சிலேற்பன நாடி பலமாக அடித்தால் வருணவேகம் ஆகும்.

## கைவிரல் மூலம் கடிவிஷம் அறிதல்:-

வந்த தூதனின் கையை பொத்தும்படி கூறி அதில் ஏதாவது ஒரு விரலை மற்றய கையால் தொடும்படி கூறி அறிக

சிறுவிரல் - நாகம்
மோதிரவிரல் - சுருட்டை
நடுவிரல் - விஷமில்லை
சுட்டுவிரல் - வழலை
பெருவிரல் - புடையன் என அறிக.

## வழிச்சர்ப்பம்:-

இது எப்போதும் கடிப்பதற்கே வழி காட்டிக் கொண்டிருக்கும். இது கடித்தால் மரணக்குறிகள் சீக்கிரம் உண்டாகும். இந்த விஷம் மணி, மந்திர ஔடதத்தால் நீங்கும்.

## மண்ணுள்ளிப்பாம்பு:-

செவியில் நுழைந்தால் அபாயமுண்டு. இதன் கடியால் சிறுதடிப்பும், நமைச்சலும் உண்டாகும்.

## காலியாங்குட்டி:-

இது வேளான் குட்டி, வயற்கோவியன் என்ற பெயர்களால் கூறுவர். இது கடிப்பதில்லை. கடித்தால் பெருஞ்சிகிச்சையினாலும் தீராது.

## வெண்ணாத்திப்பாம்பு:

பெரிய உருவமுடையது. இதனை மலைப்பாம்பு, தாசரிப்பாம்பு, கட்டுவிரியன், ராசமந்தசர்ப்பம், வெங்கிடாந்திப்பாம்பு என்றெல்லாம் கூறுவர். மிருகங்களையும், மனிதர்களையும் பின்புற காலில் பிடித்து விழுத்தி நன்கு களைப்படையச்செய்து முழுப்படியாக விழுங்கும். இதனிடம் அகப்பட்டால் அஞ்சவேண்டியதில்லை. கூரிய கத்தியினால் இரு கடைவாயையும் அறுத்து விட்டு ஏறிய பல்லைக் கழட்டிவிட்டால் பாம்பு இறந்து விடும். இதன் பல்லில் விஷமில்லை.

## விஷம் விருத்தியாதல்:-

சர்ப்பக்கடியினால் அற்ப விஷம் ஏறியிருந்தாலும் அது பசி, தாகம், தூக்கம், பயம், கோபம், மிகுந்த நகைப்பு, அக்கினி தொழிலிருத்தல், சூடான நிலத்தில் படுத்தல், கீழ்க்காற்றில் திரிதல், இரட்டை அலரிப்பூவை முகருதல், பேதி, அஜீரணம், பெலவீனம்,சம்போகம் செய்தல் இவற்றால் மகாவிஷம் அதிகரிக்கும்.

## பயத்தினால் உண்டான விஷசிகிச்சை:-

பாம்பைச் சடுதியிற் கண்டு வாய் குளறி நடுங்கி மூர்ச்சித்து விழுந்தாலும், பாம்பை வைக்கோற்புரி என்றோ, கயிறு என்றோ அல்லது வேறு எதுவென்றோ கையினால் தொட்டு பின்பு பாம்பு என்று அறிந்து திகிலடைந்தாலும் அவர்களுக்கு வாதம் அதிகரிக்கும். இதனால் பொறிகலங்குதல், நாவரளல், மூர்ச்சை, சரீரம் முழுவதும் குத்து நோவெடுத்தல், தாகம், சுரம், இளைப்பு, பேதி, வாந்தி, சோர்வு எனும் குணங்கள் உண்டாகும். இது தந்திர சிகிச்சையினால் தீரும்.

## பாம்புகளுக்கு விஷமுண்டாவது:-

எந்தப்பாம்பாவது முட்டையில் இருந்து சனித்த 27 நாட்களுக்குள் விஷமில்லை. 27 ஆம் நாளின் பின் அவற்றின் பல்லடியில் உள்ள விஷம் சுரக்கிறது.



## திரட்டு பாகம்


இது வரை நிதானமும், நிதானத்திற்கு உதவியான விடயங்களும் கூறப்பட்டுள்ளன. ஒருவருக்கு விஷம் தீண்டியதென யாராவது வந்து கூறினால் அதே நேரத்திற்குரிய அருக்கன் நிலையெனவும், கூறியவர் எத்தனையாம் இடத்தில் நின்றார் எனவும் விரைவில் அவதானித்து என்ன விஷசந்து என அறியவும். வந்தவர் கூறிய முதலெழுத்து, முதல் வசனம் என்பவற்றை அவதானித்து திசையையும் பொருந்த வைத்து பற்கணக்கையறியவும். கடினவிஷமுள்ள சந்துவும், பல் அதிகமுமானால் வந்தவர் தோற்றம், தொடுகுறி என்பவற்றுடன் வாரம், திதி, நட்சத்திரம், ஜென்மநாள், இராகு காலம், குளிர்காலம், அவயவம், இடம் என்பவற்றையும் அறிந்து கொள்ளலாம். இவை ஆரம்பத்தில் பெரியவிடயமாயினும் அனுபவமும், நாளாந்த பயிற்சியிலும் 2-3 நிமிடங்களில் அறிந்து திடப்படுத்தி கொள்ளலாம்.

விஷவைத்தியன் கடியுண்டவர் பெயரையும், கடிபட்ட இடத்தையும் அறிந்தவுடன் அதேயிடத்திலிருந்து கடியுண்ட விஷம் மேலும் ஏறாதிருக்கும் பொருட்டு மந்திரத்தை மனதில் செபிக்க வேண்டும். பின் மருந்து செய்தல் வேண்டும். நோயாளிக்கு மந்திரத்தால் விஷம் ஏறாதபடி தவணை போட்டிருந்தால் அதற்குரிய மந்திரஞ்செபித்துவிட்டு விஷமிறக்க வேண்டும். விஷம் கடிவாய்க்கு இறங்கி விட்டால் அதன் மேல் எங்கும் அசையாதபடி தவணை போடவேண்டும். அதன்பின் கல் வைத்து விஷத்துக்கு ஏற்றபடி நசியம், அஞ்சணம் என்பனவே முதலிற் செய்து அறிவுண்டாகச் செய்து பின் விஷமிறக்க வேண்டும்.

## மந்திரம்:-

மந்திரத்தில் பலரும் பல வகையான அர்த்தம் கொள்வதுண்டு. ஆனால் விஷவைத்தியத்தில் காப்பாற்றுவது என்று பொருள் கொள்ள வேண்டும். மந்திரம் படிக்கவும் அதனால் தொழில் புரியவும் தகுதியுள்ளவர்கள் தீட்சைபெற்றவர்கள் மட்டுமே எனவும் ஏனையோர் அப்படிச்செய்வது பாபமென்று இந்து மதாச்சாரியர் சிலர் கூறுவர். பிறஉயிரை காப்பாற்றவும் தன்னைக்

## கெருட பஞ்சாட்சர அட்சரம்




காப்பாற்றவும் கடவுளை அறிந்து அடையவும் எவர் அபேட்சை யுடையவரோ அவருக்கு மந்திரம் முதலியவைகளை அறியச் செய்தலும் கடவுளுக்கு விரோதமான காரியமில்லை. மறைத்து வைத்தலும் , அப்படிச்செய்யாது தடுத்து வைத்தலுமே கடவுளுக்கு மாறான கொள்கையுமாகும். விஷக்கடி ஏற்பட்ட விடத்து எந்த வேறுபாடும் கருதாது எச்சமயத்தவருக்கும் சென்று மநதிரம் செபித்து மருந்தும் கொடுத்தல் வேண்டும். மந்திரத்தை எவருக்கும் சொல்லிக் கொடுக்கலாம். இதனால் பலிக்காது என்பதெல்லாம் விதண்டாவாதமான கருத்துக்கள். 'மந்திரம் கால், மதி முக்கால்' என்பதை மனதிற் கொண்டு புத்திபூர்வமாக அந்தந்த நேரத்துக்கு தக்கது போன்று சமயோசிதமாக நடந்து நம்பிக்கையுடன் முறைப்படி செய்ய மந்திரம், மருந்து என்பன எல்லோருக்கும் பலிக்கும்.

இந்த பஞ்சாட்சரத்தை மேற்கூறியபடி தாவித்து அபிஷேகம் பண்ணி பிள்ளையார் கும்பத்தில் வைப்பித்தல் (தலைவாழையில் அரிசி பரவி கும்பம் வைத்தல்).

## கெருடபஞ்சாட்சர மந்திரம்:

அரியோம் அங் உங்றீங் கெருடாய மசி நசி சுவாகா.

## விஷக்கடிக்கு பார்வை:

ஓம் கெருடா பஞ்சாட்சரக் கெருடா, ஓம் ஆதிமூலப் பொருள் ஏறிய ஆதி கெருடா வா, வா. அண்டம் பிளக்க மூலம் கொண்டு அடியேனைப் பற்றிவரவா. ஒரு கையில் சூலமும் ஒரு கையில் ச்ச் செண்டும் பிடித்து ஈஸ்வரனாகும் எம் பெருமானும்



என்னருகில் இருத்தி உன்னை நினைத்து வலக்கையில் குளையெடுக்க முளைபுகுந்து முழுவிஷமும் மசிநசி மாங்கிஷம் புகுந்த பல விஷமும் மசிநசி கண்ணில் நின்ற கருவிஷமும் மசிநசி, தோலில் நின்ற தோல் விஷமும் மசிநசி சீச்சீ இறங்கு, இறங்கு நெஞ்சில் ஏறிய நெடுவிஷமும் மசிநசி வயிற்றில் நின்ற வல் விஷமும் மசிநசி அரையில் நின்ற அரை விஷம் மசிநசி, கண்ணில் நின்ற கண்விஷமும் மசிநசி சீச்சீ இறங்கு இறங்கு சிவகா.

## தேள் கடிப்பார்வை:

ஓம் கொட்டிய தேளே கொடு விடத்தேளே கொடுக்கு முள்ளால் கடிவிடுவதேனே. நெட்ட நெடும்பனை ஏறிய தேளே நீல விடத்தை இறக்கிடுதேளே. குட்டைத்தேளே, கூர் கடுந்தேளே கொடுக்காலிரண்டும் சிவந்திடுதேளே நட்டுவக்காலி ஆகிய தேளே நானாவிதமாகிய தேளே பருத்த தேளே பருமணித்தேளே
சிறுத்ததேளே சிறுமணித்தேளே ஒருத்தர் பனை ஏறி இறங்கினாப் போலே உடல் விட்டிறங்கிடு வருத்தப்படுத்தாதே மசிநசி திருந்துடிந்திரம் மசிநசி மசிநசி தீர்தீர் தீர் மசிநசி சுவாகா.

குறிப்பு:-

மேற்கூறப்பட்ட முறை சித்தஆயுர்வேத விஷக்கடி வைத்தியர் த. சண்முகம் துரைவீதி, தாவடி வடக்கு, தாவடி அவர்களின் பரம்பரை வைத்தியமுறையாகும். இவ்வைத்திய முறைகளைத் புத்தகவடிவில் தொகுப்பதற்கு தந்து உதவிய இவ்வைத்திய பெருந்தகைக்கு சித்த வைத்திய சமூகம் என்றும் தலைவணங்குகின்றது.

## விருசஷகன், சேடன் விடமிறங்க

மேற்கூறிய சக்கரத்தை காரீயத் தகட்டில் எழுதி சக்திபூசையில் வைத்து பூசைமுடித்து பதனம் செய்து கொண்டு விஷமேறியவர் வந்தால் தாயத்தை வலக்கரத்தில் அணிந்து கீழ்க்கண்ட மூலமந்திரத்தை 1008 உருவு செபிக்கவும்

ஓம் விநாயகர் பாதத்தாணை யிறங்கு
ஓம் சுப்பிரமண்யர் பாதத்தாணை யிறங்கு
ஓம் சக்தி பாதத்தாணை யிறங்கு
ஓம் ஈஸ்வரர் பாதத்தாணை யிறங்கு
ஓம் உமாபார்வதி பாதத்தாணை யிறங்கு
ஓம் ஸ்ரீம் அஞ்சனாதேவி பாதத்தாணை யிறங்கு
ஓம் ஸ்ரீம் வாயர்த்திரர் பாதத்தாணை யிறங்கு
ஓம் ஸ்ரீம் ஆஞ்சநேய பாதத்தாணை யிறங்கு
ஓம் ஆணை ஆணை யிறங்கு யிறங்கு.

இதனால் சர்ப்பம் தேள், பூரான், செய்யான் முதலிய விஷங்கள் இறங்கி விடும்.

## மந்திரம் செபிக்கும் முறைகள்:-

1. பலத்த சத்தத்துடன் எல்லோருக்கும்கேட்கசெபித்தல்
2. பக்கத்தில் இருப்பவருக்கு மட்டும் கேட்க செபித்தல்
3. எவருக்கும் கேளாதபடி மனதினுட் செபித்தல்

மௌன செபம் பூரணபலிதமாகும்.

மந்திரப்பயிற்சி தொடங்குவோர் எந்த சமயத்தவராயினும் சரி தாம் வழிபடும் கடவுளை பூரண சித்த சுத்தியுடன் வணங்கிக் கொண்டு, தேகமும் மனமும் சுத்தமுடையவர்களாய் இருந்து கொண்டு தொடங்க வேண்டும். புலனை வெளியே விடலாகாது. கண்களை மூடிக்கொள்வது புலனை ஓரளவு அடக்குவதாகும்.

**பின்வரும் விஷமந்திரங்கள் அனைத்தும் விஷ வைத்தியம் செய்வதற்கு மிக அவசியமாகும். எல்லா மந்திரங்களையும் நன்கு மனப்பாடம் செய்து வைத்திருத்தல் மிக அவசியமாகும்.**

## 1. சித்து மந்திரம்:-

ஓம் ஆதிமாமுனி முன்னிற்கப் பூமியைப் பீடமாகக் கொண்டேன். ஈரேழு பதினாறு லோகமும் படைக்க அழிக்கப்படாது



நின்ற விகடதடகற்பகவீரன் என்போர் வேதவியாதரர் ஆகம சாஸ்திரப் பல புராணமும் ஒன்பது நவக்கிரகமும் இருபத்தேழு நட்சத்திரமும் சரிவரக் கொண்டேன். இரு பலபுஜபரமேஸ்பரன் பாதத்தைப் படைத்த மருந்து மந்திரம் சித்திக்கப் பலிக்க வேண்டுமென்று விடைகேட்டேன்.. எனக்கு விடை தந்தார் நானும் வாங்கித் தியானிக்கின்றேன். சித்திக்கப் பலிக்கவே சிவாகா. தினமும் ஸ்தானஞ் செய்து தோய்த்துலர்ந்த ஆடை தரித்துப் பரிசுத்த மனதுடன் தனிமையான ஓரிடத்திலிருந்து கண்ணை மூடிக்கொண்டு இம்மந்திரத்தை 108 முறைக்கு மேல் மனதுட் செபிக்கவும். இப்படி நாள் தோறும் அதிகாலையிலும் மாலையிலும் செபித்து வந்தால் 11 நாட்களால் எந்த மந்திரமும் சித்திக்கக்கூடிய நிலை வந்தடையும்.

## 2. வீட்டில் நின்று செபிக்க:-

ஓம் பிரத்தி சுக்கிரன் சேலம் முதம ஏறி கயிரைவ நாரணன் படுகிரி பொழுது சக்கரம்பட்டு பாம்பின் தலையற்று விழுந்ததாக ஏறிப் பட்சிராசாபடு படுவிஷம் அங்கிஷமே. தூதன் வந்து சொல்லியவுடன் விஷங்கடியுண்டவருக்கு இனிமேல் விஷமேறாதிருக்க வேண்டுமென்று நினைத்து இம்மந்திரம் தன் மனதினுள்ளே செபிக்க வேண்டும். ஒரு முறை போதியது.

## 3. வீட்டால் புறப்படும்போது செப்பியது:-

ஓம் தேவம் தே சுவாகா என்று செபித்துக்கொண்டு போகவும்.

## 4. தவணை முறிக்க:-

ஓம் முட்டிவிட்டது மூலப் பொரும் வயல் கட்டி விட்டது. ஆயர் தம் பாதம் நட்டமிரண்டும் நமசிவாயமென அனந்தலே அகர விஷம் பிரளப் பிரள நசி நசி வயிரவா நசி வேறு யாரேனும் நாம் விஷம் கடியுண்டவரிடம் போவதன் முன்னால் விஷமேறாதிருக்கும்படி தவணை போட்டிருந்தால் இம் மந்திரம் சொல்லி அவ்விடத்தை தடவிவிடவும். பின்னர் தான் விஷமிறக்க வேண்டும்.

## 5. தவணை போட:-

ஓம் ஆலகாலவிஷத்தை அரன் **அள்ளி உண்டபோது** ஏலமென்னுங் குழல்மடவார் ஈசுபரியினாற் இடக்கையி**னாற் பிடித்த** பிடி இங்ஙனமே நிற்க நிற்கவே சிவாகா.மூன்று **வட்டமாகத்** திருநீற்றினாலேனும் சுண்ணாம்பினாலேனும் தவணையிடவும்.

## 6. தன்கடித்தவணை:-

ஓம் கடித்தது சக்தி கடிபட்டது சிவம் கடிபட்டவாய் யோனி ஏற்றிய பல்லிங்கம் ஏறின விஷம் சுக்கிலம் ஆம் என்றடிக்கத் தம் தத்த விஷம் நசி. என்று முன்போல் தவணையிடவும். திருநீறு, சுண்ணாம்பு ஆகியன கிடையாவிடின் நூல், கயிறு, தும்பு, மண் ஏதேனும் ஒன்றை உபயோகிக்கவும்.

## 7. விஷமிறக்க மந்திரம்:-

ஓம் திருப்பரமேஸ்வரனும் திருப்பரமேஸ்வரியும் திருவேட்டையாடப் போகும்போது திருப்பரமேஸ்வரிகழுத்திறகிடந்த ஆபரணம் அறுந்து முறிந்து தரையில் சிந்தினால் போல் என் சொல் மந்திரம் கண்டவுடனே இவர் சிரசிலிருக்கப்பட்ட விஷங்களும் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு நரம்பிலிருக்கப்பட்ட விஷங்களும் உன்னையும் என்னையும் படைத்த ஆதிபரமேஸ்பரனானை நஞ்சி பிஞ்சு நாசமாய்ப்போகவே சிவாகா. உலையிலிட்ட மெழுகுபோல இவர் உடலிருக்கப்பட்ட விஷங்களை எல்லாம் உருகவடித்து குழலட்டைபாலிறங்கி உள்ளங்காலாலிறங்கிப் பூமியிற் குதித்தப் பூந்திறங்கிப் போகவே சிவாகா. விபூதியில் அட்சரம் கீறி இம் மந்திரம் செபம்பண்ணி விஷம் இறக்கவும். (அட்சரம் என்பது முக்கோணம் கீறி முனைகளில் சூலமிட்டு முக்கோணத்தினுள் பிரணவமெழுதி கீழாக இழுத்து திரும்ப மேல் நோக்கிச் சூலம் போடவும். இதனை அறிந்தவரிடம் அறிக).

## 8. அமிர்த பார்வை குழையடி:-

ஓம் மந்திரமாலை மத்தாகவும் மாநாகம் கயிறாகவும் இந்திரனே தூணாகவும் இறைவனே சாட்சியாகவும்



தெய்வலோகத்தில் தெய்வ இருஷிகள் ஒரு புறமாகவும் வாலி ஒரு புறமாகவும் இருந்து அமிர்தம் கடைந்த காலத்தில் உகாந்திரப் பெருவெள்ளம் சேர்ந்து வருகுது ஏதடா, ஏதடா நபாய் நபாயநயந்தே வார்தனிற் கொதித்தெழுந்து வருட கடல் நஞ்சையெல்லாம் வாரியே கொடுங்கையால் அடக்கியே உண்டபோது அரிகண்டத்தில் இல்லையே விஷம் ஆதிகாலத்தில் இல்லையே இல்லையே விஷம் ஆதிமோகத்தில் இல்லையே விஷம் அங்கும் இல்லையே விஷம் இங்கும் இல்லையே விஷம் நகி, நகி அங்கிஷாயா நகி அன்று தூணிலே சிங்கமாய் நின்றா இரணியன் குடலைப் பிடுங்குவேனென்று நின்றதாகிலும் இடந்து போடுவேன் பேச்சி முலையுண்ட பெருமாள் நானல்லவோ அமிர்தவாய்க் கொண்டு குமிர்தத்தையுண்கிறேன் நஞ்சி பிஞ்சி விஷம் நாசமாகவே சிவாகா - இம்மந்திரத்தினால் குழையடித்து விஷம் இறக்கலாம்.

## 9. கெருடபார்வை:-

ஓம் உச்சி நெருப்புத்தூண் கண்ணொரு சிங்கம் கழுத்தொரு கெருடன் கையொரு பருந்து முதுகொரு குரங்கு மார்பொரு பன்றி வயிறொரு நாவி முழங்கால் செண்பகம் கணைக்கால் கரடி முன்னாடி கீரி பின்னாடி மயிலடி முறித்தது கெருடன் பட்டது பாம்பு தீர்ந்தது விஷம். அதுகேட்டு நானுமோடி ஓடெடுத்து வாராநின்றேன். மலையிலும் பெரிய மகாபெருங் கெருடன் அவன் வந்த மாத்திரம் நான் வந்து நின்றேன் கடித்தாரைகடி மீட்டுந் தன் பாஷமற்று விட்டுப் பட்டு விஷம் தீர்ந்து விஷம் நாசமாகவே சிவாகா இம்மந்திரம் சொல்லிக் குழையடித்து விஷமிறக்கவும். கெருடபார்வை முறை இரவிற் பலிக்கமாட்டாது. ஆகையால் பகலில் மட்டுமே செய்யவும். அமிர்தபார்வை 100 நாட்கள் செபித்த பின்னரே சித்திக்கும். கெருடபார்வை 51 நாட்செபித்த பின்னரே சித்திக்கும் என அறிக.

## 10. விஷக்கல் ஓட்ட:-

ஓம், சாலா மாலா சங்ஙாரதேவி போமாம் லேக்கி மலக்கி கோ இக்காயில விபனா துபக்கி மமக்கி இம் மந்தகாளி வளக்காடு

சங்கிலியளடு மாறுமாருயா மாரணமாக ஓட்டி விஷம் சிவகா. விஷக்கல்லை நெருப்புத் தனலில் சூடுகாட்டி இரத்தம் பொசியக்கூடிய மாதிரிக்கீறி அந்த இடத்தில் கல்லை வைத்து இம்மந்திரம் செபிக்க ஓட்டும். தானாகக் கல் விழுந்து பின்னா் எடுத்தோர் நாள்முழுதும் பசுப்பாலுள் போட்டிருந்து பின் தண்ணீராற் கழுவிக் காயப்பண்ணி வைத்துக்கொள்ளவும்.

## 11. விஷமிறக்க:-

ஓம் பருவதம் பருவதத்தின் மேலே வெள்ளிமாமலை வெள்ளிமாமலையின் மேலே தங்கமாலை வாதராசனிருக்கும் ஆசனம் தங்கமாமலையாய் இருக்கும் நானிருக்கும் ஆசனம் பொன்னின் மாமலையாய் இருக்கும் என்கையிலிருக்கும் பாத்திரம் வாதரானுடைய வெண்சாமரையாயிருக்கும் ஓம் மாணிக்க மலையிற் பிறந்த விஷம். அகோரமா மலையிலிருந்து வனா்ந்தது விஷம். மருந்து மாமலையைக் கண்டு ஓடினாற்போலே என் சொல் மந்திரம் கேட்டவுடனே இவர் சிரசிலிருக்கப்பட்ட விஷங்களும் 4448 நரம்பிலிருக்கப்பட்ட விஷங்களும் உன்னையும் என்னையும படைத்த ஆதிபரமேஸ்பரனணை உள்ளங்காலா லிறக்கிப் பூமியிற் குதித்துப் பூந்திறங்கிப் போகவே சிவாகா. இம்மந்திரத்தால் குழையடித்து விஷமிறக்கவும்.

## 13. பாம்பு துரத்த:-

ஓம் பூமியெரியப் புனலெரிய புற்றிற் கிடந்த நாகமெரியத் தீண்டிய திரிபுரமெரிய திரிதரி முன்னால் முறித்ததொரு பாம்பு எரித்ததொரு கீரியின் தன்மைகொண்டு அறுந்து முறிந்து போகவே சிவாகா. ஓம் பாம்போடிய அறையைப் பழிங்கெனு மறைவாகக் கொண்டேன் பாம்பையும் பளிங்கி விடுமெழுகாகக் கொண்டேன் பாம்பெரியப் படமெரியப் படத்தில் வாழும் பேயெரிய முன்னெரியப் பின்னெரிய முப்புரமெரிய ஓடு ஓடு உங்கள் நயினார் உமைபாகராணை ஓடவே சிவாகா. மண் ஓதி எறியவும் ஓடிவிடும். கிரகணந் தீண்டுகிற வேளை முழுவதும் இம்மந்திரமோதி மண்ணையொரு பொட்டணமாகக் கட்டி வீட்டுக்குள் தூக்கினால் பாம்பு வராது.



## சிகிச்சை

விஷவைத்திய சிகிச்சையை இற்றைக்கு260 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் சுண்ணாகத்தில் வசித்த புலவர் சிகாமணி பிரம்மஸ்ரீ அ.வரதபண்டிதர் 32 பாக்களில் அமுதாகாரம் எனும் நூலாக எழுதியுள்ளார். இதைவிட திருகோணமலை வித்துவான் ஸ்ரீமான் சு. தம்பையா 1852 இல் அச்சுப்பிரதி ஒன்றை உருவாக்கினார். மட்டக்களப்பு ஆரம்பத்தை சி.பொ. த. கண்ணப்பர் (பரிகாரி கண்ணப்பர்) கைஎழுத்துப் பிரதியாக பயன்படுத்தியவை எல்லாம் அமுதாகாரம் எனும் நஞ்சுநூலாகும். ஆனால் இங்கு சிகிச்சை முறையில் இலகுவானதும் மூலிகைகளை தற்போது எடுக்க வசதியாகவுள்ளதுமான முருகேசு முதலியாரின் நஞ்சு முறிவு நூல் சிகிச்சை முறைகளே சேர்க்கப்பட்டுள்ளது.

### பாம்புக்கடி நஞ்சுதீா் கலிக்கம், நசியம்:-

**1. கலிக்கம்:**

தேவையான பொருட்கள்.

1. பெருங்காயம்
2. அரிதாரம்
3. வெங்காரம்
4. கந்தகம்
5. இந்துப்பு
6. வாலரசம்
7. கடுகு

செய்முறை: மேற்கூறப்பட்ட 7சரக்குகளையும் சம எடையாக எடுத்து இடித்து குழிக்கல்லில் இட்டு பேய்ப்பீர்க்கஞ்சாற்றால் அரைத்து அதில் 130 மி.கி. எடுத்து நஞ்சுற்றார் கண்களில் கலிக்கம் போடவேண்டும்.

**2. மூக்குத்துளி (நசியம்):**

தேவையான பொருட்கள்.

1. பெருங்காயம்
2. அரிதாரம்
3. வெங்காரம்
4. கந்தகம்
5. நேர்வாளம்
6. வசம்பு
7. வெள்ளைப்பூண்டு

ஏழு சரக்குகளையும் சரி எடைஎடுத்து

1. அவுரிச்சாறு
2. உத்தமாகாணிச்சாறு
3. குப்பைமேனிச்சாறு ஆகியவற்றால் **அரைத்து**

மாத்திரை செய்து ஒரு மாத்திரையை ஒரு மெல்லியதுணியில் முடிந்து சிறுநீரில் ஊற வைத்து அதை மூக்கில் பிழியவேண்டும். இப்படிச்செய்தால் மேற்படி நஞ்சுயிர்கள் கடிப்பதால் உண்டாகும் நஞ்சுகள் தீரும்.

## மூக்குப்பொடி (ஆக்கிராணம்)

தேவையான பொருட்கள்.

1. மூஞ்சூறு
2. பச்சைப்பாம்பு
3. வாழைத்தண்டு
4. இலுப்பைப்பழம்
5. காட்டாமணக்கிலை

மேற்கூறப்பட்டவற்றை சரி எடையாக எடுத்து உலர்த்திப் பொடியாக்கி மூக்கிற் குழை வைத்து அதில் அத்தூளையிட்டு ஊதினால் நஞ்சுயிர்க்கடியினால் உண்டாகும் வன்மையான நஞ்சுகள் நீங்கி அடங்கிப்போன உயிர் மீண்டும் வெளிப்படும்.

## ஒற்றடம்:-

தேவையான பொருட்கள்.

| | |
|---|---|
| 1. எருக்கு | 5. விளா |
| 2. எட்டி | 6. இலுப்பை |
| 3. புனுகு | 7. பெருமரம் |
| 4. அழிஞ்சில் | 8. பேய்க்கும்மட்டி |

மேற்கூறிய 8 பொருட்களையும் சரி எடை எடுத்துச் சிறுநீர் விட்டு இடித்து வறுத்தும் ஒற்றடம் போடவேண்டும். இவ்வாறு ஒற்றடம் போடுவதுடன் நசியமாகவும் துவாலையாகவும் கலிக்கமாகவும் கையாளலாம்.

### 1) ஆதளையாதி ஒற்றடம்:-

அவுரிவேர், செங்கத்தாரிவேர், வாகைவேர், ஆதளைவேர் (காட்டாமணக்கு), கற்றாளைவேர்



மேற்கூறிய 5 பொருட்களையும் சரியளவு எடுத்துக் காடி விட்டு இடித்து அதைச் சட்டியிலிட்டு வறுத்து அதை ஒரு துணியில் முடிந்து தலைமுதல் கால்வரை ஒற்றடம் போட பாம்பு நஞ்சுகள் தீரும்.

## வேளையாதி ஒற்றடம்:-

நல்வேளை வேர், குப்பைமேனிவேர், சுக்கு, முருங்கைவேர், ஊமத்தைவேர், எருக்கம்வேர், உத்தமாகாணிவேர்
மேற்கூறப்பட்ட 7 பொருட்களையும் சரி எடை எடுத்துச் சிறுநீர் விட்டு இடித்துச் சீலையில் முடிந்து தலை முதல் காலடி வரை ஒற்றடம் போட எல்லாவித நஞ்சுகளும் நீங்கும்.

உள்ளி, வசம்பு, வட்டத்துத்தி, ஊமத்தை, நறுந்தாளி, பலாசுவித்து ஆகியவற்றை சிறுநீரிட்டு இடித்துச் சட்டியிலிட்டு இளவறுவலாக வறுத்து ஒரு சீலையில் முடிந்து தலை முதல் காலடிவரை ஒற்றமிடலாம்.

## புகை:-

நஞ்சுடைய அரவத்தால் தீண்டப்பட்டு உடம்பில் நஞ்சு கலந்து விட்டால் சகாமல் தடுக்க இம்முறை கையாளப்படுகிறது. இரசம், கந்தகம், சூடம் (கற்பூரம்), காயம் ஆகியவற்றை சரியளவு எடுத்து இடித்து கல்வத்திலிட்டு எருக்கலம்பால் விட்டு அரைத்து ஒரு சீலையில் தடவி உலர்த்தி திரியாகத்திரித்துக் கொளுத்தி அதிலிருந்து வரும் புகையை மூக்கினுள் செல்லும்படி செய்தால் மேற்படி நஞ்சுயிர்களின் கடியால் வந்த விடம் போய்விடும். உயிர் தப்பாமல் மீண்டும் வந்து விடும்.

சிவன் இருநூறு எனும் நூலை மேற்கோள் காட்டி நஞ்சு முறிவுநூல் பக். 89 இல் பின்வரும் முறை கூறப்படுகிறது.

மிளகு, வசம்பு, வெள்ளைப்பூண்டு, சுக்கு, கற்பூரம், நவச்சாரம், மிளகாய், பழப்புளி. உப்பு.

மேற்கூறிய 9 பொருட்களையும் சரி எடை எடுத்து இடித்து குழிக்கல்லிட்டு கொடிக்கள்ளிப் பால் விட்டு ஒரு நாள்

அரைத்து ஒரு துணியைக் கொடிக்கள்ளிப்பாலில் தோய்த்து அச்சீலையில் முன்பாக அரைத்து வைத்திருக்கும் மருந்தை நீளமாய் வைத்து உருட்டி ஒரு முனையைக் கொளுத்தி அணைத்து அதிலிருந்து வரும் புகையை பிடிக்க விரைவில் அடங்கிப்போன உயிர் மறுபடியும் வெளிப்படும்.

## கவனிக்க வேண்டிய பத்தியவிதி:-

உப்பு, புளி, கடுகு, எண்ணெய் போன்ற கரப்பான் பொருட்களை நீக்க வேண்டும். பகலிலும் இரவிலிலும் தூங்கலாகாது.

## உணவு உண்ணும் முறை:-

பாலில் பச்சையரிசியும், பாசிப்பயறும் இட்டு காய்ச்சி சீனி சேர்த்துச் சாப்பிட வேண்டும். உப்பை நீக்க முடியாதவர்கள் இயங்கம் இலையையும் உப்பையும் சேர்த்து வறுத்து எடுத்த உப்பை சிறிதளவு சேர்த்துக் கொள்ளலாம். நஞ்சுக் குணங்கள் முற்றும் நீங்கியபின் எண்ணெய்யிட்டுத் தலைமுழுகி வழக்கமாய் உண்ணுகிற உணவுகளை உட்கொள்ளலாம்.

## விரியன் கடி நஞ்சுக் குறிகுணம்:-

உடல் தசை வீங்கும், உடல்பதைக்கும், காய்ச்சல் காயும், கடிவாய் கடுக்கும், அடிக்கடி உறங்கும். மூக்கு, கடிவாய் ஆகிய இடங்களில் மஞ்சள் நீர் கசியும். இதில் இரத்த வீரியன் கடியால் உடலில் உள்ள குருதி எல்லாம் மயிர்க்கால்கள் தோறும் வெளிப்படல், கண்தெரியாமை, காதுகேளாமை, வாய், மூக்கால் இரத்தம் வெளிவரல்.

## பதினாறு வீரியன் கடிகளுக்கும் பொதுமருந்து:-

1) 325 மி.லீ. பெருவாகைப்பட்டைச்சாறு, 160மி.லீ. பசுநெய் சேர்த்து 35கிராம் மிளகுதூளைச் சேர்த்து அதை உடல் வன்மைக்குத் தக்க நாளளவு மருந்து அளவை அறிந்து கொடுக்க 16 வீரியன் கடிநஞ்சுகளும் தீரும்.



## முதல் உதவி:-

1) இதில் எவ்வகை வீரியன் பாம்பு கடித்தாலும், வேறு எந்த நஞ்சு உயிர்கள் கடித்தாலும் தவசிமுருங்கைச் சாற்றை உள்ளுக்கும் கொடுத்து, ஒற்றடம், பற்றிட்டு, நசியத்திற்கும் இதையே பாவித்து உச்சியில் சிறுகக்கீறி அதில் விட்டு,செவியிலும், கண்ணிலும் இச்சாற்றைப் பிழிந்து விடவேண்டும். இதனால் மேற்படி நஞ்சு தீரும்.

2) வேப்பெண்ணெய் குடித்தால் அவ்விடம் கீழே இறங்கி விடும். வேப்பெண்ணெய் உடலில் ஊறி கசப்பேறி விடும். இதனால் நஞ்சு ஏற வழியற்று விடத்தின் பலன் கெட்டு விடும்.

3) பிரண்டை, பாகல், கோவை மூன்றையும் சரிஎடை எடுத்து வில்லை தட்டி வெதுப்பி கடிவாயிற் கட்டினால் வீரியன் கடி நஞ்சு தீரும்.

4) கந்தகம், இரசம் இரண்டையும் சம எடை எடுத்து பசுநெய்யில் அரைத்து ஒரு துணித்துண்டில் தடவித் திரியாக்கி கொளுத்தி அதிலிருந்து வரும் புகையை மூக்கின்வழியாக மூளையில் ஏற்றினால் வீரியன் நஞ்சுகள் யாவும் தீரும்.

## வீரியன் நஞ்சுக்கு சுந்தரித்தைலம்:-

| | |
|---|---|
| 1.வேப்பெண்ணெய் | 1.3 லீற்றர் |
| 2.வெள்ளைப்பாடாணம்(சுத்தி) | 35கிராம் |
| 3.துருசு (சுத்தி) | 5கி |
| 4.வெங்காரம் | 5கி |
| 5.நவச்சாரம் | 5கி |
| 6.வீரம்(சு) | 5கி |
| 7.பூரம்(சு) | 5கி |
| 8.நேர்வாளம்(சு) | 35கி |

**செய்முறை:-** வேப்பெண்ணெயை ஒரு மண்சட்டியில் ஊற்றி அதில் 4 மூஞ்சூறுகளைப் போட்டு மேல் மூடி சீலை செய்து பூமியில் ஒரு மண்டலம் வரை புதைத்து எடுத்து வடித்து பின் மேற்குறிப்பிட்ட சரக்குகளைச் சேர்த்து மேற்படி தைலம் விட்டு

நன்றாக அரைத்து வெற்றிலையில் தடவிக் கொடுக்க வீரியன் பாம்பு விஷம் நீங்கும்.

**நீலகண்டக்குளிகை:-**

| | |
|---|---|
| 1.வாளம் (சு) | 35கி |
| 2.துரிசு | 35கி |
| 3.வெங்காரம் | 10கி |
| 4.நவச்சாரம் | 10கி |
| 5.வீரம் | 10கி |
| 6.பூரம் | 10கி |
| 7.கந்தகம் | 10கி |
| 8.இரசம் | 10கி |

மேற்கூறப்பட்ட 8 சரக்குகளையும் குழிக்கல்லிலிட்டு வெற்றிலைச்சாறு விட்டு மெழுகு பதமாக 3நாள் அரைத்து 4கிராம் அளவுள்ள மாத்திரை செய்ய வேண்டும். இதை நோய்க்கு தக்கவாறு கொடுக்க எல்லா நஞ்சுகளும் நீங்கும்.

## எலிக்கடி

எலிகள் 18 வகை

**கடி குறிகுணம்:-**

நடுக்கம், சுரம் காயும், கொப்புளங்கள் தோன்றும், மூட்டுக்களில் நோ உண்டாகும். இதற்கு தக்க மருத்துவம் செய்யாவிடில் இருமல், இரைப்பு, இளைப்பு போன்ற நோய்கள் உருவாகும்.

**மருந்து:-**

திப்பலி, மிளகு, புங்கம்வேர், மகிழம்வேர், சீந்திலிலை ஆகியவற்றை கற்றாழைச்சாற்றில் அரைத்து நஞ்சு வன்மைக்கு தக்களவு உண்ண எலி நஞ்சு தீரும்.

தாளகத்தை தூளாக அரைத்து ஒரு மண்சட்டியில் இட்டு நடுவில் துளை போட்ட சட்டி ஒன்று மேலே மூடி நெருப்பிலிட்டு வரும் புகையைப்பிடித்தால் எலி நஞ்சு நீங்கும்.



## சிலந்திக்கடி

20 வகை சிலந்தி காணப்படுகிறது. சிலந்தியின் நஞ்சு வகைப்படும்.

மூச்சு, பல்,மலம், சிறுநீர், வெந்நீர், வாய், வாய்நீர், ஊறு

மூச்சு- இதிலிருந்து உண்டாகும் நஞ்சு சுரம், நீர்வேட்கை ஆகியவற்றை உண்டாக்கும்.

**பல்:-** உடல்வலி, வீக்கம், எரிச்சல், துயரம், வியர்வை, நீர்வேட்கை ஆகியவற்றை உண்டாக்கும்.

**மலம்:-** கெட்ட மணமும், எரிச்சல், தினவு உண்டாகும்.

**சிறுநீர்:-** கெட்ட நாற்றம், எரிச்சல் உண்டாகும்.

**வெந்நீர்:-** கடினகொப்புளம். நோவு உண்டாகும்.

**வாய்:-** குத்தல், தினவு உண்டாகும்.

வாய்நீர்:- எரிச்சல், குத்தல் உண்டாகும்.

**ஊறு:-** மேற்கூறிய குணங்கள் உண்டாகும்.

**மருந்து:-** சுண்ணாம்பு, பழைய புளியையும் கலந்து கடிவாயில் பூச வேண்டும்.

சிலந்திப்பூச்சி விஷம் சில நாட்கள் உடம்பில் தங்கி நஞ்சுக் குணங்களை உருவாக்கும். இதற்கு குப்பைமேனி, முருக்கு, எட்டி, வேளை ஆகிய சாறுகளை சரியளவு கூட்டி கடிவாயில் பூசவும்.

அவுரியிலை, குப்பைமேனியிலை, உத்தமாகாணிஇலை மூன்றையும் சரி எடையாக எடுத்து கொட்டைப்பாக்களவு உருட்டி 2வேளை 3 நாட்களுக்கு கொடுக்கவும்.

**ஓணான் கடி:-**

கடித்த இடத்தில் மூன்றாம்பிறையை ஒத்த காயம் காணும். அதனால் நோவு, வீக்கம், நமைச்சல், குத்தல், களைத்தல் நேரிடும் . இதற்கு 40 மி.லீ. மூங்கில் பருத்துச்சாறில் 10 கிராம் மிளகுப்பொடி சேர்த்து காலை, மாலை 5 நாட்கள் கொடுக்க தீரும்.

**குளவிக்கடி:-**

கடித்த இடத்தில் வீக்கம், தினவு, எரிச்சல் உண்டாகி நீர்க்கசிவு ஏற்படும். இதற்கு வேலிப்பருத்திச்சாறும், குறிஞ்சான் சாறும் சேர்த்து பூசலாம்.

**அரணைக்கடி:-**

உடல் முழுவதும் நடுக்கம் ஏற்படும், வாயில் மென்மையான நுரை தள்ளும். நாக்கு தடித்து பேசமுடியாது. இதற்கு சுக்கு, வசம்பு தனித்தனியாகச் சுட்டு சரி எடை எடுத்து கலந்து காலை, மாலை 2வேளை வெருகடியளவு எடுக்க தீரும்.

**அட்டைக்கடி:-**

கடிவாய் தடித்து சிவந்து திமிர கொள்ளும். ஆடுதிண்டாப்பாலைச் சாற்றில் அப்பிரகபஸ்பத்தைக் கலந்து கொடுத்தால் விஷம் தீரும். அல்லது திரிகடுகுச்சூரணத்தை கொடுக்கலாம்.

**தேள்கடி:-**

தேள் 12 வகை இது கடித்தால் கடித்த இடத்தில் வீக்கம், வியர்வை, சிவத்தல், எரிச்சல், கடுத்தல், விறுவிறுத்தல், வலித்தல் முதலியவை உண்டாகும். இதற்கு கோழி எச்சத்தை வெற்றிலையில் கொடுத்தல்.

நல்லெண்ணெயைக் காய்ச்சி வெற்றிலை, குப்பைமேனி, உப்பு ஆகியவற்றைக் கசக்கி அதிலிட்டு கெட்டுவாயில் ஆவி பிடிக்க நஞ்சிறங்கும்.

எந்த இனத்தேள் நஞ்சும் எருக்கிலைச்சாற்றில் அப்பிரகபஸ்பத்தை கொடுக்க தீரும்.

**நட்டுவக்காலி நஞ்சு:-**

5 வகையாகும். இது கொட்டினால் காந்தலும், வீக்கமும், எரிச்சலுடன் கடுகடுப்பும், குமறல், குமட்டல், நெறிகட்டல், வியர்வை, வாயில் நுரைதள்ளல் என்பன காணும்.

இதற்கு கத்தரிக்காயை வெதுப்பி கடிவாயில் கட்ட நஞ்சு தணியும். பழப்புளியை காடியில் கரைத்து காடியில் வைத்து அடுப்பில் கொதிக்க வைத்து அவ்வாவியை கெட்டுவாயில் பிடிக்க நஞ்சு நீங்கும். வேலிப்பருத்தி, ஆடுதிண்டாப்பாலை இரண்டையும் சமன்கூட்டி பொடித்து வெருகடி பிரமானம் கொடுக்க தீரும்.

இவ்விஷத்திற்கு அப்பிரகபஸ்பத்தை வெள்ளறுகுச்சாற்றில் கொடுக்க தீரும்.



**காணாக்கடி:-**

கடித்தது என்னவென்று தெரியாதநிலையில் அதை காணாக்கடி என்று அழைப்பர். தோல்மீது பட்டை பட்டையாக அடையாளம் காணப்படும். இதற்கு 1.3 லீ. காடியில் 1.4கி.கற்பூரவள்ளியிலை அரைத்துக் கலக்கி அதில் பாதியை சிறுகச் சிறுக உண்டு மற்றப்பாதியை உடம்பு முழுவதும் பூசவேண்டும். இவ்வாறு 5 நாள் செய்யவேண்டும்.

**நாய்க்கடி:-**

செயற்கை வெறியில் வாயிலிருந்து தண்ணீர் மோர் போல வழியும். மாறுபட்ட குரலில் கூச்சலிடுதல், வியர்வை விட்டுத் தெளிவாக வெளிப்படல், மயக்கம் தெளிவுடன் உண்டாகும். இயற்கை வெறிக்கடியில் வாயில் நுரை தள்ளும், விடாமற் படிக்கு வேர்வை குழம்பிக் காணப்படும். நாய் குரைத்தது போல் குரைக்கும். பலகறைப்பற்பத்தை நிலப்பனங்கிழங்குச் சாற்றில் கொடுத்தல். காராமணிப் பருப்புக்கஞ்சி கொடுத்தல்.

**இடுமருந்து:-**

தமக்கு விரும்பியவரை தன்வசப்படுத்த இடுமருந்து இடப்படுகிறது. இதற்கு வெண்பூசணிக்கறி, நெய், லேகியம், விளாம்பழத் தோட்டுக்கற்கம் உண்ணல். நீலியின் வேரை அரைத்து களற்சிக்காயளவு உண்டு வர குணமாகும்.

## தாது வகுப்பு

**இரச நஞ்சு:-**

இதனால் வாயில் புண் உண்டாதல், பற்சந்துகளில் ஈறுகட்டல், வாயில் நீர் ஊறல், வாய், தொண்டை வெந்து வீங்கும். இரத்தபேதி, நீர் அடைப்பு, உடல் வெளுத்து, காது செவிடு, கண்பார்வை இழத்தல்.

**முறிவு:-**

அவுரிவேர்ப்பட்டையை வெந்நீர் விட்டரைத்து சுண்டங்காயளவு காலை,மாலை 3நாள் கொடுக்க தீரும்.

**வீரநஞ்சு:-**

இதனால் வாய் புண்ணாகி, வாயில் நீருறும் ,தொண்டை, இரைப்பை புண்ணாகும் ,வாந்தி, மலபேதி, குருதிக்கழிச்சல் உண்டாகும்.

அதிகநீர்வேட்கை, விக்கல், மூர்ச்சை, மயக்கம், **வலி உண்டாகி** மரணத்தை உண்டாக்கும்.

**முறிவு:-**

நீலி வேர்ப்பட்டையை வெந்நீர்விட்டு அரைத்து ஒரு சுண்டைக்காய் வீதம் எடுத்து 80 மிலீ. இள வெந்நீரில் கரைத்து காலை,மாலை குடித்து வரல். தென்னங்கள் அருந்திவர நஞ்சு முறியும்.

**பூரநஞ்சு:-**

இதனால் பல்லீறு, நா,வாய்தாடை என்பன புண்ணாகும். வாய்திறக்க முடியாது. நாவில் நீர் சுரக்கும்.
பாகல்இலச்சாறு 3-5 நாட்கள் உள்ளடக்க தீரும்.

**இலிங்க நஞ்சு:-**

வாய், உண்ணாக்கு, குரல்வளை, மார்பு, பெருங்குடல் வெந்து புண்ணாகும். வயிற்றில் எரிச்சல் உண்டாகும்.

இதற்கு சாதிக்காய், வால்மிளகு, செம்பருத்திவேர்ப்பட்டை வகைக்கு 4கிராம் வீதம் எடுத்து 850 மி.லீ. நீர்விட்டு எட்டிலொன்றாக காய்ச்சி 35கி. கற்கண்டு சேர்த்து காலை, மாலை ஒரு மண்டலம் உட்கொள்ளல்.

**கந்தகநஞ்சு:-**

கண்கள் மஞ்சள் நிறமாக பூத்திருக்கும் முகம் வெளுத்திருக்கும். பற்கள் கறுத்திருக்கும். வயிற்றுவலி, வாயில் புகைநாற்றம் உண்டாகும். இதற்கு மிளகு, நீலி, சீரகம் இவற்றை சரி எடை எடுத்து குடிநீரிட்டு கொடுக்க தீரும்.

**தாளகநஞ்சு:-**

மூக்கால் குருதி வடியும், வாயில் சுவை கெடும் மேற்சுவாசம் கிளம்பும் இதற்கு கொடிவேலி வேர்பட்டை 10 கிராம், மிளகு 10 கிராம், கறியுப்பு 5கிராம் குடிநீரிட்டு ஒரு மண்டலம் உட்கொள்ள தீரும்.

**வெள்ளைப்பாடாணம்:-**

உடலில் கொப்புளங்கள் உண்டாகும். முகம் வீங்கும், விரல்கள் குரங்கின் விரல்கள் போல் மாயும். வாய் கசக்கும்,



வாய்.உதடு புண்ணாகும். குமட்டும். குருதியுடன் வாந்திபேதி உண்டாகும்.
முறிவு:- அவுரிவேர், மிளகு குடிநீர் இட்டு கொடுத்தல்.

**மிருத்தார்சிங்கி:-**

வாயில் புண் உண்டாகி,தொண்டை வறட்சியாகும். சொறி, புண் உண்டாகும். இதற்கு புங்கம் வேர்பட்டையை நீர்விட்டு அரைத்து சுண்டங்காயளவு உண்ண வேண்டும்.

**துரிசு:-**

வாயில் ஒரு வித களிம்புச்சுவை உண்டாகும். வாய் குமட்டும், குருதி கலந்து வாந்தியாகும். வயிற்றுக்கடுப்பும், அதிக நீர்வேட்கையும் உண்டாகும். இதற்கு எலுமிச்சம்பழச்சாறு வேளைக்கு 40மி.லீ. 3 வேளை கொடுக்க வேண்டும்.

## தாவரவகுப்பு

**குன்றிமணி:-**

வாந்தி, வயிற்றுக்கடுப்பு, மயக்கம், உடலழற்சி, கழிச்சல், வயிற்றெரிச்சல் உண்டாகி மரணம் நிகழலாம்.
2கிராம் வெங்காரத்தை பொரித்து நீரிற் கரைத்து உட்கொள்ளலாம்.

**நேர்வாளம்:-**

இதனால் வாய் குமட்டல், வாந்தி, கழிச்சல், வயிறு புண்ணாதல், மயக்கம், களைப்பு, கண்சதையில் ஒரு வித வலி, கண்பார்வை மங்கல், பல் கறுத்தல் ஆகியன ஏற்படும். 10கிராம் சீரகத்தை தேனில் வதக்கி 650 மி.லீ. நீர் விட்டு 325 மி.லீ. வற்ற வைத்து 80மி.லீ வீதம் ஒரு நாளைக்கு 4-5 முறை கொடுக்க தீரும்.

**சித்திரமூலம்:-**

தோல் சிவந்து எரிந்து, புண் உண்டாகும். இதற்கு பசு நெய் குடிக்க வேண்டும்.

**சேங்கொட்டை:-**

உடலில் கொப்புளங்கள் உண்டாக்கும். வாய், வயிறு புண்ணாகும். வாந்தி, மந்தம், எரிச்சல், கழிச்சல் உண்டாகி மரணத்தை உண்டாக்கும். கோரைக்கிழங்கு, சந்தணம், எள்,

ஏலரிசி, சரி எடை கூட்டி நீர் விட்டரைத்து உடல் மேல் பூச புண் நீங்கும்.

## மஞ்சள் அலரி:-

வாந்தி. கழிச்சல், வாயில் நுரை தள்ளல், வயிற்றுக்கடுப்பு, மயக்கம் ஆகியன உண்டாகும். 130 மி.கி. துரிசை வெந்நீரில் கலக்கி கொடுத்து வாந்தி செய்விக்க வேண்டும்.

## ஊமத்தை:-

பிதற்றல், மயக்கம், தொண்டை வறட்சி, தலைசுற்றல், கண்மணி விரிதல், கண்டபடி பேசல், ஆடல், பாடல் மூச்சு குறைதல். மரணத்தை உண்டாக்கல். நீலி வேர்ப்பட்டையை புளித்த தண்ணீர் விட்டு அரைத்து வாந்திக்கு கொடுத்தல்.

## எட்டி:-

நரம்பில் தாக்கத்தை ஏற்படுத்தும். கொட்டை நீக்கிய கடுக்காயை முறைப்படி காய்ச்சி 80 மி.லீ. காலை, மாலை குடிக்க வேண்டும்.

## அபின்:-

தலைசுற்றல், சோம்பல், மந்தம், மலக்கட்டு, மூச்சுத்தடை, முகம் வெளுத்தல், உடல் கறுத்தல், கண்மணி குறுகல். சித்தபிரமை, இழுப்பு என்பன உண்டாகும். இலைக்கள்ளிவேர், கோரை, வசம்பு, சுக்கு வகைக்கு 10கிராம் முறைப்படி குடிநீர் செய்து 2வாரம் குடித்தால் அபின், கஞ்சா விஷம் தீரும்.

**கஞ்சா:-** அபினைப்போல் குறிகுணம், சிகிச்சை.

நாபி:-

நாக்கு, வாய், முகம் இவை விறுவிறுத்து திமிர் பிடித்து போன்றிருக்கும். நமைச்சலும், உடம்பில் வலியும் உண்டாகும். வயிற்றுக்கடுப்பு, சுவையின்மை, வாந்தி, நாடி தளர்தல், ஆழ்ந்த மூர்ச்சை போண்றன உண்டாதல். கடுக்காய் குடிநீரை விதிப்படி செய்து குடிக்க தீரும்.



## அமுதாகாரம்

பாயாயிரம்

சீர்மலி கமலத் திசைமுகன் படைத்த
பார்மலி துத்திப் படவிட நாகம்
மண்டெலி புடையன் வருகரு வழலை
எண்டரும் பணிக ளிவைமுத லெவைக்கும்
அருந்திடு மருந்தோ டஞ்சனங் குடோரி
பொருந்திய நசியம் பூச்சொடு துவாலை
முறுக்கிடு மருந்துகள் முறைமுறை துவைத்து
வறுத்தெடுத் தொற்றும் மருந்துகள் பலவும்
தேளொடு புலிமுகச் சிரந்தி செவ்வட்டை
தாழ்விலா வரணை தகுநஞ்சுப் பல்லி
கண்டறி பொல்லா வலியுடைக் குளவி
புலிக்கடி நாய்க்கடி பூனைக் கடியுடன்
எலிக்கடி முதலா வியம்பிய வெவைக்கும்
மருந்துட னெண்ணெய் தூள்வகை யொற்றுத்
திருந்துற வஞ்சனம் சிறந்திடு நசியம்
ஐயமில் முன்னூற் றிருபத்தாறு
செய்யதோர் விருத்தம் தெரிந்துரை செய்தான்
கங்கைமா நதிசூழ் காசிமா நகரோன்
பங்கமில பங்கயப் பசுந்துணர் மாலையும்
கோதிலா வொதிபக் கொடியுமிக் குடையோன்
கன்னியங் கமுகிற் கயலினங் குதிக்கும்
துன்னிய வளவயற் சுன்னைநன் னாடன்
தரங்கநீள் வேலைசூழ் தாசர் தங் குலத்தோன்
அரங்க நாத னருளிய புதல்வன்
இயலிசை நாடகம் இசைபெறு சோதிடம்
பயில்தரு வாகடம் படித்தினி துணர்ந்தேன்
சூரன் மார்பு துளைபட வுருத்து
வீரவே லெறிந்த விசாகினி ராறு
கரம்பெறு முருகன் கழலினை பரவி
வரம்பெறு கவிஞன் வரதபண் டிதனே.

## விநாயர் வணக்கம்

வானுலகு மதிச் சடில முடையானை மணந்து வரித்
தேனுலகு மலர்ச் சோலை திகழிமைய மலையில் வருங்
கருங்கூந்தற் கன்னியிளம் பிடியீன்ற
கூனுலவு பொருமருப்புக் குஞ்சரக்கன் றினைப்பணிவாம்

காப்பு

சங்கரனைப் பார்பதியைச் சண்முகனைத் தண்டுவிற்சக்
கரவாள் சங்க மேந்தும்
புங்கவனை வினதைபெற்ற புள்ளரசைத் துதித்திறைஞ்சிப்
புகலு நூற்குப்
பொங்குதிரைக் கடலுலகோர் புகழமுதா கரமெனப்போர்
புனைந்து சீற்றம்
தங்கரவ முதலியபல் விடந்தீர்க்கு மருந்துபல சாற்றலுற்றர்.

### அவையடக்கம்

மரட்சியா முதனூலிற் கண்டுகண்டு நாளும் வல்விடம் சில்விடம்
மாற்ற வருந்தித் தேடிக்
காட்சியாலுயர்ந்த முன்னோர் செய்துசெய்து கைகண்ட
தென்றெழுதிக் காட்டுமுண்மை
மாட்சியா மருந்துரையின் வழிதப்பாம லப்படியே செந்தமிழ்
விருத்தத் தறைந்தேன் கல்விச்
சூட்சியால் மிகுந்த நல்லோர் சிறியேன் குற்றஞ் சொல்லாரேன்
பதைமனதிற் றுணிந்துதானே

ஆருயிய்ந்திடும் பொருட்டாலன்று சித்தாரூட மொருவர்
சொன்னா ரன்னூல் தன்னில்
ஊருமுர கஞ்சில்விடந் தீண்டினால் வந்துவகை கண்டுரைத்ததனை
யோர்ந்து தேர்ந்து
தேருமருந்துகள் கொடுக்கவேண்டு மன்னோன் நிகழ்த்தியதெல்லா
மீட்டு நிகழ்த்திடாமல்
தீருமருந்தகளாக வானமட்டும் தெரிந்தெடுத்துத் திரட்டியயொன்
றுாய் செப்பலுற்றேன்.



## குளிகை

பெருங்குரும்பை வசம்பிரதம் பச்சைநாவி
பேசியநற் கோட்டமிந்துப் பழிஞ்சில்வீழி
நெருங்குபெருங் காயமெருக் கமுக்கறாவேர்
நேர்வாளஞ் சிவந்தகொடி வேலிநீலி
வருங்கரந்தை சிவந்தபா ஷாணமுத்த
மாகாணி கெந்தாழங் காய்நற்குந்தம்
ஒருங்குயர்திற் பலியுடன்வேர்க் கொம்புவாசி
யொன்றுமிவை குறையாம லொக்கக்கூட்டேன் - 1

கூட்டெலுமிச் சம்புளியு மொருக்கம்பாலும்
கூசாமல் விட்டரைத்துக் குன்றியிற்பாதி
நீட்டமில்லா துண்டைசெய்து நிழலுலர்த்தி
நீண்டபணி கடித்தால்முன் வார்த்தைரைத்த
நாட்டுமருந் தினிலோருண்டை கூட்டிந்
துரைத்தள்ளே கொடுக்க நமன்வந்தாலும்
தீட்டுபுகட் கிரணரவி தன்னைக்கண்ட செழும்பனிபோற்
கெடும்விடங்கள் இல்லைத்தானே. -2

திண்ணமிந்த மருந்திதனைக் கூட்டும்போது
சிறந்தபெருங் காயமொரு களஞ்சிநாவி
வண்ணமுறு சூதமரைக் களஞ்சு காணேர்
வாளம் பாஷாண மரைக்கால் மற்றெல்லா
மெண்ணுறு மொன்றரைக் கழஞ்சாம் குறைந்தேறாமலிந்த
நிறைகொண்ட தற்பி னெழில்வாரீசத்
தண்ணுறும்பூ முகமடவாய் சாந்தபோலத்
தானரைக்க வேணுமிரு சாமந்தானே. -3

## மிருத சஞ்சீவி

பெரியரவு கடிக்கிரதத் துடனேகெந்தகம்
பேணியநற் பொரிகாரம் எருக்கம்பாலும்
அரியதாம் நான்மருந்து மொக்கக்கூட்டி
யரைத்துண்டை யாகவுள்ளே யருந்துவீராய்

உரியபல விடங்கலெல்லாம் முறிந்திட்டோடு
முற்றநெஞ்சிற் கட்டறுக்கு முவாந்திசெய்யும்
விரிகடல்நீ ருடுத்த பெரும் புவியின்மீதே
மிருதசஞ்சீவி ணெனவும் விளம்பலாமே. -4

அழுகுசர்ப்பத்திற்கு

அமுக்கிராய் பெருங்குரும்பை அவுரிவேர் தாழங்காய்
சிமித்திரைவாய் வீழிவேர் சேரவிவை தூளாக்கியிமைக்கிரி
சேருமையருளால் இளவெந்நீர்தனிற்கு டிக்க உமக்குறுதி
தப்பாது இங்குரக விடந் தீர்ந்திடுமே. -5

குடோரி மஞ்சனத்திற்கு குளிகை

மணத்த பெரும்குருத்தம்வேர் கோந்தாழங்காய் மற்றும்
ஒரு கொடிக்கழல்வேர் வசம்போடுள்ளி யுணர்ந்து மிளகுடன்
இரதம்மடம்பங்கொட்டையொரு நிறையாய்க் கூட்டி
இள வெந்நீவார்த்துப் பிணக்கறவே யரைத்துண்டைநிழலுலர்த்தி
பிறங்கிய வஞ்சனந் தீட்டிக்குடோரியாயிற் பணப்பணிகள்
கடித்தவிட மெல்லாந் தீரும் பசுஞ்கனகக் குழைகிழிக்கும்
பார்வையானே -6

குளிகை

படருமுடக்கொத்தான்வேர் நெல்வேரெட்டிப்பட்டைபாவட்டையின்
வேர்ப்பயறிப்பட்டை படலெருக்கம் வேருடன்வெந்தோன்றிமூல
மணிஞ்சில் வேரெட்டையும் ஓரளவிற் கூட்டிவிடலெருக்கம்
பாலுடன் எள்ளெண்ணெய் கூட்டி விட்டரைத்துப் பாவட்டங்
காயைப் போல உடனுருட்டி யுண்டையரைச் சிறங்கையெண்ணே
யுடனுண்டாலுகர விட மொதுங்குதானே. -7

பொறைசெய் நிருவிடமுடனே கோந்தாழங்காய் புள்ளரசின்
பாஷாணங்
கணிதபேதி நிறைசரி கொண்டெலுமிச்சம் பழச்சாறு ஊற்றிநெகிழ
வரைத்துண்டை மஞ்சாடியைப் போலாக்கி உறைகொளிள ஓவந்
நீரிற் கொடுத்த பின்னேருச்சியினிற் கடிவாயிலுரைத்துப் பூசக்
கறைவிடம் போமருந்து மிகவாறை செய்தாற் கமழ்சந்தன
முள்ளுக்கு கரைத்துக் கொள்ளே. -8



இடந்தேடும் பெருங்காயங் களஞ்சுதான் வெள்ளெருக்கம்
பாலூட்டி நிழலுலர்த்தி வைத்து விடந்தீண்டிக் கிடந்தவருக்குடன்
மாவாக்கி வெற்றிலையிற் கொடுத்தருந்த மீளுமீளா
தடர்ந்து தலைமண்டை கொண்டு நின்றதானால தனை
மூக்கில் நசியமாக விட்டாற் குடம்போலுங் குவிமுலை
யாய் கணப்போதந்தக் கொடியவிடங் கடிவாயிற்குதிங்குங்கானே
-9

ஈசுரமூலி கருடக்கொவ்வை யிறையவனிம்பமுடன் எட்டி
யாடைகுலைத்தா னொச்சியடம் பெழினீ நொச்சியசாறுகாண்டை
கொடிக்கழல்குப் பழையரமுறி தொட்டவிரலன்று தறித்தான்
குந்தமயிற் குத்தற் தொடுவாய் முதிரை தேசுற நாறுகரந்தை
புறங்கை திருத்தவே நாறியுடன் செப்பிய வங்கோலங்காத்தோட்டி
சிறந்திடு வேரிவைகள் பேசியவோரளவாகத் தூள்பொடிசெய்து
களஞ்
சிரதம் பிரியமுறித்துச் செறியுமி தொக்கப் பேணிக் கொண்டருளே.
-10

ஈசுரமூலி- பெருமருந்து இறைவனிம்பம்- சிவனார்வேம்பு
ஆடைகுலைத்தான்- குறிஞ்சா தொட்டுவிரலறுத்தான்-பாகல்
குந்தம்- குருந்தம்

கொண்டருளும் மிதிபாகல் சமூலங் கொச்சையுணப்பாலைகூட்டி
யிடித்துக் கோசலம் விட்டுக் கொள்சாகந் தன்னைப் பண்டை
மருந்தினில் விட்டரைத்துப் படர்தூதுளங்காய் போற் பயிலவுருட்டி
நிழலுலர்த்திப் பருகு வெந்நீரிலிட மண்டலவிரியன் புடையன்னாகம்
வழலைக் குலமுழுதும் மண்டுவிடங் கடிவாயிற் புகுதுமிம்மருந்து
கைமீதுறுமேன் மிண்டி மிதித்திடினுங்கடியாது
விரைந்துவெருண்டேடும்
வெள்ளிமலைப் பெருமானுரையென்று விளம்பிகர் பண்டிதரே
-11

## அரைமருந்து

கூறிருப்பைப் பட்டையுடன் பேய்ப்பீர்க்கங்காய் கொண்டிவைதான்
சிறுநீரிற் குழைத்தொன்றாகச் சேறுபடவரைந்துநெய்யிற்
கொடுத்தா
நாகஞ் சேர்வழலை பொறிவிரியன் புடையன்றான்

மேலேறி நெஞ்சையடைத்த சிலேட்டுமங்களெல்லாம் எதிரெடுத்து
சுகந்தரு மென்றிசைத்தார்முன்னே ருறி மதுத்துளித்திட வண்டுழுது
பாடு முற்பலக்கட்டுனை குழைபாய்ந்துலவு மாதே. -12

பேய்ப்பலவன் முடிதும்பை பருத்தி பாகல் பீர்க்குவாய்
முசுமுசுக்கை வெட்பாவட்டை வாய்க்கு வனமல்லிகைகுப்பழழை
வேர்க்கொம்பு வசம்பிரத மெலுமிச்சம் பழத்தின்சபறு
மாக்கு முதற் சொன்னவிவை யெல்லாம் கூட்டி யமுதாக
வரைத்து வெந்நீர் தன்னிற்கொள்ளப் பேய்க்கடிய விடந்தலை
மேற்கொண்டிட்டாலும் புனிதனுண்ட விடம் போலபோகுந்தானே.
நறுந்தாளி நற்பாகனாய்ப் பாகல் கொவ்வை குறுந்தானிலைத்
தகரை கூடத்துவைத்தே பொறுங்காடி விட்டுப் பிசைந்துமிளகு
குன்றியுறுந்தானே கொள்ள விடமோடுமிதுபாரே 13
சம்பீரஞ்சாறு - எலுமிச்சம்புளி

மாதாளை கூவிளையணிஞ்சில் கொழுஞ்சி தேற்றா மருக்காரை
மாவிலங்கை மயிற்காற்குந்தம் தீதில காத்தோட்டியப்பைக்
கிழங்கு காண்டை சீந்தில் புங்கு பழுபாகல் கொல்லன் கொவ்வை
யோது நிலப்பனை தூன்றின் மேற் கொண்டணி னொடுவாய்காக்க
ணங்கொவ்வை எலுமிச்சம் வேர் மேதகவேரொன்று நிறை
சமனாகத் தூக்கி வெந்நீரிற் கொடுக்கவிடம் மீளுங்கானே
அப்பைக்கிழங்கு- கொவ்வைக்கிழங்கு -14

## கொவ்வைக்குளிகை

உரைதரு காக்கணவங் கொவ்வைக்கிழங்கிலே காய்கொடி
கொட்டையுள்ளி துத்தம் விரைதரு நற்பெருங்காயம் வசம்பிரதங்
கோற்தாழைவிதை வெண்காரங் தரைபடு நேர்வாளமுமோர் நிறை
கூட்டிச் சம்பீரத்தின் சாற்றாலாட்டி நிரலபடு தூதுயங்காய்
போலிருட்டியபின் வெந்நீரில் நீயும் கொள்ள கொண்டவிடந்தீர்ந்த
பின் தயிரும் சோறும் கொடுத்துடுமின் கொடுத்தபின்னிக்குளிகை
தன்னை மண்டையெருக்கம் பாலிற் குடோரியாடி மத்தியும் பின்
மற்றதற்க மாறாதாகில் விண்ட தேசிப்புளியிற்றுயிர் வேளைமேனி
விளங்கிய சாற்றிற் கண்ணிலஞ்சணம் தீட்டக்கண்ட விடங்கடி



வாயிற் குதித்து மீளுங்காரிகையே மிகுவாதை கண்ணிலுற்றால்
உற்ற மாதுளம் பழத்தின் கொட்டைதனைப் பிழிந்து
கண்ணிலொழுக்கிப் பின்னர்ச் சொற்ற மாதுளம் பூவுற்
தொண்டையினலவு மரைத்துச் சூழ்க கண்ணின் மற்றிது
போன் மருந்துளதோ மண்டலி நாகம்புடையன் வழலை
மூக்கன் புற்றிலுறை கட்செவிகள் கடித்த விடந்தீர்ப்பதற்குப்
பொதுவிதாமே- -15

இந்த மருந்தின் பெருமையிரு பிறப்பு மொரு பிறப்பிலெய்தா
நின்ற வந்தணர் தங்குலத்துதித்த ஜெகநாதன் அருளரங்க
நான்தான் பால் வந்த மருந்திரு நாலு மாநாகங் கடித்திடினும்
மாறு மன்றே -16

நீடிய வோரிதழ்கமல மவுரிநீர் மேனெருப்பு நல்லசாறணை
வேர் நிமலன மூலி கூடிய காக்கணம் பனரையமுக்கரா
வேர்குறித்த வெருகங்கிழங்கு கரம்பை வேருந்தேடியிவை
ஓரோன்றோர் பலமாய்தூளி செய்து பச்சைநாபிஉள்ளி சாதிலிங்கம்
காடிதனி நேர்வாளம் இரத்ததூய காயம் வசம்பதிவிடயம் பல
பொன்றே. -17
நீர்மேல் நெருப்பு - கொட்டைப்பாசி
நிமலன் மூலி - பெருமருந்து.
ஒன்றாக வாமலக்க கெந்தகமும் களஞ்சு தனிலொக்கக்கூட்டி
பொன்றவு பொற்றிலைக்கையாந்தகரை எலுமிச்சம்புளியுடனே
நன்றாய் கோடகசாலை வெள்ளறுகின் சாறிவைகள் நாலும் விட்டு
குன்றமலாறு தினமரைத்து ருட்டியுலர்த்தி யுணடடைகுன்றிபோலே. -18

போல வருங்குளிகைதனைப் பொறியரவங் கடித்துவிடம்போட்ட
தென்றால்

சாலமுதல் வார்த்ரைத்த சாறுதனில் இளவெந்நீர் தன்னிலாதல்
வேலையை விழிமடவாய் கொடுபாம்பின் விடம்தீரும்
விளங்குதண்டைக்
காலன் அரனுமைக்கரிய குமரளடியவர் வினைபோற்
கடித்திற்றானே. -19

ஈருரு நொச்சிப்பூ மிளகுவசம்பு பாகல்வருமாடாதோடைஇவை
யெல்லாம் நந்தியிள வணிஞ்சில் பாவட்டைவேராம் நான்கும்

மிக்க நற்பூநாகமிவையொக்கக் கூட்டியுளமகிழ் கோமூத்திரத்த
லரைத்துக் காய்ந்தவுண்டை பொடித்துட் கொள்ள
விடமோடும் முன்னே கொளுமொருண்டையிற் பாதி கண்ணிற்றீட்டக்
கொடிய சன்னி தீர்ந்திடும் பொற்கொடியன்னாளே. - 20

பொருத்து வசம்பு மிளகுள்ளி புவியிற்கெருடன் கிழங்கு
மருந்து கோற்தாழங்காயும் வந்தாடுண்ணாப் பாலைச்சாறி
யிருந்தங்கரைத்தே யுண்டை பொடித்திள வெந்நீர்க்கரைத்தனை
அருந்திற் கொடிய வராத்தீண்டுமால மனைத்துமமுழுதாமே -21

வேலிப்பருத்திவோ தனக்குவரியன்றிரும்பூத்தனக்குச்சாலப்புடையன
பலவிடங்கடிகனியுமதுவுந் தானன்றி யேலக்காய்க்கு வழலைவிட
மெல்லாந் தீருமிது தன்னைக் கோலவமுரியுடன் கொடுக்க
கொடிய விடங்கள் குலைந்திடுமே. -21

## குடிமருந்து

பேயின்பீர்க்கு வேரதனை பிடுங்கி நீரிற் பாக்களவு தேயவரைத்து
கொடுத்திட்டாற் சீறிக்கடிக்கும் பாம்புவிடம் பாயுங்கடியுண்டவர்
விடத்தான் மாயகன்மாயம் பல கொடுத்துங்காயுங்கதிர் வேற்றட
நெடுங்கட் கள்ளார் கூந்தற்கனற்கனங்குழையே. -22

குப்பை மேனியவுரியின் வேர்குலவும் வசம்பு பெருங்காய
மொப்பவுரைக்கும் வேரிரண்டு மொத்தசரக்குஞ்சரி கூட்டித்தப்பில்
புன்னைக்காயளவு தானே வெந்நீர்தனிற் கொடுக்கில் மெய்ப்பச்
சொன்னோம் விடங்களெல்லாம் மீளுங்குவளை விழியாளே. 23

## தூள்மருந்து

கொட்டைக் கரந்தை முசுமுசுக்கைகுப்பைமேனிமுருங்கையுடை
வெட்டும்பட்டைபுடோல்பீர்க்குக் கூட்டி ஒரு நோவிரைவாக
முட்டாதிடித்த தூளதனை முதிரா வெந்நீ தனிற் கொடுக்கில்
எட்டா நாகங் கடித்த விடமெல்லாற் தீருமிள மயிலே. -24

வஞ்சகமின்றிச் சொன்னோம் வரும்பல விடத்துக்கெல்லாம்
நஞ்சறப் பாய்ந்தான் வித்தை நருக்கியே கொடுப்பீராகிற் பஞ்சென
நஞ்சமெல்லாம் பறக்கு மென்றுரைத்தார் தீட்டு மஞ்சனக்
கருங்கட் செவ்வாயின். மதிமுகத்தினளே. -25



வரைவிரித்தாற் பொற்பாம்பின் வல்விடந்தலைமேற் கொண்டாங்
தலை விரித்தானைக் கல்லிச்சமூலமாயுலர்த்திக் கொண்டு
சிலையினிற் பொடியதாக்கிதிகழ் வெருகடி தூளள்ளியலைவற்
வெந்நீர் தன்னிலருந்திடவமுதமாமே.

தலைவிரித்தான்- சாறணை, செருப்படைநாயகனும் -26

கொல்லன் கொவ்வை தலைசூடி குறித்தவப்பைக்கிழங்குடனே
மெல்லவுலர்த்திப் பொடியாக்கி விரைந்து குடுக்கை தனிவடைந்து
வல்லவிரியன்மாநாகம் வழலை விடங்கள் பதினாறும்
நில்லாதோடும் வெருகடி வெந்நீரிற் கொடுக்க மீண்டிடுமே. -27

கொல்லன்கொவ்வை- காக்கணம்

## தைலவகை

காளவண்ணனூர்தியண்ட மில்லியாக்கி மழஞ்சிரதம்விட்டுமெமு
கான்மேன்முடி மீளவுமக்கூடதனில் வைத்தெடுத்து விளம்புமெட்டா
நான்மதியினுப்புக் காயம் தூளமுறு கெந்தகமும் ஒக்கக்கூட்டித்
துகளறவே அரைத்திட்டாற்றயிலமாகுந் தாரைவங்கடித்திடில்
வெற்றிலையிற் பஙூசித்தானுள்ளே கொடுக்க விடந்தணிந்து
போமே. -28

காளவண்ணனூர்தியண்டம்- கருடனின்முட்டை
மதியினுப்பு- இந்துப்பு

பேயின்பீர்க்கு விரைநாழிபிறழ் வெற்றிலைதானைஞ்நூற்றிற்
சர்ப்புஞ் சாற்றைப் பிழிந்து கொண்டு சரியாயரைத்துக் குழம்பாக்கி
வாய் செய்கலத்திற்றப்பி வெம்மைமருவும் வெயிலில் வைத்தபின்
பாயுந் தைலந்தானை யெடுத்துப் பரணி தன்னிலடைத்துவையே.
-29

## நசியவகை

மண்ணில்வேந்தும் மலையின் முனிவனு முண்ணுஞ்
சோற்றுக்குளிசையுண்டானுமாய்க் கண்ணில் மூக்கிற் கசக்கிப்
பிழிந்திடில் விண்ணிற் போன விடங்களும் தீரும். -30

மண்ணில்வேந்து- முடிதும்பை மலையின்முனி- மிளகு
சோற்றுக்குளிசையுண்டான்- உப்பு

கரிய மிளகு பெருங்காயம்கழற்காய் குன்றி மகிழ்ப்பருப்பு
மரிய அகத்தாலரைத்ததனை யழகார் மூக்கில் விடுவீரேற்பெரிய

நாகங்கரு வழலை பிடரால் விரியும் ெறும்புடையன் எரியும்விடங்
கடிந்திடு மென்றிசைத்தார் விடநூல் வல்லோரே - 31

மற்ற நான் முருங்கை வேரும் வசம்புடனுள்ளி தானும் விற்றிடும்
மிளகுங் கூட்டி விரையவே சிரசு தன்னி சாம்விலுரைத்து
மூக்கிலுறைக்கவே விடுவீராகிற் பற்ற விடங்களும் பயமின்றி
பார்த்துச் செய்யவே -32

## வேகங்களுக்கு மருந்து

கருதியமுதல் வேகத்திற் கண்காடன் சிவந்தபோது வருவிடந்
தீர்க்கச் சொன்ன மருந்துதான்றிருந்தாக் கேளாய் பெருமரப்பட்டை
யுள்ளி பூநாறி வசம்பு கூட்டி பொருவுரு சிறுநீர் தன்னிற் புகட்டி
நீ நசியம் பண்ண - 33

மாரணமூன்றாம் வேகம் வந்தபின் மருந்தைக் கேளாய் சாரணை
இலையும் துப்பத்தழல் புரை கருகு சுக்கு பூரணமாகவே தாம்பூல
வல்லியின் சாற்றாவே நாரண நாடுளான் மீளும் நாசியினசியம்
பண்ணே -34

அச்சப்படவே நால்வேகமதிகமாகத் தலைக் கொண்டார் வைச்ச
மருந்து வெற்றிலையும் மயங்க வேண்டாம் வ்ளர்தோங்கு நொச்சிக்
கொழுந்தும் வசம்பவுரி நுவலும் மிளகு முள்ளியுரன் மெச்சச்
சிறுநீர்தனியரைத்து விரைந்து மூக்கில் விடுவீரே. -35

எள்ளரு மஞ்சாம் வேகமேறியதலை மேற்கோண்டாற்
கள்ள வல்விடத்தைத் தீர்க்க கருதிய மருந்தைக் கேளாய்
உள்ளியும் செப்புஞ் சுக்கு முறைத்த சாறணையின் வேருந்
தெள்ளிய சிறுநீராப்பிற் றிருந்தவே நசியஞ் செய்யே -36

ஆறெனும் வேகமேறிய திகமாய்த்தலை மேற்கொண்டாற்
காறிய விடத்தைத் தீர்க்கக் கழறிய மருந்தைக் கேளாய் வேறிலை
மிளகொடுப்பு வெற்றிலை சிறுநீர் தள்ளி ஊறவேயரைத்து
மூக்கிலுறைக்கவே நசியம் பண்ணே. -37

ஏழாம் வேகஞ்சென்றடக்கி எட்டாம் வேகம் போதுஆழார்தும்பைத்
துளிருடனே துளசிவசம்பு மிளகுள்ளி யூழார் முலைப்பால்
கெந்தகமும் மொக்கக் கூட்டி மூக்கில் மாழா விடமும்
தணிந்திறங்குமிடக்கப் மெழுப்பும் மருந்திதே -38



கருங்காள நாகந்தீண்டிக் கருவிடந்தனை மேற்கொண்டால்
வலுந்தாம லெட்டாம் வேகமருந்துதான். சொல்லக் கேளாய்
பெருங்காயங் குளவிக்கூடு பெருங்கூடாகக் குடும்பி யொக்க
நடுங்கு மெய்வழி நீர் தன்னின சியந்தான் பண்ண நன்றே. -39

அட்டாமே நாகந் தீண்டியதிகமாய்த் தலை மெற் கொண்டான்
மட்டிலா விடத்தைதீர்க்க மருந்துதான் வகுக்கக்கேளாய்
யெட்டிக்காய் குமிழங்காயும் மிசைந்திடும் தேற்றாங்காயும்
கட்டுற்ற காட்டு நீலிக்காயும் ஓர் கனியங்கூட்டே. -40

கூட்டிய மருந்து நாலுங்குறிப்பு னொக்கக் கொண்டே நாட்டிய
வுரலிற் போட்டு நடுக்கவே துவைத்துப்பின் வெள்ளாட்டு
மூத்திரத்தினாலேயே யரைத்துடன் கரைத்து நன்றாய் ஈட்டிய
மருந்தை நாளோரீரன் றேவையே. -41

ஊறிய மருந்தை யெல்லா முவப்புடனாவ நானில் வேறிடப்பிழிந்து
வெள்ளை மென்பழஞ்சீலை தோய்த்தேயறு தீப்பற்றும்
வெள்ளாட்டுப் புகை தன்னிற்காட்டி நாறிடு சிறுநீர் தன்னை
சியந்தான் பண்ண நன்றே. -43

வானமாவிலை யோர்பிடி தேடிவாய்த்த மிளகு பத்துடனே
களமார்காடியரைப்பிடியில் கலந்து வைத்து மூக்கிலில் பனமார்
மொழியாய் வல்விடங்கள் பறக்குங் கோழி மாடு முதற் சொனமா
மனிதர்க்கு கொடுத்து வாலை நிசியமிட நன்றே. -44
வானமா- காட்டுமா துவாலை- மேற்பூச்சு

சித்திரமூலி வேருஞ் சிறந்த வெண்குன்றி வேருடங்குத்திர முலைப்
பாறன்னிற்குப் பைந்திடன் வரைத்த வுண்டை புத்தியாலு ரைத்து
மூக்கிற் புகைதனை விடுவீராகிற் றுத்தியாடரவந்தீண்டுமு் விடங்
களைத் தொலைக்கும் தானே. -45

சுக்கு மஞ்சள் வசம்புள்ளி துய்யமிளகு பெருங்காயம் வைக்கு
முப்பத் திப்பலியும் வாளா மணிஞ்சின் மகிழம்விரை யொக்கக்
கூட்டிப் பொடியாக்கியுரறக்க மூக்கிற்புகைப்பீரேற் சிக்கிக் கிடந்த
விடங்களெல்லாம் சேரக்கடிவாய் தனில் வருமோ. -46

## கலிங்கம்

மரிசடைமுன்றிபலி சாதிக்காயுள்ளி வசம்பிரதம் நேர் மற்றீதெல்லா வாளம் சரிசரி கொண்டரனடிக்கும் வனந்தினா மந்தமரப்பால் வாரத்தரைத்துத் தண்ணீர் வாஞ்சு சுரிமுகத்தின் முகக்கதவுநீக்கி முள்ளாற்றுளைபட வேகும்தீயதிற் சணிந்துமூடிப்பரிவுறக் குப்பையிற் புதைத்தவெட்டாம் நாளிற்பத்துடனே யெடுத்தரைக்கும் பண்புகளே. -47

மரிசம்- மிளகு அரனடிக்கும் வனம்- தில்லை

கோதாலின் குக்கிலின் பித்துடனே சற்றே குறித்த செங்கொட்டை பருப்புங் கூட்டியித்தை மீதாலியுற வரைத்துத் திரட்டுமுன்டை மிளகளவாய் மெய்வழி நீருரைத்து வள்ளைக்காதாறும்விழிமடவாய் கண்ணிற்றீட்டக்கடி வாயிற் பூச்சிகுடேறுகீறி நாதாலினருன் மருந் தொன்றைரைத்துப் பூசுநாலு பாம்புக்கு மிதுநன்றதாமே -48

கெந்தகம் வெண்காரமுடன் பச்சைநாவி கிளிரந்தலை சூடுவல்லி யின்வேர் இந்த மருந்துகள் கழஞ்சொவ்வொன்று கூட்டியிணங்கிய செங்கொடி வேலியிரு களஞ்சாய் பந்தமுறுவெற்றிலைச்சாற்றரைத துண்டை பழகுசிறு நீரினாற் சம்பிரத்தின் சாற்றில்முந்த வுரைத்திரு விழியஞ்சனமே தீட்டமுடிய வல்விடங்கடி வாய்முடுகுந்தானே.

தலைசூடுவல்லி- பெருமருந்து -49

## நாகத்துக்கு குடிமருந்து

வாகைப் பூவும் வருகான் மிளகினோ டொகைச் சுக்கு முயருப புறத்திப் பலிபாகற் சாற்றிலரைத்துப் பருகிட நாகத்தின் விடந்தீருநடுங்கியே. -50

## புடையனுக்கு குடிமருந்து

புடையன் கடிக்கில் வசம்புள்ளி புதியசுக்கு மிளகுபுளி நடலை பழுபாகற்கிழங்கு நல்லவீழி மலர்தாங்கி படருநொச்சி கொடிவேலி பகர்பேய்ப்பீர்க்கு வேருடனெ யடவினரைத் தாங்கிள வெந்நீர்தனிற்கு குடிக்கவமுதாமே. -51



## வீரியனுக்கு நசியம்

வீரியன் கடிக்கிற் சிற்றாமட்டி வேரிற் புறந்தோலவுரி வசம்பரிய கருங்கலம்மி தனிலரைத்துப் பூச நெய்க் கொட்டானுரிய பசுந்தோன் மிளகு வசம்புயர் வேர்க் கொம்பும் அரைத்து நசியம் பரிவாய்ப் பண்ண முள்ளி தும்பை பருத்தியிலையும் பறித்திடியே. -52

## இரத்தப்புடையனுக்கு

கடுஞ்சேர் வட்டுப் பழமாதல் காயாகுதனன்றாவரைத் தடுத்தேமுருக்கம் பழமள வாயனோடுப்பு மோரளவாய் எடுத்தே சீலைப் பொட்டணத்தைப்யிள வெந்நீரிற் பிசைந்து தண்ணீ கொடுத்தால் இரத்தப்புடையன் விடங்குதிக்கும் மாறுங் குருதியுமே. -53

## புலிமுகச்சிலந்திக்கு

ஒடித்து நிம்பவிதையை யுலர்தியிடித்துத் தூளாக்கிக் குடித்துக் களப்பாவட்டையிலை குலவுமுப் போடரைத்துடனே பிடித்தபிடி பொடிதூவிப் பிறகு குடிக்கச் சிலந்தி விடங்கடித்த கடி வாய்க் கடுப்பனைத்துங் கணத்திற்றன்னியுங் கண்டு கொள்ளே. -54

## தேள்விடத்திற்கு

கருங் குங்கிலியம் எருக்கம்பால் கள்ளிப்பாலினுடன் கொதித்து நெருங்கப் பூசிப் புகைகாட் நெடுந்தேன்விடம் போய்நிர்விடமாம் பருஞ் செங்கொடி வேலியின் வேரைப்பனை சேர் கள்ளிப்பாலுடனே மருங்கேயுண்ட பண்ணியிடை மாறுங்கடுப்பு மடமயிலே. -55

## நட்டுவக்காலிக்கு

எருக்கிலை யோடு எலுமிச்சைமிலை பறித்துக் தட்டி நன்றாய் நருக்கி நசியம் பண்ணிவிட நன்றாங் குன்றியின் சாற்றைப் பருக்கியபின் கோணியற் பட்டாலடிக்க கடிவாயிற் றிருக்கிட நட்டுவக்காலி தீயவிடம் மாறிடுமே. -56

## கருங்குளவிக்கு

கெடுங்குளவி குத்திமிக்கக் கடுத்துவாதை கொண்டிடின் மூக்கறச்சியிலை கொடியோடெல்லா மிடுங்கறையுற்றுயைத்து வறுத்துத துவாலையிடத் தீரும். -57

## திருக்கைமுள்ளிற்கு

உள்ளி வசம்பு தயிர்வேலையுகந்தே சிறுநீர்விட்டரைத்து மெள்ள வெருக்கஞ் சாறணை விரையைக் காதிற் பிழிந்திடவே கள்ளைப் பொதியுங் குழன்மானே கடிய திருக்கையுடன் கெளிற்று முள்ளுத் தைத்த விடங்களெல்லாம் முறிந்தே போகுமுன்மைதே .- 58

## நெடுநாட்சென்ற விஷத்துக்குத்தூள்

ஆக்கிய சன்னிநாயகன் வசம்பு சுக்கோடரத்தை பெருங்குரும்பை விழாலரிசி சூதம் மீக்குயர் திப்பலியோடு கெந்தகம் நேர்வாளமிளகுள்ளி பெருங்காயங் கார்புகா வெல்லாற் துஸக்கி நிறை பொடி செய்தேயிரண்டு தூளுஞ் சொன்னமுறையாய்க் கலந்து வெந்நீரிற் கொள்மா காக்குடலிற் கரிந்து நெடுநாள் நின்ற கடுவிடம் போமுடன் கடித்த கடிக்கு நன்றே. -59

## நாய்க்கடிக்கு

விடுமே நாய்க்கடித்த புண்ணுக்கு மருந்து தொடு நீசெருப்படியின் சாறு தனிற்றுரிசைப் பொடியரைத்துக் குழப்பிப் புண்மேற் போடப்படி மீதிற் காய்ந்து வற்றிப் பறந்து போய் விடுமே. - 60

**குறிப்பு:-**
அமுதாகாரம் எனும் நூலின் கையெழுத்துப்பிரதியின் முக்கிய சில பாக்கள் மட்டுமே இங்கு சேர்க்கப்பட்டுள்ளது.



# விசர் நாய்க்கடி வைத்தியம்

யாழ்ப்பாணம் துரைவீதி தாவடி கொக்கவிலில் மூன்று தலைமுறையாக விஷர்நாய்க்கடி வைத்தியம் செய்து வருபவர் வைத்தியர் தம்பு சண்முகம் அவர்கள் தான் தன் தலைமுறை வைத்தியத்தில் கண்ட அனுபவ ஆராட்சிகளை உங்களிடம் பகிர விரும்புகின்றார். அவரின் அனுபவமுறைகளையும் இந்நூலில் சேர்ப்பதற்கு கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒரு பகுதியாக சேர்த்து பயனடைய வேண்டுகின்றேன்.

விசர் நாய்களுக்கு மட்டுமல்ல என் அனுபவத்தின்படி நரி, பூனை, புணுகுப்பூனை, குரங்கு, வௌவால், போன்றவற்றிற்கு வரக்கண்டிருக்கின்றேன். என் பாட்டனார், என் தந்தையர், நான் இவ் விசர்நாய்கடி வைத்தியத்தில் வெற்றி கண்டுள்ளோம்.

### நாய்க்கு விசர் வரக்காரணம்:-

நாய்களைக் கவனித்துப் பாருங்கள் அது தன்னுடைய குட்டைப்புண்களை நக்கி விழுங்குவது தொடக்கம் சகல அசிங்கங்களையும் நக்கி விழுங்கும் தன்மையுடையது. அதனால் எல்லா நாய்களுக்கும் விசர் வரும் என்பதற்கில்லை. ஆனால் குட்டிநாய், பெட்டைநாய், கொழுத்தநாய், மெலிந்தநாய் கிழட்டு நாய் போன்று எந்த நாய்க்கும் விசர் வரலாம். மனிதருக்கு தடிமன் வருவதுபோல் மிருகங்களுக்கும் தடிமன் வருகிறது. ஆடு, மாட்டுக்கு தடிமன் வந்தால் சுவரில் அல்லது மரம் தடிகளில் தும்மிய பின் உராய்ந்து சளியை சுத்தம் செய்யும். ஆனால் விசர்வரக்கூடிய மிருகங்கள் நக்கி விழுங்கி விடுகிறது. இந்த தடிமன் இம்மிருகங்களின் மண்டையிலிருந்து கசியும் பித்தநீர்க் கசிவையே இம்மிருகங்கள் நக்கி விழுங்குகின்றன. இதனாலேயே விலங்குகளுக்கு விசர் வருகிறது.

நாய்க்கு விசர் ஆரம்பிக்கும் போது முதலில் உணவு, தண்ணீர் உண்ணாமல் ஓரிடத்திலிருந்து படுத்துக்கொள்ளும். நாள் செல்லச் செல்ல அதன் விருக்கம் எனும் குண்டிக்காய்

செயல் இழக்கும். அதன் பின் கண்கள் சிவந்து விடும். வாலைத் தொங்கப் போட்டுக் கொள்ளும். நாய் தள்ளாடி நடக்கும். அல்லது ஓடும். நினைப்பும் மறப்புமானநிலை ஏற்படும். அப்படியான நாய் 3அல்லது 4 நாட்கள் உயிருடனிருக்கும். பின் இறந்து விடும்.

## நாய் கடிக்கக் காரணம்:-

விசர்வந்த நாயை வேறு நாய்கள் துரத்தி கடிப்பதனாலும் மனிதர் அந்நாயைக் கொல்ல முயற்சிப்பதும், அவ்வாறு வேகம் கொண்ட நாய் தப்பியோடி வேறு இடத்தில் ஆடு, மாடு, மனிதர்களுக்கு கடிப்பதாலாகும்.

விசர்நாய் கடித்தால் அந்நாயின் விஷம் உடலில் குருதி ஒரு நிமிடத்திற்கு 72 தடவை சுற்றியோடும் போது அதனுடன் விஷநீர் கலந்து எடுத்துச் செல்லப்பட்டு பிராணவாயுவுடன் கலந்து இரத்த தடாகமாகிய இதயக்கமலத்தில் இடது கண்டறையில் பாய்ந்து வலது கண்டறையால் வெளியேறும். பின் விஷநீர் குண்டிக்காயை அடைந்து அங்கு சுத்திகரிக்கப்படும். தொப்புளங்கொடி இச்சலப்பை நரம்புடன் சசந்திப்பாலம் போலத் தொடர்பு கொண்டிருக்கும். இத் தொப்பிளங்கொடி நரம்பை அக்கினிக்கலையென்றும் சூரியக்கலையென்றும் சித்தர்கள் கூறுவர். தொப்புளங்கொடி நரம்பு சலத்துடன் கலந்து சென்ற விசர்நாய் விஷத்தை தன்னகத்தே ஏற்று வைத்திருக்கும். சித்த வைத்தியத்திலே தொப்பளில் இருக்கும் விசர்நாய்ச் சலத்தை தொப்புளை விட்டு சலப்பைக்கு வரச்செய்து சலத்துடன் வெளியேற்றுதல் சிகிச்சை முறையாகும். மருந்து கொடுத்து விஷத்தை வெளியேற்றும் வரை குளிர்ந்த உணவுகளை உண்ணாமல் பத்தியமாக இருக்க வேண்டும். விசர்நாய்கடி சிகிச்சையில் பத்தியபாகம் கவனமாக இருக்க வேண்டும். பாம்பு விஷம், ஏனைய விஷங்கள் சுகப்படுத்திய பின் திரும்பி வருவதில்லை. ஆனால் நாய்க்கடி விசத்தில் சரியாக சிகிச்சையளிக்காவிட்டால் அல்லது பத்திய முறை தவறினால் திரும்ப வர இடமுண்டு. அவ்வாறு திரும்ப வரும் போது ஏற்படும் குணங்குறிகளாவன..



இந்நோயை சுகசன்னி என்றும், குளிர்சன்னி என்றும் அழைப்பர். இந்நிலையில் உடலின் வெளியே குளிர்ச்சியாக இருக்கும். உள்ளே காய்ச்சலும் இருக்கும். குனிய நிமிர முடியாமல் நாரிப்பிடிப்பும், உடல் அசதியாகவும் இருக்கும். உணவு நீரில் வெறுப்பும், வெயிலில் இருக்க விருப்பும், கழுத்து நரம்புகள் உழைதல், சிலருக்கு ஒரு விரைப்பக்கம் இழுத்து வலித்தல், இப்படியான குறிகுணங்கள் இருக்கும். 7-8 மணித்தியாலத்தில் சிகிச்சித்தால் வசப்படும். இக்குறிகுணங்கள் தோற்றப்படுவதற்கு காரணம் குண்டிக்காய்க்கு அந்த விசர் நாயின் விஷம் ஏறினால் மலசலம் தடைப்பட்டு இனந்தெரியாத பயவுணர்வு நெஞ்சடைத்தல், தண்ணீரைக்கண்டு பயப்படல், காற்றுப்படும் போது திக்குமுக்காடல், அந்தரப்படல் ஆகிய குறிகுணங்கள் தென்பட்டால் சுகப்படுத்த முடியாது. ஏனெனில் குண்டிக்காய் செயலற்று விஷம் சுவாசாயத்தை தாக்கி மூச்சுக்கஷ்டம், திக்குமுக்காடல் ஆகிய நிலைகளை உண்டாக்கும்.

என்றும் அன்புடன்

***தம்பு. சண்முகம்***

இந்நூலின் முதல் பகுதி யாழ்ப்பாணத்து சித்த வைத்தியர்கள் உபயோகித்து பயன்பெற்ற அனுபவ முறைகளை எனது கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகளை கொடுத்துள்ளேன். இம்முறைகள் வைத்தியர்கள் பயன்படுத்தக்கூடியவை. அதுமட்டுமன்றி விஷவைத்தியம் கற்கும் மாணவர்களுக்கும் விஷவைத்தியம் சம்பந்தமான ஆராய்ச்சி செய்பவர்களுக்கும் உதவும் என்பது எனது அசையாத நம்பிக்கை. அந்தவகையில் இந்த மருந்துகளும், சிகிச்சை முறைகளும் சித்த வைத்தியசாலைகளில் கையாளப்படும் போது எம்மருத்துவம் என்றும் நிலைக்கும். பின்னிணைப்பில் உள்ள முறைகளை முன்னிற்கு சேர்த்து யாழ்ப்பாண தூயவிஷவைத்தியமுறையை கலக்க விரும்பாமல் அடுத்து பின்னிணைப்பாக சில முறைகளைக் கொடுத்திருக்கிறேன். இது முற்றிலும் முதலுதவி முறைகள் வீட்டில் உள்ள அனைவரும் இம்முதலுதவி முறைகளை அறிந்திருத்தல் சிறந்த பயனைக் கொடுக்கும். பொதுமக்களுக்கும் சித்த வைத்தியர்களுக்கும் உபயோகப்படக்கூடிய வகையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளது. இம்முறைகள் பாடசாலை மாணவர்களுக்கு பாடத்திட்டத்தில் இடம் பெறும் போது அதன் உச்சப்பயனைப் பெறமுடியும் எனக் கருதுகின்றேன்.

வைத்தியர் க.ஸ்ரீதரன்.



## நச்சுயிர்களின் எண்ணிக்கை:-

| | | |
|---|---|---|
| 1. | நல்ல பாம்பு | -08 |
| 2. | விரியன் பாம்பு | -16 |
| 3. | வழலைப்பாம்பு | -04 |
| 4. | மூக்கன் | -02 |
| 5. | சுருட்டை | -04 |
| 6 | .சாரை | -05 |
| 7. | கொம்பேறி மூக்கன் | -02 |
| 8. | கருநாகம்,பரநாகம். கன்நெஞ்சன்,ஊமை, கன்னெரியன்எனும் நாகம் | -05 |
| 9. | பச்சைப்பாம்பு | -01 |
| 10. | சவட்டுப்பாம்பு | -02 |
| 11. | மண்ணுள்ளிப்பாம்பு | -01 |
| 12. | புடையன்பாம்பு | -16 |
| 13. | மன்றெலி | -16 |
| 14. | இருதலைமணையன் | -01 |
| 15. | துன்பம்விளைவிக்கும் எலி | -16 |
| 16. | நஞ்செலி | -01 |
| 17. | சுண்டெலி | -01 |
| 18. | செய்யான் | -06 |
| 19. | ஆறுகால்பூச்சி | -04 |
| 20. | சிலந்திப்பூச்சி | -04 |
| 21. | புலிமுகப்பூச்சி | -01 |
| 22. | பல்லி | -01 |
| 23. | பூரான் | -08 |
| 24. | வண்டு | -120 |
| 25. | ஓந்தி | -10 |
| 26. | செவ்வட்டை | -08 |
| 27. | அரணை | -04 |
| 28. | தேள் | -12 |
| 29. | நட்டவக்காளி | -04 |

| | |
|---|---|
| 30. தவளை | -10 |
| 31. அட்டை | -06 |
| 32. முதலை | -03 |
| 33. புலி | -05 |
| 34 பூனை | -05 |
| 35.பேய்நரி | -01 |
| 36.பேய் கீரிப்பிள்ளை | -01 |
| 37.பேய்நாய் | -01 |
| 38.நாய் | -01 |
| 39.நரி | -01 |
| மொத்தம் | 320 |

## விஷப்பாம்பின் எண்ணிக்கை 64 வகைப்படும்

| | |
|---|---|
| 1. படமெடுத்தாடும் பாம்பு | -08 |
| 2. விஷப்பற்கள் கொண்டு சீறிப்பாயும் தீண்டும் வீரியன் | -06 |
| 3. சாடிக்கடிக்கும் வீரியன் | -04 |
| 4. புடையன் பாம்பு | -06 |
| 5. மண்ணுளிப்பாம்பு | -06 |
| 6. சாரைப்பாம்பு | -03 |
| 7. சுருட்டைப்பாம்பு | -04 |
| 8. கூழைப்பாம்பு | -02 |
| 9. கொம்பேறிமூக்கன் பாம்பு | -02 |
| 10. சபணாக மூக்கன் பாம்பு | -02 |
| 11. வழலைப்பாம்பு | -06 |
| 12. தண்ணீர்பாம்பு | -06 |
| 13. பச்சைப்பாம்பு | -02 |
| 14. இருதலைமணியன் | -01 |
| 15. மலைப்பாம்பு | -05 |
| 16. பூநாகம் | -01 |
| மொத்தம் | 64 |



## நல்ல பாம்பின் பிறப்பு:

நாகபாம்புகள் ஆனித்திங்களில் புணர்ந்து ஆடி. ஆவணித்திங்களில் வயிறுளைந்து கார்த்திகை மாதத்தில் வெள்ளெருக்கன் பூவின் நிறத்தையுடைய 248 முட்டைகளையிட்டு 7 நாட்கள் அடைகாக்கும். அம்முட்டைகளில் ஆண்கரு முட்டைகள் முகிழ்விரியாத எருக்கன் மொக்கைப் போன்றும், பெண் கருமுட்டைகள் வாகை அரும்பைப் போன்றும் இருவகை யாக இருக்கும்.

மேற்கூறப்பெற்ற முட்டைகளையீன்ற தாய்ப்பாம்பு 7 நாட்களில் 228 முட்டைகளை உட்கொண்டு விடும். 4 முட்டைகள் உடைந்து விடும். மற்றைய 16 முட்டைகளும் குஞ்சு பொரித்து குட்டிகளாக உலவும். அக்குட்டிகளுக்கு உளை போன்ற 24 கால்கள் இருக்கும். இவைகள் பிறந்த 28 நாட்களில் படம் எடுத்தாடி விஷத்தைப் பெற்றுக்கொண்டு தனித்தனியே பிரிந்து விடும். 60ஆம் நாளில் செட்டை உரிக்கும் என்றும் ஆறு மாதங்களில் வயிறு, நெஞ்சு, வால் இவை ஒளி பொருந்தியதாக இருக்குமென்றும், வாயின் கீழ்வரிசையில் காளி, காளத்திரி என இரண்டு பற்களும், மேல் வரிசையில் எமன், எமதூதன் என்ற இரண்டு பற்கள் உண்டென்றும் சித்தர் ஆருடநூல் முதலியன கூறுகின்றன.

## கடிவாய் மணத்திலிருந்து இன்ன பாம்பு கடித்ததென அறிதல்

பாம்பு கடித்து பல் அழுந்திய .இடத்தை நுகர்ந்து பார்த்தல்

1. தாழை மலரின் மணம் கமழின் - நல்ல பாம்பு
2 .பாதிரிப்பூ மணம் கமழின் - வழலைப்பாம்பு
3. புளியம்பூ மணம் கமழின் - விரியன்பாம்பு
4. மல்லிகை மணம் கமழின் -மண்டலிப் பாம்பு
5. மிளகு,சுக்குமணம் கமழின் - சிறிய பாம்பு

மேற்கூறிய பாம்பின் கடிவாயிலிருந்து இன்ன பாம்பு கடித்தது என அறியலாம். எந்தவித மணமும் வீசாவிடின் பாம்புக்கடியல்ல என அறியலாம்.

## பாம்புக்கடியால் தீயகுணத்தை உண்டாக்கும் இடங்கள்

அரசமரம், ஆலமரம், ஆற்றுத்திட்டு, ஏரிக்கரை, கிணறு, சந்தைகூடுமிடம், கடக்கரை, தேரடி, நதிக்கரை, நந்தவனம், நாணற்புதர், நீர்வற்றிய தாமரைத்தடாகம், பாழடைந்த கோயில், வீடு, ஊர், புதுமனை, புற்று, பிரப்பம்புதிர், புளியமரம், புன்னைமரம், மயாணம், முகத்துவாரம், முச்சந்தி, முருங்கைமரம், மூங்கிற்புதர், யாகசாலை, முதலிய இடங்களில் எந்தச் சாதிப் பாம்பாகிலும் காலை அல்லது மாலைப்பொழுதில் கடித்தால் அதனால் ஏற்படக்கூடிய விஷம் தீராது. மரணத்தை விளைவிக்கும்.

## பாம்புக்கடியால் தீயகுணத்தை உண்டாக்கும் அவையங்களும் நேரமும்

1. பஞ்சேந்திரியம், தலை, நெற்றி, புருவமையம், தாடை, உதடு, தாழ்வாய்க்கட்டை, தோள், நெஞ்சு, அக்குள். மார்பு, அடிமார்பு, உள்ளங்கை, வயிறு, தொப்புள். ஆண்குறி, பெண்குறி, குதம், உள்ளங்கால் இவ்விடங்களில் கடித்தால் மரணத்தை உண்டாக்கும்.

2. நேரம்:- அயர்ந்து நித்திரை செய்கின்ற காலம், இடி அல்லது மின்னல் உண்டாக்கும் காலம், பாம்பு அடைகாக்கும் சமயம், சூரியோதயகாலம் இச்சமயங்களில் கடிக்க விஷம் எளிதில் தீரலாம்.

### தீராத விஷக்குறி குணம்

பாம்புக்கடி விஷத்தால் தலைமயிர் உதிர்தல், மூர்ச்சை, மேல்சுவாசம், மார்பு கனத்தல். குத்தல், வாந்தி, விக்கல், இருமல், தாகம், உடல்சோர்தல், கண்சிவத்தல், கண்கறுத்தல், தொண்டை அடைப்பு, முதுகும் ஆண்குறியும் கோணுதல், முகம் சில்லிட்டுக் கறுத்தல், வாயில் நுரை தள்ளல், நகத்துவாரங்களிலும் இரத்தம் வருதல், சரீரத்தில் உள்ள அவையவங்களில் காலும், கையும் கறுத்தல். பிறர் முகம் தெரியாவிட்டாலும் மரணம் நிச்சயம். பாம்பு கடித்தவுடன் படத்தை விரித்தானாலும், நிலத்தில் விழுந்து புரண்டாலும், கடித்த இடத்தில் ஆடி அசைவற்றுக் கிடந்தாலும் விஷம் தீராது.



## நாகங்களில் ஆண்,பெண் அறிதல்

பெண் நாகத்திற்கு கடைக்கண் சிவந்திருக்கும். கண் புடைத்திருக்கும். முட்டையின் மீது அடைகாக்கும். விடக்கூடிய மூச்சு உழுந்து வாடை வீசும். படம் ஓர் புறம் ஒதுங்கி நிற்கும். மனிதர்களைக் கண்டால் மருண்டு ஓட்டம் பிடிக்கும்.

ஆண் நாகத்திற்கு கடைக்கண் கருத்திருக்கும். கடிவிஷம் கொடியது. படங்கள் இரண்டிற்க்கும் சரியாக இருக்கும். இரேகை ஒத்திருக்கும்.

## பாம்பு கடிப்பதற்குரிய காலங்கள்

பாம்புகளுக்கு பசி ஏற்பட்ட போது அவைகள் இரைக்காக வெளிச்செல்லும் வாரங்களிலும், இடிமின்னல் இவைகளின் அதிர்ச்சி ஒளி இவற்றினால் கோபம் மேலிட்டிருக்கும். சமயங்களிலும் மனிதர் எதிர்ப்பட்டால் கடிக்கும்.

பாழடைந்த கோயில், மனை, புதர்கள், இருண்டகாடுகள், மரப்பொந்துகள், மலைகள், புற்றுக்கள் ஆகிய இடங்களில் தங்கியிருக்கும். அதுபோது அவற்றிற்குத் தொந்தரவு கொடுத்தாலும் கடிக்கும்.

## விஷப் பற்கடிகளை அறிதல்

பாம்புகளுக்கு விஷப்பற்கள் நான்கு உண்டு. அவைகளில் மேல் வரிசையில் உள்ள பற்களுக்கு

1. காளி
2. காளஸ்திரி என்றும்

கீழ் வரிசையில் உள்ள பற்களுக்கு

3. நீலி
4. நீலகண்டி என்றும் கூறுவர்.

இப்பற்கள் நான்கும் தூண்டில் முள் போன்று வளைந்து துவாரங்கள் உள்ளனவாய் இருக்கும். பாம்பு ஒருவரைக் கடித்தால் விஷம் உள்ள பல்லினது துவாரத்தின் வழியாய் விஷம் சென்று இரத்த நாளத்தில் சேர்ந்து உடல் முற்றும் பரவி உடலை மயக்கி மரணத்தை உண்டாக்கும் மேற்குறிப்பிட்ட நான்கு பற்களின் கடிகள் இருக்குமானால் 98 நாழிகைக்குள் மரணம் ஏற்பட்டு விடும். எந்தவித மருந்துகளும், மந்திரங்களும் பலிக்காது.

## பற்கடி விஷங்களில் தீரக்கூடியதும், தீராத குறிகளும்

1. ஒரு பற்கடியின் விஷம் தோலைப்பற்றி நிற்கும். இதற்கு காலகடி என்று பெயர். இந்நஞ்சை மூலிகைகளின் பரிகாரத்தினால் குணப்படுத்தி விடலாம்.

2. இரண்டு பற்கடி விஷம் சதையைப் பற்றி நிற்கும் இதற்கு அரைக்கடி என்று பெயர். இந்நஞ்சை மருந்தகளினால் குணப்படுத்தி விடலாம்.

3. மூன்று பற்கடி விஷம் எலும்பைப் பற்றி ஏறும் இதற்கு முக்கால் கடி என்று பெயர். இந்நஞ்சை மூலிகைகளாலும், விஷராஜங்க மையினாலும் குணம் ஏற்படும்.

4.நான்கு பற்கடி விஷம் மூளையைப் பற்றி ஏறும். இதையே முழுக்கடி என்று கூறுவர். இந்நஞ்சு மணி, மந்திர, மருந்துகளினால் நீங்குவது கடினம்.

## பாம்புக்கடிக்கு முதலுதவி முறைகள்:-

பாம்பு தீண்டியவரை மனதினால் தாக்கபடவிடக்கூடாது. ஆறுதல் மொழி கூறி கடிவாயிலிருந்து 4 அங்குலம் மேல் தள்ளி கயிறு அல்லது சீலைத்துண்டினால் இறுக்கிக் கட்டிக்கொண்டு கடிவாயிலிருந்த இரத்தம் வெளிவரப்பண்ண துப்பரவான சிறு கத்தியினால் சிறுகக்கீறி கடிவாயிலிருந்து சிறிது இரத்தம் வரப்பண்ணி கடிவாயில் வெந்நீருற்றிக் கொண்டிருக்கவேண்டும். தற்காலத்தில் இம்முறையை ஆதரிக்கவில்லை.

**பாம்பு கடிக்கு சில கைமருந்து முதலுதவிச் சிகிச்சை முறைகள்:**

1. கருந்துளசி அல்லது வெண்துளசி இடித்த சாறு பிழிந்து ஒரு அவுன்ஸ் குடிக்கக் கொடுத்தல்.

2.. வாழைத்தண்டின் சாறு ஒரு அவுன்ஸ் குடிக்கக் கொடுக்கவும்



3. பப்பா இலைத்துளிரும் சுண்ணாம்பும் சேர்த்து கசக்கி கடிவாயில் வைத்து கட்டிவிட விஷம் தீரும்

4. பாம்பு கடித்தவுடன் கடிபட்ட பகுதியை மண்ணெண்ணெயில் அமிழ்த்தி வைத்தால் புகை புறப்படுவது போல கடிவாயிலிருந்து பச்சையாக ஆவி போன்றதொரு வெளிப்படும். அதன் மூலமாய் விஷம் வெளிப்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

5.பாம்பு கடித்து விஷம் தலைக்கேறி அறிவு மயங்கியிருந்தால் மயிலிறகை நெருப்பில் கொழுத்தி அதை ஒரு தென்னோலைக்குழலில் செலுத்தி நசியமிடின் விஷமிறங்கி அறிவு தெளியும்.

6. உத்தமாகாணி வேரைச் சந்தணக்கல்லின் மீது நீர் விட்டு சந்தணம் போலரைத்து கலிங்கம் போடுக. பின்னர் அதில் 7.5 கிராம் உள்ளுக்குக் கொடுப்பின் விஷமிறங்கி உடனே சரீர ஆரோக்கியம் உண்டாகும்.

7. அணிஞ்சில் வேரின் பட்டையை காடியில் அரைத்து காடியில் கலக்கி கொடுக்க காலையில் கொடுத்தால் விஷம் இறங்கும்.

8. 31 மிளகு, 4 உள்ளிப்பல்லு ஆகிய இரண்டையும் தேன்விட்டு அரைத்து எடுத்து உட்கொள்ள விஷம் நீங்கும். பின்பு ஒரு சட்டியில் வேப்பெண்ணெயை விட்டு அது நன்கு கொதித்த பின் அதன் மேல் ஒரு கரண்டி உத்தமாகாணிச்சாறு விட்டு அந்த எண்ணெயில் இருந்து வரும் ஆவியைப் பாம்பு கடித்த வாயில் பிடிக்க விஷக்கடுப்பு நீங்கும்.

9. பூவரசம் பட்டை, சிற்றகத்திவேர்ப்பட்டை, கறியுப்பு ஆகியவற்றைச் சம எடை எடுத்து சாறெடுத்து வடிகட்டி கண், காது, நாசிகளில் பிழிந்திடில் எல்லா விஷங்களும் இறங்கும்.

10. ஒரு நெருப்புக்குச்சி சூட்டைக் கடிவாயில் பிடிப்பதாலும் விஷம் இறங்கும்.

11. கஞ்சாங்கோரையைச் சமூலமாக எடுத்து துவைத்து சாறு பிழிந்து 15 - 45 மிலீ ஒரு நாளைக்கு இருவேளை கொடுக்க விஷம் நீங்கும்.

12. ஆடுதின்னாப்பாலையினது சமூலம், அல்லது ஐவிரலிச் சமூலம் இவற்றில் ஒன்றை துவைத்து பிழிந்தெடுத்த சாற்றில் 15மிலீ 3 நாள் காலை நேரத்தில் கொடுத்து வரின் சர்ப்ப விஷம் தீரும்.

13. பஞ்சபாண்டவர் முல்லை என்பதன் வேர் அல்லது பெருமருந்துக் கொடி வேரின் ஒரு பிடி எடுத்து நீர் விட்டு அவித்து எடுத்த குடிநீரை கொடுப்பின் சர்ப்ப விஷம் தீரும்.

14. முனையுடைய மஞ்சளை சுட்டு கடிவாயில் வைத்து அழுத்த விஷம் முறியும்.

15. கொளுக்கி இலையை பறித்து ஒரு பிடி விழுதுபட அரைத்து எலுமிச்சங்காயளவு உள்ளுக்கு சாப்பிடக் கொடுக்கவும். அன்று உப்பு, புளி சேர்க்காது கஞ்சி குடிக்க கொடுக்கவும்.

16. எட்டி மரப்பட்டையின் உள்தோலை அரைத்து ஒரு பாக்களவு உள்ளுக்கு சாப்பிடக் கொடுக்கவும். 3 நாள் உப்பு, புளி சேர்க்காது பத்தியமாக இருக்க வேண்டும்.

17. பெரியாள்நங்கை அல்லது சிறியாள் நங்கை இலை ஒரு பிடி எடுத்து துப்பரவாக்கி அரைத்து ஒரு பாக்களவு சாப்பிடக் கொடுக்கவும்.

18. இரதை வாழை அல்லது சாதாரண வாழைக்கிழங்கை இடித்து பிழிந்த சாறு ஒரு குவளை குடிக்கக் கொடுக்கவும்.



19. இவ்விஷத்தினால் மாரடைப்பு ஏற்பட்டு மயக்கமானால் தும்பையிலை, துளசியிலை ஒரு பிடி எடுத்துப் பிழிந்த சாறு ஒரு மேசைக்கரண்டி அளவு உள்ளுக்கு கொடுக்க நன்மை பயக்கும்.

20. பாம்புக்கடியினால் தலைக்கு விஷமேறி மயக்க நிலையுண்டானால் வாழை மடல்களைப் பரப்பி அதன் மேல் நோயாளியைக் கிடத்தினால் சுகமுண்டாகும்.

21.அறுகம்புல்லை அரைத்து கடிவாயில் வைத்துக் கட்டினால் விஷம் மாறும்.

22. கடிபட்டவர் மயக்கமானால் அருகிலிருப்பவர் அறுகம் புல்லை சப்பி அதை பிழிந்து மூக்கில் விட விஷம் குறைந்து மயக்கம் தெளியும்.

23. மகிளம் விதையை சுத்தப்படுத்தி வெந்நீர் விட்டு அரைத்து நெல்லி காயளவு உள்ளுக்கு கொடுத்து வெந்நீர் குடிக்கக் கொடுத்தால் நஞ்சு குறையும். எருக்கம் இலையை துப்பரவு செய்து சப்பி விழுங்கினால் நஞ்சு அகலும்.

24. பாம்புக்கடியினால் மயக்கமேற்பட்டு தும்பையிலை கசக்கி பிழிந்து 2 துளிச்சாறு மூக்கில் விட விஷம் மாறும். மூர்ச்சை தெளியும்.

25.தும்பைப்பூ, தும்பையிலை இரண்டையும் ஒரு பிடி எடுத்து இடித்து சாறு பிழிந்து ஒரு மேசைக்கரண்டியளவு உள்ளுக்குக் கொடுக்க சிறிது நேரத்தல் வாந்தியும் பேதியுமாகி உடலில் சூடு உண்டாகும். இதுவே விஷம் தெளிந்து வருவதற்கான அடையாளமாகும். இதிலிருந்த உயிருக்கு ஆபத்தில்லை என்பதை உணரலாம்.

குறிப்பு:-

1. கடிவாயில் பற்றிக் கொண்டு விஷமேறினால் அவ்விடத்தில் நோவும், தினவும், வீக்கமும், எரிச்லும் உண்டாகும். இக்குணங்களில் ஒன்றேனும் இல்லாவிடில் விஷம் ஏறவில்லை என்றே அறிய வேண்டியுள்ளது.

2. சர்ப்பம் கடித்தவுடன் கசப்பு வஸ்துக்களைத் தின்றால் அச்சுவை மாறுகின்றமையாலும், தலைமயிரைப் பிடித்திழுத்தால் நோவு தெரியாமையாலும் விஷம் தலைக்கேறி விட்டதென்றே அறிய வேண்டியுள்ளது.

3. விஷத்தினால் மூச்சடங்கி கிடக்கும் ஒருவர் தேகத்தில் எங்கேனும் ஒரு பேனாக்கத்தியால் கீறுவதனால் அதிலிருந்து இரத்தம்வரின் அவரது உயிர் நீங்கவில்லை என்று அர்த்தம். கீறியவிடத்தில் இரத்தம் வருவதற்குப் பதிலாக நீர் பொசிந்தால் தை, கால் விரல்களைப் பிடித்திழுக்கின் நெட்டி முறியாதிருப்பின் உயிர் நீங்கி விட்டதென அறிக.

4. கடிவாயில் ஒரு செப்பு அல்லது பித்தளைப் பாத்திரத்தை வைத்துப் பிடிக்கும் பொழுது அது சுடுமாயின் கடியுண்டவன் உடலில் விஷமேறியிருக்கிறதென்றும் அது குளிர்ச்சியுடைதாயின் விஷம் இல்லை என்றும் அறிக.

5. விஷக்கடியினால் பீடிக்கப்பட்டவர்கள் 3 நாட்களுக்கு உப்பு, காரம், புளிப்பு, எண்ணெய் சேர்க்கக்கூடாது. கடிபட்டவர் அன்று இரவு மட்டும் நித்திரை கொள்ளவிடக்கூடாது.

கொடுக்கும் ஆகாரம்:- பச்சைப்பயறு, பச்சையரிசிக்கஞ்சி என்பன கொடுக்கலாம்.



## விஷக்கடிக்கு சில மருந்து முறைகள்

**1. விஷ ராஜாங்க மை:**

| | |
|---|---|
| 1. மகிழம்வித்து | - 100மில்லி லீற்றர் |
| 2. அழிஞ்சில் வித்து | - 100கிராம் |
| 3. சுத்தித்த நேர்வாளப்பருப்பு | - 100கி |
| 4. வெண்குன்றிப்பருப்பு | - 100கி |
| 5. நீரவிடம் | - 50கி |
| 6. பால்துத்தம் | - 50கி |
| 7. துருசு | - 50கி |
| 8. வங்காளப்பச்சை | - 50கி |
| 9. பொன்னரிதாரம் | - 50கி |
| 10. இரசம் | - 50கி |
| 11. கௌரி பாடாணம் | - 50கி |
| 12. வெள்ளைப்பாடாணம் | - 50கி |
| 13. தேன்மெழுகு | - 50கி |
| 14. சாதிலிங்கம் | - 50கி |
| 15. கருநாபி | - 50கி |
| 16. கோழித்தலைக்கந்தகம் | - 50கி |
| 17. தவளைப்பாடாணம் | - 50கி |
| 18 குன்றிமணிப்பருப்பு | - 100கி |
| 19. தில்லைவித்து | - 100கி |

மேற்குறிப்பிட்ட வித்துக்களையும், பாடாணங்களையும் முறைப்படி சுத்தி செய்து எடுத்து ஒன்றன் பின் ஒன்றாக குழியம்மியில் இட்டு போதிய பழச்சாறு (எலுமிச்சை) விட்டு 15 நாட்கள் அரைத்து அஞ்சண மை போல் ஆக்கி வழித்து வாய் குறுகிய ஒரு பீங்கான் பாத்திரத்திலிட்டு தேனடையைக் கொண்டு மூடி 48 நாட்கள் பத்திரப்படுத்தவும். பிறகு மருந்தை எடுத்து பாட்டில் பத்திரப்படுத்தவும்.

அளவு:- பணவெடை

அனுபானம்:- பனைவெல்லம்

**தீரும் நோய்கள்-** சகலவிதமான பாம்பு கடிகள், பொல்லாதெனக் கூறப்படும் விரியன் பாம்புக்கடிக்கும், பூரான் கடி, வண்டுக்கடி, நீர்வண்டுக்கடி, செவ்வட்டைக்கடி, எலிக்கடி, பூனைக்கடி, வெறிநாய்க்கடி, நரிக்கடி போன்ற சர்வ விடக்கடிகளும் அக்கடியினால் ஏற்படும் பெருநோய்களும் குணமாகும்.

**பத்தியம்:-** இச்சாபத்தியம் மேற் கொள்ள வேண்டும்.

**குறிப்பு:-** விடம் தலைக்கேறி மயக்கமுற்றவர்களுக்குத் தலை உச்சியைக்கீறி பணவெடை அளவு மருந்தை வைத்து நன்றாக தேய்க்க விடம் நீங்கி மூர்ச்சை உண்டாக்கும்.

## 2. தீராத விஷங்களெல்லாம் தீருவதற்கு விஷக்குழம்பு:-

| | | |
|---|---|---|
| 1. | கருநாபி | - 9 கிராம் |
| 2. | வெண்காரம் | - 17.5 கி |
| 3. | இந்துப்பு | - 17.5 கி |
| 4. | நீர்விடம் | - 17.5 கி |
| 5. | கருஞ்சீரகம் | - 17.5 கி |
| 6. | கெந்தகம் | - 17.5 கி |
| 7. | இரசம் | - 17.5 கி |
| 8. | மனோசிலை | - 17.5 கி |
| 9. | நேர்வாளம் | - 17.5 கி |

மேற் கூறப்பட்ட மருந்துகளை முறைப்படி சுத்தி செய்து குழியம்மியிலிட்டு கம்பிச்சாரம் 9கி சேர்த்து உத்தமாகாணிச் சாற்றாலும் தேங்காய்ப்பாலாலும் தனித்தனியே அரைத்து மைபோல் ஆனபின் சிரட்டைக்கரியும், பனைவெல்லமும் போதிய அளவு சேர்த்து மெழுகு பதத்தில் அரைத்து வழித்து பத்திரப்படுத்தவும்.

அளவு- குன்றி எடை

அனுபானம்:- பனைவெல்லம், சர்க்கரை

தீரும் நோய்கள்:- பாம்புக்கடி, செவ்வட்டை, பூரான்கடி, வண்டுக்கடி, ஒந்தி, தவளை முதலிய விடங்கள் தீரும்.



## மண்டலி விஷம் தீர மருந்து:-

நிலக்கடம்புவேர்
அவுரிவேர்
பேயத்தும்மட்டிவேர்
சித்திரமூலவேர்
கொடிக்கள்ளிவேர்

இவற்றில் எதையாவது ஒன்றை 7 கிராம் எடுத்து தேங்காய்ப்பாலில் அரைத்து மேற்படி 18 வகை மண்டலிக் கடிகளுக்கும் இரண்டு வேளை கொடுக்க குணமாகும்.
மேற்படி மருந்துடன் 10 மிளகு சோத்து அரைத்துக் கொடுக்க விரைவில் குணம் ஏற்படும்.

## எலி:-

எலியில் 18 வகையுண்டு. இதன் கடியால் நடுக்கமுடன் கூடிய காய்ச்சல் காயும், காய்ச்சல் விட்டு விட்டுக்காயும். தலைக்கனம், மூட்டுக்களில் வலி, வீக்கம் ஏற்படும். இதை ஆரம்பத்திலே கவனிக்காவிடின் இருமல், இரைப்பு, காசம் போன்ற நோய்களை வருவித்து தொண்டையில் சளி கட்டி, எலியைப் போன்று குறு, குறுவென்னும் சப்தத்தை விளைவிக்கும்.

இந்நோய்க்கேற்ற மருத்துவம் செய்யாவிடில் உடல் இழைத்து சரீரம் கறுத்து கடைசியில் மரணத்தை உண்டு பண்ணும்.

## மருத்துவம்:-

1. 18 வகை எலிக்கடிக்கும் உருத்திராட்சம் காயைப் பசுவின் பாலில் அரைத்துக் கலக்கிக் கொடுக்க குணமாகும்.

2. திப்பலி, மிளகு, புங்கன்வேர், சீந்தில்இலை இவற்றை தனி எடை எடுத்துச் சம கற்றாளைச் சாற்றில் அரைத்து விஷத்தின் வன்மைக்கேற்ப அளவிட்டு உட்கொள்ள குணமாகும்.

3. பாவட்டை இலையையும் அதன் பட்டையையும் சமவளவாக எடுத்து தூளாக்கி கொட்டைப் பாக்களவு நெய்யில் உட் கொள்ள குணமாகும்.

4. அவுரி, அமுக்கிரா அல்லது அழிஞ்சிற்பட்டை இவைகளில் ஏதாவது ஒன்றை அரைத்து எலுமிச்சங்காயளவு வெந்நீரில் அல்லது பசுப்பாலில் கலக்கிக் கொடுக்க தீரும். மூன்று நாட்கள் காலை, மாலை இருவேளையும் கொடுக்க வேண்டும்.

5. பலாசு இலை அல்லது பட்டையைக் கொட்டைப் பாக்கு அளவு அரைத்து வெண்ணெயில் கலந்து உட்கொள்ள விஷத்தால் உண்டாகிய ஈளை, இருமல் தீரும்.

6. எலிக்கடி விஷத்திற்கு அப்பிரக பற்பத்தை இலைக்கள்ளிச்சாற்றில் மூன்று நாட்கள் கொடுக்க குணமாகும்.

7. கொல்லங்கோவைக்கிழங்கு 20கி எடுத்து வெள்ளாட்டுப்பாலில் நெகிழ அரைத்து மூன்று நாட்கள் காலையில் மட்டும் கொடுக்க குணமாகும்.

பத்தியம்:- உப்பு, புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

குறிப்பு:- கிழங்கு பச்சையாக இருத்தல் நலம்.

## மூஞ்சூறு, பெருச்சாளி, அணில் விஷ நஞ்சிற்கு:-

1. அவுரிவேரை குடிநீர் விட்டுக் கொடுக்க குணமாக்கும்.

2. அப்பிரகபற்பத்தை மலை வேப்பிலைச்சாறு, அவுரி வேர்க் குடிநீர் அல்லது சீயாக்காய் குடிநீரில் ஏதாவது ஒன்றில் கொடுக்க தீரும்.

## செய்யான் கடிக்கு:-

1. எருக்கம்பூவை அரைத்து சுண்டக்காய் அளவு பனை வெல்லத்தில் வைத்து உட்கொள்ள குணமாகும்.

2. கடிவாயில் எட்டி விதையை அரைத்துக் கொதிக்க வைத்துப்பூச குணமாகும்.

3. அப்பிரக பற்பத்தை அரிசி எடையளவு பொற்றிலைக்கையான் சாற்றில் காலை, மாலை இருவேளை 5 நாட்கள் கொடுக்கச் சகல விதமான செய்யான் கடிகளும் மாறும். பத்தியம்:- நல்லெண்ணெய், கடுகு, மஞ்சள், புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.



பத்தியம்:- நல்லெண்ணெய், கடுகு, மஞ்சள், புளி நீக்கி உணவு உட்கொள்ள வேண்டும்.

## பூரான்கடி

பூரானில் கரும்பூரான், வெண்பூரான், செம்பூரான், மண்பூரான், காட்டுப்பூரான், சிறுபூரான் (செவிப்பூரான்), பெரும்பூரான், சாணிப்பூரான், சடைப்பூரான் என ஒன்பது வகை உண்டு.

மருத்துவம்:-

1. பூரான் கடிக்கு பூரானின் நிறத்துடன் சரீரத்தில் தடிப்பு ஏற்பட்டால் ஆகாசக்கருடன் கிழங்கைச் சிறுசின்னி இலையின் சாற்றில் அரைத்து சுண்டைக்காய் அளவு காலை, மாலை இருவேளை 5 நாட்கள் உட்கொள்ள குணமாகும்.

2. மிளகை 10 வீதம் காலை, மாலை இருவேளை 7 நாட்கள் உட்கொள்ள பூரண குணமடையும்.

3. பூரான் கடித்தவுடன் கொட்டைப்பாக்களவு பனைவெல்லத்தை வெற்றிலையில் வைத்து மென்று தின்னக் குணம் ஏற்படும். பத்தியம் காக்கவும்.

## சிலந்திக்கடிக்கு சிகிச்சை:

1. சுண்ணாம்பையும், புளியையும் சமவளவு சேர்த்து கடிவாயில் பூச குணமாகும்.

2. பூவரசம்பழுப்பு, ஆவாரயிலை, தாளியிலைகளில் ஏதாவது ஒன்றை காடிநீர் விட்டு அரைத்து அல்லது அவித்து கடிவாயில் வைத்துக்கட்ட மூன்று தினங்களில் குணமாகும்.

3. அவுரிவேர் 35கி, மிளகு 9கி இரண்டையும் நசுக்கி 1 லிற்றர் நீர் விட்டு எட்டிலொன்றாய் காய்ச்சி வடிகட்டி நாளொன்றுக்கு மூன்றுவேளை கொடுக்க குணமாகும்.

4. மிளகை வேளைக்கு 10 வீதம் காலை, மாலை இருவேளையாக 15 தினங்களுக்கு இடைவிடாது உட்கொண்டு வந்தால் பூரண குணம் கிடைக்கும்.

## ஓணான் கடிக்கு சிகிச்சை:-

1. மூங்கில் குருத்துச்சாறு 100மிலீ எடுத்து அதில் 9கிராம் மிளகுப்பொடி இட்டு காலை, மாலை இருவேளை 5 நாட்கள் கொடுக்க விஷம் நீங்கிக் குணம் ஏற்படும்.

2. காயத்திற்கு ஊமத்தன் இலை அல்லது இலைக்கள்ளி இலை ஏதாவது ஒன்றை அணலில் வாட்டி வைத்துக் கட்டக் குணமாகுும.

## தவளைக்கடி:

1. அகத்திக் கீரைச்சாற்றில் 10கி மிளகுத்தூள் சோத்து காலை, மாலை இருவேளை வீதம் மூன்று தினங்கள் உட்கொள்ளக் குணமாகும்.

## பல்லிக்கடி:-

1. பாகலிலைச்சாறும், பசுவின் பாலும் சமன் சோத்து 3 நாட்கள் உட்கொள்ள குணமாகும்.

2. கடிவாயில் நிலவேம்பு இலையை அரைத்து சிறிது சூடுபடுத்தித் தடவி வரவேண்டும்.

## வண்டுக்கடி:-

1. வண்டுகொல்லி மரப்பட்டையை அரைத்துச் சுண்டங்காயளவு எடுத்து தயிரில் கலந்து காலை, மாலை இருவேளை 3 நாட்கள் கொடுக்க குணமாகும்.

2. ஆடுதீண்டாப்பாலை வேரை அரைத்து சுண்டைக்காய் அளவு பாலில் கலந்து கொடுக்க குணமாகும்.



3. அகத்தியிலைச்சூரணத்தை 5 தினங்கள் காலை,மாலை இருவேளை உட்கொள்ளக் குணமாகும்.
பத்தியம்: நல்லெண்ணெய், கடுகு, மஞ்சள், புளி நீக்கி உணவு உட்கொள்ளவும்.

## மீன்கடி:-

| | |
|---|---|
| 1 நிலவேம்பு | - 10 கிராம் |
| 2. மிளகு | - 3.5 கிராம் |
| 3. பூண்டுப்பல் | - 2 கிராம் |

இம்மூன்றையும் நன்கு நெகிழ அரைத்து மூன்று பாகம் செய்து நாளொன்றுக்கு மூன்று வேளை வீதம் மூன்று நாட்கள் கொடுக்க குணமாகும்.

பத்தியம்:- இச்சா பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

## அரணைக்கடி:-

1.சுக்கு, வசம்பு, மிளகு மூன்றையும் தனித்தனியே கட்டுச் சாம்பலாக்கி மூன்று சாம்பலும் ஒரேயளவாக எடுத்துச் சேர்த்து கால் தேக்கரண்டி அளவு காலை, மாலை இரு வேளை 3 நாட்கள் கொடுக்க குணமாகும்.

அவுரிவேரை முறைப்படி குடிநீரிட்டு கொடுக்க குணமாகும்.

3. சாறணை வேரை இடித்துப் பிழிந்த சாற்றை உடலில் பூசினாலும், பனங்குருத்தை வாயில் வைத்து மென்று சாற்றை விழுங்கினாலும் அரணை நாக்கலால் உண்டாகும் குற்றங்களெல்லாம் குணமடையும்.

## குரங்குக்கடி:-

1. இஞ்சியின் மேல் தோலைச்சீவி அரைத்து நீரில் கலக்கி வடிகட்டி 100மிலீ காலை, மாலை இருவேளை 3 தினங்கள் கொடுக்க தீரும்

2. நிலப்பனையின் இலை, கொள்ளுக்காய் வேளை மருக்கம்பூ, இலவமரத்தின் வோ் இவைகளை நன்றாக இடித்து

மேற்கூறியவாறு 3 முறை மருந்து உட்கொள்ள குணமேற்படும். மருந்து முடிந்தவுடன் பத்தியத்தை முறித்துக் கொள்ள வேண்டும்.

அவுரி வேர்ப்பட்டையை காடி அல்லது பழச்சாறு விட்டு அரைத்து கடிவாயில் தடவி வர நஞ்சு தீரும்.

## நாய்க்கடி

நாய்க்கடியினால் வாயினின்று தண்ணீர் மோர் போல வழியும். கூச்சலிடுகின்ற சப்தம், வியர்வை, விட்டு விட்டுத் தெளிவாக வெளிப்பாடல், மயக்கம், வாயில் நுரை தள்ளல் போன்ற குணங்கள் ஏற்பட்டு கடைசியில் நாய்க் குரைத்தாற் போல் கத்தல் போன்றவைகள் ஏற்படும்.

**மருத்துவம்:-**

பலகரைப் பற்பத்துடன் நாயுருவி இலைச்சாற்றை வேளைக்கு 200மிலீ நாளொன்றுக்கு இரண்டு வேளை வீதம் 3 நாட்கள் கொடுக்க குணம் காணும்.

**பத்தியம்:-**

மருந்து உட்கொள்ளும் 3 நாட்களும் உப்பிலாப்பத்தியம் வைத்து மறு பத்தியமாக 3 நாட்களும் வறுத்த உப்பைக் கூட்டி 7ஆம் நாள் ஓமம் தேய்த்து வெந்நீரில் குளிக்கச் செய்ய வேண்டும்.

1. கடிவாயிலும் மற்ற பாகங்களிலும் நாயுருவி வேரை அரைத்துப் பூச வேண்டும்.

2. நாய் கடித்தவுடன் தும்பைச்சாறு 100மிலீ, நல்லெண்ணெய் 100மிலீ சேர்த்து 3 நாட்களுக்கு காலையில் மட்டும் ஒரே வேளை கொடுத்து மேற்கூறப்பட்ட பத்தியத்தை மேற்கொள்ள வேண்டும்.



## வெறி நாய்க்கடி மருந்து

1. கற்றாழை உப்பு, நாயுருவி உப்பு இரண்டையும் சம எடை சேர்த்து குழியம்மியில் இட்டு நன்கு அரைத்து 3 நாட்களுக்கு கடிவாயில் வைத்துக் கட்ட விஷம் நீங்கும்.

2. பேயத்திவேர், ஆலம்வேர், வேப்பிலை இம்மூன்றையும் வகைக்கு 35கிராம் எடுத்து நன்றாக இடித்துச் சூரணமாக்கி 2 லீட்டர் கழுநீரில் கலந்து கொதிக்க வைத்துக் குழம்புப் பதமானதும் எடுத்து 7 நாட்கள் காலை, மாலை இருவேளை உட்கொள்ள வேண்டும். மேலும் விஷ உபாதைக்குத் தக்கவாறு பேதி மருந்தைச் சாப்பிடவும். இவ்விதம் செய்ய மிகுதியான அனுகூலங்கிட்டும்.

3. கோழி மலத்தை காடியில் வைத்துக்கட்டுக. இவ்வாறு 5 நாள் செய்துவரின் நாய் விஷம் தீரும்.

4. இதரை வாழைத் தண்டை கத்தியால் சுரண்டிக் கடிவாயில் வைத்துக் கட்டுக.

5.பிரண்டையிலையை மஞ்சலுடன் அரைத்து வைத்துக் கட்ட சுகமாகும்.

6. வெடிபலவன்இலை, உள்ளி, மிளகு வகைக்கு 10கிராம் அரைத்து கட்டின் குணம் வரும். புண் மாறும் வரை காலையில் இவ்வாறு செய்க. கடிவாயில் புண் மாறாது தசை வளர்ந்து வரின் நாகதாளியை அரைத்து வளாந்த தசையின் மேல் வைத்து 3 நாள் காலை கட்டிவரின் தசை வளருதல் கரையும். அதன் பின் முன்போல வெடிபலவன் இலையை அரைத்து கட்டி வருக. 15 நாட்களுக்கு குளித்தல் நீக்கவும்.

7. நாய் கடித்த இடத்தில் இரத்தம் வந்தால் அந்த இடத்தைச் சுத்தம் செய்து ஒரு வெங்காயம் அரைத்து தேன் கலந்து கடிவாயில் கட்டவும். நஞ்சு இறங்கி புண் ஆறும். இவ்விதம் 3 நாள் செய்யவும்.

சொறி நாய் கடித்தால் முருங்கையிலையுடன் புண்ணாக்கையும் சமஎடை எடுத்து சிறுநீர் விட்டு அரைத்து கொதிக்க வைத்து கடிவாயில் பூசி வரவும். 10 மிளகை வெற்றிலையில் வைத்துச் சப்பி அத்துடன் 3 பல்லு தேங்காய்ச் சொட்டும் வைத்துச் சப்ப உடன் விஷம் ஏறாது. வேதனையும் தீரும்.

## தேள்க்கடி (பூரான்)-

1. காட்டாமணக்கு கொழுந்தை 5 அல்லது 6 எடுத்து வெற்றிலையில் வைத்து மென்று விழுங்க கடிவாயிற்கு விஷம் இறங்கி விடும்.

மேற்படி கொழுந்தும் சிறிது சுண்ணாம்பும் ~~சேர்த்து~~ கசக்கி கொட்டு வாயில் வைத்துச் சிறிது அனல் காண்பிக்க கொட்டுவாயை விட்டு விஷம் இறங்கி விடும்.

2. கடல்நீரை 5 அல்லது 6 முறை வடிகட்டி ஒரு போத்தலில் வைத்துக் கொண்டு தேள் கொட்டியவுடன் கொட்டிய பாகம் வலப்புமாக இருந்தால் இடது காதிலும் இடது புறமாக இருந்தால் வலது காதிலும் இரண்டு மூன்று துளிகள் விட்டு கண்களிலும் இரண்டு துளி விட தேள் விஷம் உடனடியாக குணமாகும்.

3. கொல்லன் கோவைக் கிழங்கை அரைத்து புன்னைக்காயளவு உருட்டி உள்ளுக்குக் கொடுக்கக் குணமாகும்.

4. வெள்ளைப்பாஷாணத்தை கொட்டு வாயில் வைத்து சிறிது தண்ணீர் விட உடன் விஷத்தை இறக்கி விடும்.

5. ஈரவெங்காயத்தை நசித்து கடிவாயில் வைத்து சிறிது நேரம் தேய்க்க கடுப்பு உடனே தீரும்.

6. நவச்சாரத்தில் சிறிது எடுத்து சுண்ணாம்பை வைக்க அது நீராகி விடும். அந்நீரில் சொட்டு கடிவாயில் விட வேதனை மாறும்.



7.சுண்ணாம்பை கடிவாயில் பூசி விட கடுப்பு தீரும்.

8. கடிவாயில் தேசிக்காய்ப்புளியை வெட்டித் தேய்க்க விஷம் தீரும். 8. 10 மிளகு 1 வெற்றிலை வாயிலிட்டு மென்று தின்னச்சுகமாகும்.

9 .விஷம் உக்கிரமடையாதிருக்க செய்ய தேசிப்புளி விதையை எடுத்து உப்பு சிறிது எடுத்து நீரில் கலந்து அருந்தினால் இரத்தத்தில் விஷம் பரவாதிருக்கும்.

10. தேள் கடித்தவுடன் உப்பு 10 எடுத்து நீரில் போட்டு தேள் கொட்டிய பக்கத்து எதிர்ப்பக்கத்தில் உள்ள கண்ணில் 1 அல்லது 2 சொட்டு விட விஷம் இறங்கிவிடும். இதை உடன் செய்ய வேண்டும்.

## நட்டுவக்காலி கடிக்கு மருந்து

1. வேலிப்பருத்தி, ஆடுதிண்டாப்பாலை இவை இரண்டையும் சமஎடை தூள் செய்து வைத்துக் கொண்டு வெரகடியளவு வெந்நீரில் உட்கொள்ள தீரும்.

2. எட்டிவேர்ப்பட்டையைக் கழற்சிக்காயளவு பிரமாணம் அரைத்து வெந்நீரில் கரைத்து கொடுக்க குணமாகும்.

3. சுண்ணாம்பை பூசிவிட்டு கத்தரிக்காயைச் சுட்டுக் கடிவாயில் வைத்துக் கட்டவும்.

4. சுண்ணாம்பு, ஒட்டறை இரண்டையும் சேர்த்து மசித்து கடிவாயில் போட்டால் குணமாகும்.

5. வெள்ளைப்பாஷாணம் 5கிராம் எருக்கலம்பால் விட்டரைத்து குளிசைகளாக தட்டி நிழலில் உலர்த்தி கடிவாயில் வைத்து சூடு காட்ட விஷம் மாறும்.

6. புகையிலை மிகவும் நச்சுத்தன்மை பொருந்தியது. அது போல நச்சு நீக்கியாகவும் வேலை செய்யக்கூடியது. புகையிலையை கரைத்து கடித்த பக்கத்துக்கு எதிர்பக்கத்து கண்ணில் விட்டால் விஷம் இறங்கும்.

## புலிமுகச்சிலந்தி

1. பலாக்காயின் பாலை கடிவாயில் வைத்து நெருப்பு மூட்டிய தேங்காய் பொச்சு மட்டையை அதன் மேல் பிடிக்க மாறும்.

முற்காலத்தில் பலாக்காய் வெட்டியதும் அதன் பாலை முற்றத்திலுள்ள மரத்தில் அப்பி வைப்பார்கள். இது ஏன் என பலருக்கு புரியாதிருந்தது. புலிமுகச்சிலந்தி கடித்தவுடன் மரத்திலே அப்பிய பலாக்காயின் பாலை எடுத்து கடிவாயில் வைத்து நெருப்பினால் சூடேறும்படி செய்து சுகம் கண்டுள்ளார்கள்.

2. உப்பு, புளி, மிளகு, ஏலம் 5 கிராம் எடுத்து அரைத்து கடிவாயில் பூசிவிடவும். இவ்வாறு 3 நாட்கள் காலை, மாலை செய்து வருவதுடன் 10 மிளகு அவித்த நீர் 1 செம்பு விட்டு எட்டிலொன்றாக்கி அதை முதல் நாள் வெறும் வயிற்றில் குடித்து அடுத்த நாள் பேதி குடிக்க வேண்டும். (வைத்தியரை அணுகினால் விஷப்பேதி தருவார்கள்) அடுத்த நாளும் மிளகு அவித்த நீர் குடிக்க வேண்டும்.

**பத்தியம்:-** கறுத்த சாமி அரிசியில் ஆக்கிய சாமிக்கஞ்சி மட்டும் குடிக்கவும்.

3. சிலந்தி கடித்த இடத்தல் தடிப்பும், அரிப்பும் இருக்குமானால் ஆடுதிண்டாப்பாலை, மிளகு, பச்சை மஞ்சள் அரைத்து கடித்த இடத்தின் மெல் பற்றிட அரிப்பு, தடிப்பு குணமாகும்.

4. ஆடுதிண்டாப்பாலை வேரை பால்விட்டு அரைத்து ஒரு உருண்டை பாக்களவு காலை ஒரு வேளை மட்டும் 3 நாட்கள் சாப்பிட விஷம் தீரும்.

**சில விஷங்களில்**

***சிகிச்சை:-*** தயிர்வேளை, குப்பைமேனி, கறிமுருங்யையிலை இவற்றில் ஒன்றின் சாற்றில் வலது பக்கம் விஷம் தீண்டியிருந்தால்



இடது காதினுள்ளும் இடது பக்கம் விஷம் தீண்டியிருந்தால் வலது காதினுள்ளும் பிழிந்து விடச் சுகமாகும்.

**விஷக்கடிவாயிலுண்டாகும் வீக்கம், குத்து, வலிகளுக்கு ஒத்தடம்**

அவுரிவேர்,.எருக்கின்வேர், அமுக்கிரா, கறிமஞ்சல்,மிளகு, முருங்கைப்பட்டை, நொச்சிப்பட்டை சரி பங்கு எடுத்து இடித்து வறுத்து வேப்பெண்ணெய் விட்டுக் குழைத்து பொட்டணம் கட்டி வலியுள்ள இடத்தில் ஒத்தடம் கொடுத்து அதில் வைத்து கட்டிவிடச் சுகமாகும்.

## மயிர்க்கொட்டி

இதன் மயிர் பட்ட இடத்தில் வீக்கம், தினவு, சொறிவு ஏற்பட்டு நோயாளி வேதனைப்படுவார். அவ்விடத்தில் நல்லெண்ணெய் பூசி அம்மயிர்களை கூரிய கத்தியினால் வழித்து எடுக்க வேணும். அதன் பின் நல்லெண்ணெய் பூசவும். மயிர்க்கொட்டி மயிா கண்ணுக்குள் விழுந்து கண் வீங்கி வேதனை உண்டாகும் இதனை நீக்க நன்றாக பழுத்த தேன்கதலி வாரைப்பழத்தை தோல் நீக்கி விட்டு அதை நல்லெண்ணெயில் போட்டு எடுத்து எடுத்து கண்ணில் வைத்துக் கட்டி படுத்துறங்கினால் குணமாகும்.

## கரப்பான் பூச்சி

இது அவ்வளவு விஷம் பொருந்தியதல்ல. இவ்விஷத்திற்கு மஞ்சளுடன் சிறிது சுண்ணாம்பு பூசினாலே போதும்.

## அறணைக்கடி

இது யாரையும் கடிப்பதில்லை. கடித்து விட்டால் விஷமாகும். சிறிதளவு பனைவெல்லம் வாயில் போட்டு சாப்பிட நஞ்சு முறியும். சாறணைவேரை அரைத்து சிறுநிருடன் கலந்து உள்ளுக்கு குடிக்க நஞ்சு பரவாதிருக்கும். இதை அரைத்து கடிவாயில் வைத்துக் கட்டவும்.

“அட்டை கடித்தால் குட்டை அறணை கடித்தால் மரணம்‘ என்பர்.

"அறணைக்கடிக்கு ஆற்றும் சிறுகுறிஞ்சான்" எனப்பழமொழி உண்டு.

அறணைக்கடி நஞ்சுக்குறிகுணங்கள்- உடம்பு முழுவதும் நடுங்கும். வாயிலிருந்து நுரை விழும்.

## மண்ணுண்ணிப்பாம்பு

மண்ணுண்ணிப்பாம்பு கடித்தால் மலையிலும் மருந்தில்லை என்றும் அதற்கு மருந்து மடியிலிருக்கிறது எளவும் கூறுவர். மடியிலுள்ள மருந்து சுண்ணாம்பு. நல்லெண்ணெயும் குரக்கன் கூழும் கலந்து 7 நாட்கள் உள்ளுக்கு கொடுக்க குணமாகும்.

## ஓணான் கடி

ஓணான் கடித்த இடம் பிறைபோன்று காயம் உண்டாகும். அதில் வீக்கம்,நமைச்சல், குத்தல், வேதனை, உடல.். சோருதல், மலத்தில் பல நிறம் தோன்றல்.

**சிகிச்சை:-** மூங்கில் குருத்து அடித்துச் சாறு பிழிந்து 2 மேசைக்கரண்டி, வெருகடியளவு (இரண்டு விரல் பிடியளவு) மிளகுத்தூள் போட்டு 5 நாள் காலை, மாலை குடித்து வரவும்.

## காணாக்கடி

ஒரு வகையான சிலந்தி மனிதர் நித்திரையிலிருக்கும் போது கடித்து விடும். ஆனால் உடனே வலி தெரியமாட்டாது. விடிந்த பின் கடிவாயில் வீக்கம் சிறு வேதனையுண்டாகும். இப்படியான குணங்குறி தென்படில் காணாக்கடி எனக் கொள்ளவும்.

**சிகிச்சை:**

1. பொன்னாவரையின் சாற்றைப் பூசிவரின் குணம் தெரியும்.
2. குப்பைமேனி இலை, மிளகு இரண்டையும் அரைத்து சிறுபிள்ளையின் சலத்தில் குழைத்துப் பூசவும்.



3.அடுப்புச்சாம்பல் அல்லது திருநீறு பூசினால் குணம் உண்டாகும்.

4. ஒரு குடம் நீரில் ஒரு பிடி அறுகம்புல்லைப் போட்டு இரண்டு மணிநேரம் ஊறவைத்து அதில் குளித்து விட்டு 7 மிளகைச் சப்பி விழுங்கின் குணம் காணும்.

## நகவிஷம்

மனிதனின் நகத்திலும் விடம் செறிந்துள்ளது. உடலில் ஏற்படும் சொறிவு, பருக்கள் முதலியவற்றில் நகத்தால் தீண்டுவதைத் தவிர்க்கவும் தவறின் அதனால் தீங்குகள் ஏற்படும்.

## நச்சுத்தன்மை பொருந்திய எவை கடித்தாலும் பொது சிகிச்சை விபரம்

**பாம்பு, தேள், வண்டு எது கடிக்கினும் பொதுவாக :-**

1. பச்சை வாழைத்தண்டு மட்டையை இடித்துச் சாறு பிழிந்து அத்துடன் நெல்லிச்சாறும் கலந்து ஒரு குவளை குடிக்க நஞ்சு இல்லாது போகும்.

2. ஆடுதிண்டாப்பாலையின் வேர் இடித்துத் தூளாக்கி வைத்துக் கொண்டு 3 விரல்தூள் உள்ளுக்குள் கொடுத்து வெந்நீர் குடிக்க சுகமாகும். இந்நாளில் கடும் பத்தியமிருக்கவேண்டும்.

3. மஞ்சளுடன் சிறிது பசுவின் சாணத்தைச் சேர்த்து நன்றாக அரைத்து கடிவாயில் பூசி விடவும்.

கடி எதுவாக இருப்பினும் கடிவாயில் வீக்கம் இருக்குமானால் குப்பைமேனி இலைச்சாற்றுடன் சிறிது சுண்ணாம்பைக் கலந்து பூச வீக்கம் வேதனை மாறும்.

## பூனை, எலி, நாய், பூரான் என்பன கடித்தாலும்:-

மஞ்சல், உப்பு, சுண்ணாம்பு சமவளவு எடுத்து அரைத்து கடிவாயில் 3 நாட்கள் அடுத்து பூசி வர எந்த விஷமும் மாறும்.

கடித்தது எதுவென்று தெரியாவிட்டாலும் பூவரசம் பூக்களில் 10 எடுத்து நசுக்கி ஒரு தம்ளர் நீர் விட்டு அதை அரைப்பங்காக்கி எரித்து காலை, மாலை. ஒரு மேசைக்கரண்டி குடித்து வர அரிப்பு, புண் இருப்பின் மாறும். இம்மருந்து சாப்பிடும் போது கடுகு, எண்ணெய், மீன் நீக்கவும்.

தும்பை இலைகளையும் சுத்தப்படுத்தி இடித்து சாறு பிழிந்து 1 மேசைக்கரண்டி குடித்து வரவும். அத்துடன் இலை, பூ அரைத்து கடிவாயில் போடச் சுகமாகும்.

எது கடித்தது எனச் சந்தேகப்படும் போது உடனடியாக படிகாரத்தைத் தூளாக்கி அதில் 2 விரல் தூள் அரை தம்ளர் வெந்நீரில் கலக்கி உள்ளுக்கு கொடுக்க சுகம் காணும்.

விடம் தீண்டப்பட்டவர் ஆணாக இருப்பின் 12 வயதுக்கு உட்பட்ட சிறுமியின் சிறுநீரையும், பெண்ணாகவிருந்தால் 12 வயதுக்கு உட்பட்ட சிறுவனின் சிறுநீரையும் எடுத்து ஒரு மேசைக்கரண்டியளவு உள்ளுக்கு கொடுக்க சுகமாகும்.

கருஞ்செம்பை வேரையும் அதன் விதையையும் சமபங்கு எடுத்து இடித்து சூரணமாக்கி அதில் இரண்டு விரல் தூள் நெய் அல்லது வெண்ணெய் கலந்து ஒரு நாளைக்கு 3 வேளை கொடுத்தால் சிறுபாம்பு, தேள், வண்டு, பூரான், மரஅட்டை போன்றவற்றின் நஞ்சு தீரும்.

கடிபட்ட இடத்தில் கருஞ்செம்பை மரவேரின் கனத்த பாகத்தை எடுத்து கல்லில் கரைத்து மேல் பற்றாகப் போடுவது நல்லது.

துரிசு, துத்தம், மிளகு வகை ஒரு களஞ்சு நேர்வாளம் ஒரு களஞ்சு இவற்றை தேசிப்பழச்சாற்றில் ஊற வைத்து 4-5 நாட்களின் பின் எடுத்து தேசிப்புளிச்சாற்றிலரைத்து பயறளவு மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்க. எந்த நஞ்சுக்கடியாளாலும் ஒரு மாத்திரை எடுத்து சிறிது நீர்



விட்டரைத்து கண்ணில் மைபோல் தீட்டினால் போதும் சூரியனைக்கண்ட பனிபோல மாறும்.

## அலரிக்காய் வேர் உண்பதால் ஏற்படும் நஞ்சுக் குணங்களும் சிகிச்சையும்

இச்செடியை கிராமங்களிலும், கோவில்களில் வளர்க்கிறார்கள். இது ஒரு பூச்செடி. இதன் பூ, காய், இலை, பால் யாவும் விடமாகும். ஆனால் ஆடுகள், காயின் மேல்தோல், இலை, பூ என்பன உண்ணுகின்றது. அவை மரணிப்பதில்லை. ஆனால் இதன் விதையில் உள்ள பருப்பும், எண்ணெயும் கூட்டிச் சாப்பிட்டால் கொடிய விடமாக மாறுகிறது. இதனால் தமது உயிரைப் போக்க மக்கள் அதிகளவில் பயன்படுத்துகிறார்கள். இதன் பருப்பில் ஒரு வித வெறுப்புள்ள சுவையும், துர்நாற்றமும் கொண்டதாகவுள்ளது. இதனால் இதைக் கொண்டு மற்றவர்களை கொலை செய்வதற்கு பயன்படுத்துவதில்லை. அதிகம் கனமான கோபத்தால் மனதை வைரமாக்கி இக்கொடிய நஞ்சை உட்கொள்கிறார்கள்.

### நஞ்சுக்குறிகுணங்கள்:-

வாந்தி, பேதி, வாயில் நுரை தள்ளல், வயிற்றில் சகிக்கமுடியாத கடுப்பு, மயக்கம், பல்லுக்கிட்டிக் கொள்ளல் போன்ற குணங்களை வெளிக்காட்டி சில மணி நேரங்களில் மரணத்தை உண்டாக்கும்.

### முறிவு:-

கடுக்காய் 20கிராம் 750 மிலீ நீர் விட்டு அரைவாசியாக குறுக்க எரித்து அதை அருந்தவும். அல்லது கலப்பைக்கிழங்கு 20கி எடுத்து 750 மிலீ நீர் விட்டு அரைவாசியாக குறுக்க எரித்து அதை அருந்தவும்.

## மருந்துச் சரக்குகளின் சுத்தி முறைகள்

சில மருந்துச் சரக்குகள் நச்சுத்தன்மையுடையவை. அவற்றை சித்த மருத்துவ முறைப்படி தாவரச்சாறுகள், பால், காடி, சிறுநீர் போன்றவற்றில் இட்டு சுத்தி செய்து நச்சுத்தன்மையகற்றியே மருந்துகளில் உபயோகிக்கிறார்கள்.

### 1. பவளம்:-

பசுவின் மோரில் கிளியாகக் கட்டி ஊறப்போட்டு உலர்த்தி கொள்ளவும்.

### 2. லிங்கம்:-

பழச்சாறு, முலைப்பால், குப்பைமேனிச்சாறு மூன்றையும் சமனாகச் சேர்த்து லிங்கத்திற்கு சுருக்கு கொடுக்க சுத்தியாகும். நடைமுறையில் வைத்தியர்கள் பழச்சாற்றில் ஒரு நாள் ஊறப்போட்டு சுத்தியாக்கின்றனர்.

### 3. வீரம்:-

இளநீரில் 10கிராம் கற்பூரம் சேர்த்து தோலாயந்திரமாக கட்டி எரிக்க சுத்தியாகும்.

### 4. வெள்ளைப்பாஷாணம்:-

மிளகை அரைத்து 1.4 லீற்றர் நீரில் கலக்கி வெள்ளையை கிளியாகக் கட்டி தண்ணீர் சுண்டு மட்டும் காய்ச்சி எடுத்து கழுவி உலர்த்தல்.

முடித்துக் கட்டி சுண்ணாம்பு நீரிலும், பின் பசுவின் பாலில்

### 5. மனோசிலை:-

அகத்திப்பூச்சாற்றில் 2 நாள் ஊற வைக்க சுத்தியாகும்.

### 6. குக்கில்:-

எருமைமோரில் ஊறப்போடல்

### 7. குந்திரிக்கம்:-

சாராயத்தில் ஒரு நாள் ஊறப் போடல்.



### 8. மயில்துத்தம்:-

பசுவெண்ணெயில் 2 நாள் ஊறப்போடல்

### 9. நாகம்:

நல்லெண்ணெயில் ஒரு நாள் ஊறப்போட்டு மறுபடியும் எலுமிச்சம் பழச்சாற்றில் 60 நாழிகை ஊறப்போட்டு கழுவி எடுக்க சுத்தியாகும்.

### 10. காரியம்-

வெள்ளாட்டு நீரில் பிரண்டைவேர் அரைத்துப் போட்டு கலக்கி நல்லெண்ணெயில் உருக்கி சாய்க்க நல்ல சுத்தியாகும்.

### 11. பொன்னிமிளை:-

3 நாள் காடியில் காய்ச்ச சுத்தியாகும்

### 12. அபிரேக்கு:-

10 நாள் காடியில் ஊறப்போடல்

### 13. கல்மதம்:-

அவுரிச்சாற்றில் கழுவி எடுத்தல்.

### 14. சேங்கொட்டை:-

ஒரு நாள் உதயத்தில் நீரில் போட்டு மறுநாள் உலர்த்தல்.

### 15. துத்தம், துரிசு:-

தயிரில் ஒரு நாழிகை ஊறப்போடல்.

### 16.எலிப்பாஷாணம்-

பசுவின் கோமயத்தில் 7 நாள் ஊறப்போடல்

### 17. ஊமத்தை விதை:-

ஒரு சாமம் நீரில் ஊற வைத்தல்.

## 18.எட்டி:-

நெல்லில் அவித்து சிறுகீரை ரசத்தில் ஊறிய பின் தேற்றான் கொட்டை ரசத்தில் வேகவைத்து எடுத்தல்.

## 19. கருஞ்சீரகம்:-

சுண்ணாம்பு நீரில் 7 சாமம் ஊறிய பின் உலர்த்தல்.

## 20. இரசம்:-

முதலில் கல்வத்தில் இட்டு ஒட்டடையில் அரைத்து பின் மஞ்சள் மாவில் அரைத்து பின் செங்கட்டித்தூளில் அரைத்து பின் வெற்றிலைச்சாற்றில் அரைத்தல் பின் நீர் விட்டு கழுவி துணியினால் ஒற்றி எடுக்க மணியாக வரும். சுத்தி சரியாயின் சீனி போட்டு அரைக்க கறுக்காது.

## 21. அயப்பொடி:

அயத்தில் காந்தத்தை செலுத்தி காந்தத்தால் பிரித்தெடுத்து பின் தாச்சியில் வறுத்து சிவந்ததும் நல்லெண்ணெய் விட்டு காய்ச்சி பொங்கிய பின் தாச்சி ஆறவிட்டு பின் சீயாக்காய் கசாயத்தால் கழுவி பின் தாச்சியில் இட்டு வறுத்து எண்ணெய் நீக்கப்பட்டு தேசிப்புளியில் ஊறப்போட்டு வெயிலில் உலர்த்தல்.

## 22. பூநீறு:-

நீரினால் கழுவப்பட்டு அகலில் இட்டு ஊற வைத்தல் இவ்வாறு 10 தடவை செய்தல்.

## 23. நேர்வாளம்:-

நேர்வாளம் கிளி செய்து பானையில் தோலாயந்திரமாக கட்டி

1. சாணப்பாலில் அவித்தல் (நேர்வாளம் மூழ்கவும்) பின் பொங்கியதும் நீரில் கழுவி காயவிட்டு நேர்வாளத்தை உடைத்து அதன் வித்துனுள் இருக்கும் வித்திலையை நீக்கி பின் கிளி கட்டி
2. தீட்டாத பச்சையரிசி,நீரில் அவித்து
3. பாலில் அவித்து
4. .நெய்யில் வறுத்தல்.



## 24. கந்தகசுத்தி:-

மருதோன்றியிலையை அரைத்து ஒரு பானையில் தயிர் இட்டு அதனுள் மருதோண்டிக் கற்கத்தை இட்டு ∴மேல் சட்டி மூடி சீலை மண் செய்து குழி தோன்றி பானையை வைத்து மேல் வறாட்டியிட்டு புடமிடுக பின் மறுநாள் எடுத்து மணியாக உருகிய கந்தகத்தை முதல் மாதிரி பால் இட்டு செய்க பின் சுத்தியாகும்.

## 25. இருவி:-

சிறு துண்டுகளாக நறுக்கி 3 நாள் சிறுநீரில் போட்டு ஊறவிடல்

## 26. நாபி:-

சிறு துண்டுகளாக்கி கோநீரில் 3 நாள் ஊறப்போடல்

# Snake bite

Snake bite is a major public health health problem in certain of SriLanka. The families of venomus snakes are Attactaspidiae, Elapidae, Hydrophidae and Viperidae. The major families in the SriLankan subcontinent are Elapidae which includes common cobra, Kisg cobraand Krait, Viperidae which includes Russell's viper, pit viper and saw-scaled viper and Hydrophidae. The Majority of bites and consequent mortality of bites and consequent mortality is attributable to 5 species viz. Ophiophagus hannah (king cobra), NajaNaja (common cobra), Daboia rusellii (krait) and Echis carinatae (saw -scaled viper). Most bites in SriLanka are by Viperids, mainly saw- scaled and Russell's viper.

All poissonous snakes are divided into families - Colubridae or Colubrine snakes ( cobra, king cobra, crait, banded cralt) and Viperidae or Viperine snakes (Russel's viper or daboia, Aechis carinata or sawscaled viper). The snake venoum is ejected from the salivary glands situated below and behind the ears on ether side opening into the poisonous fang. During bite the poison is inoculated. Some species may eject it in stream. The venous contains various toxic materials. eg. neurotoxin, cardiotoxin, haemolysin agglutinin proteolytic fibrinx fermen, choline esterase, thromboplastin, antifibrin ferment, ect. Apart from the physical differences between poisonous and non -poisonous snakes the character of bite is more important clinically. In poisonous snake bite two distinct deep fang marks are present. while in non-poisonous snake bites, more than two fang marks are present. Besides this, local oedema, haemorrhage, oozing of haemolysed blood, ecchymoses, ect.



are commnly seen in poisonous snake bites. Oozing is very important because oozing continues only when poison has been injected into the wound.

Clnical features of Colubrine snake bite:-
1.Local:- Burning, irration, tingling, redness, swelling, oedema and inflamation may be seen spreading above and below the site of bite.

2. Genetral:- Within two hours, patient feels extreme motor weakness and because drowsy. Gradually the paralysis spreads to all four limbs and neck so much so that the patient cannot walk, stand or move the limbs and the head drops down. Due to paralysis of the lip, tongue and the throat muscles speech becomes defective, swallowing is difficult and saliva is collected in the mouth. Nausea and vomiting may may develop. Respiration rate becomes hurried, patient becomes severely toxic and drowned with cyanosis due to paralysis of respiratory muscle as a result of bulbar paralysis. In such state of affairs even it respiration stops heart continues its beating for sometime. Patient is conscious upton the last.

Clnical features of Viperine snake bite:-
1.Local:- Pain, swelling, odema and oozing of haemolysed blood may be present. If patient survives, suppuration, sloughing or gangrene may develop.

2. General:- Within few minutes after bite there is nausea, vomiting, epigastric pain with severe circulatory collapse. Limbs become cold with clammy sweat, pulse becomes weak and quick, Bp is low. There is bleeding from various mucous surfaces and natural body orifices. Pupils become dialated and non-reacting to light. Consciousness is lost.

**Management:-**

1. Reassurance of the patient is very important.

2.Local treatment:- When the site of bite is on any limbs a venous tourniquet should be applied immediately 10-15 cm away from the site of bite. A local incision may be made with minimal injury to blood vessels and the part is thoroughly washed with normal saline.

3. General :- Polyvalent antisnake venom serum should be given after sensitivity test 20cc should be injected subcutaneously, 20cc injected I.M and another 20cc may be given in the I.V drip. After this 20cc I.V is to be repeated every 6 hourly. If this is not available then polyvalent antivenin may also be used. If the snake is known then specific antiserum should be preferred. Antihistaminics and Steroids may also be given. Blood transfusion, sometimes exchange transfusion may also be given. Oxygen inhalation and antibiotics may be given to prevent secondary infection. Circulatory stimulants, I.V. fluids are required to maintain blood presure. Tetanus toxide should be given. For acute renal failure apart from conservative treatment haemodialysis or peritoneal dialysis may be required.

## Scorpion Sting

The poison glands in scorpion are situated in the last postnatal segment of the tail. The venoum is injected into the site of bite. Of various toxins in the poison, neurotoxins and haemorrhagins have been isolated.

Clinical Features:

Severe pain, tingling and numbness, swelling and redness of the local site develop immediately after sting. General



features include weakness, exhaustion, slowing of respiration, weak and quick pulse, low blood presure, cold- clammy extremmitties with circulatory cllapse, ECG evidence of myocardial involment have been found. Rarely there may be pulmonary odema with haemoptysis. Evidence of general haemorrhage may also be seen.

Treatment: Pain is relived by immersing the part in hot water. Lignocaine 1% 2-5 cc should be infiltrated around the puncture mark and in severe cases pethidine hydrochoride may be injected 100mg I.M. Symptomatic treatment for ciculatory collapse should be done. Whenever specific serum is available it should be given in a dose of 5cc subcutaneously.

## Corrosive Acids

The mineral acids cause corrosive action of the local parts resulting in severe burn and ultimate development of collapse without there being any systemic action. Certain volatile acids like formic acids, acetic acid, hydrobromic acid ect. may cause severe cough due to irritation of the respitory tract. Pulmonary odema may follow in such cases.

Clinical Features:-

Symptoms develop immediately. There is burning and acute pain in the mouth, pharynx, oesophagus and stomach. There is vomiting of blood stained material or brownish black material mixed up with shred mucous membrane of the GIT. There may be thirst, dyspnoea, cough, mouth and lips are excoriated sodden and discoloured , suffocation convulsion, shock, perforation of the stomach and dehydration are the causes of death in such cases.

## Corrosive Alkalies

Corrosive alkalies are less commonly used as poisons. Some of the corosive alkalies are Sodium hydroxide, Potasium hydroxide, Sodium carbonate, Potassium carbonate, Ammonia, ect.

Clinical Features:
mucus membrane is eroded, sweling and slough formation and sometimes soap-like material are found, burning pain from the mouth to stomach, nausea, vomitus contain mucus, frothy ammonia and its products may cause cough, suffocation from odema of glottis and larynx.

## Alcohol

Commnly alcohol means Ethyl alcohol. After oxidation this is converted into acetic acid and aldehyde. Absolute alcohol contains 99.95 % of alcohol but rectified spirit contains 90% of alcohol by volume.

Alcohol beverages also contain variable percentage of alcohol as given below.

| | |
|---|---|
| Beer | -4%- 8% |
| Wine | -10%-15% |
| Champagne | -10%- 13% |
| Whisky and Brandy | -40%-50% |
| Gin and Rum | - 51%-59% |

Methyl Alhocol can produce poisoning both by inhalation and ingestion. Common source is is taking methylated spirit some times from paint removers and varnishes. It is more toxic than ethl alcohol.



Clinical Features:-
Headache, nausea, vomiting, epigastric pain, bluring of vision and blindness,dialation of the pupil , papiloedema, acidotic breathing and gradually unconsciousness may develop.

Investigation :-
1. Features of metabolic acidosis will be present.
2.Blood levels of methanol is above 300mg % in cases of severe poisoning.

## Opium, Morphine

Opium is the dried juice which is obtained after giving incision to the unripe white poppy capsule. The pricipal alkaloids of opium used for medicinal purpose are morphine and codeine. Pethadine contains morphine, papverine and atropine.

Fetal dose:- 200mg of Morphine or 2mg of Opium
Clinical Features:-
State of excitement, euphoria, mental excitment, hallucination, stupor characterised by headache, giddiness, heaviness of the limbs, and irresistable sleep.The pupils are contrcted, central cyanosis develops but pulse and respiration remain normal.

Stage of Narcosis:-
1.Neurological:- Consciousness is completely lost.Patient is in deep coma. Pupils are pin-pointed and non-reaching to light. Convulsion is present in children. Muscles are flaccid, reflexes are sluggish, muscle twitchings are prominent in codeine poisoning.

2.Respiratory :-
Respiration ratye is diminished. It may 2-6 / minute, which is charateristic feature and it is shallow. There may be Cheyne-

Stookes or Biots type of breathing. central cyanosis is very much prominant.
Cardiovascular :-
Bradycardia and low blood pressure.
Cutaneous:-
Hypothemia may be seen. Skin is cold and sometimes there is brisk sweating.

### Dhatura

Clinical Features:-
Dryness of the mouth and throat, abdominal distension, nausea, vomiting, dysphagia, difficulty in talking, dizziness, unsteady gait, dry and warm skin.rarely hyperpyrexia, tachycardia. hypertension.
cardiaac of vision, retention of urine, urgency of micturition marked restlessness, excited and confused state, muttering delirium, visual and auditary hallucination, carphology, delirium tremens, gradually convulsion, stupor and coma may develop.

### Arsenic

Clinical Features:-
1.Gastrointestinal:- Severe vomiting is seen followed by copious watery stool sometimes contaning blood, Jaundic may appear after one or two days. Abdominal pain, intense thirst may also be present.

2.Cardiovascular:- Tacycardia, feeble pulse, low blood pressure and circulatory collapse due to dehydration may be present.

3. Neurological :- Headache, irritability, painful cramps in the legs due to dehydration, muscular weakness due to crystalloid imbalance, convulsion and terminal coma may develop. Peripheral neuritis develops in chronic cases



4. Renal:- Oliguria sometimes anuuria may develop. Albumin, blood and cast may be present in the urine.

5. Hamatological: Very rarely haemolysis may develop.

6. Cutaneous:- Hypothermia, cold clammy skin and features of dehydration are present. In chronic cases Raindrop pigmentation of skin develops. Hairs and nails may contain considerable amount of arsenic.

Management: Gastric lavage with warm water or with freshly prepared hydrated ferric oxide may be given. Dimercaprol should be started at once 4mg /kg every four hourly. I.M for 48 hours followed by 3mg/kg twice daily for 6 days. 5% dextrose in normal saline drip to be stated i.v. to combat dehydration. If renal damage is severe, peritoneal or haemodialysis is required. Liver damage should be treated with conservative measures.

Fatal dose:- 125 mg of Arsenic.

### Mercury

Metallic mercury is not poisonous. Mercury chloride also known as corrosive sublimate are highly poisonous.

Clinical Features:- Same as a Arsenic poisoning but gastrointestinal symptoms are very nuch prominant due to the corrosive action of Mercuric chloride. The mouth, tongue,facial pillar, oropharynx are seen to be eroded. Bloody diarrhoea is very common.
Management:- Dimercaprol should be given as in arsenic poisoning. Sometimes Penicillamine may also be helful. Dose 250mg 3-4 times a day for adults and children Fatal dose;- 0.5gm

## Copper Sulphate.

Clinical Features:

1.Gastrointestinal:- Metalic tast in the mouth with burning sensation, abdominal pain, bluish or greenish colouration of the mucus membrane of the mouth, vomiting of bluish or greenish material, diaeehoea with colicky abdominal pain may develop. Stool does not contain blood and Jaundice develops subsequently.

2.Neurological:- Cramps in the leg, headache, convulsion, coma.

3. Urinary:

Oliguria, anuuria, uraemia may occur. Urine may contain albumin and cast.

4.Cardiovascular:

Hypotention, shock and collapse may develop

5.Respiratory:-

Hurried respiration is seen.

Management:

Gastric lavage should be given immediately with 1% Potasium ferrocyanide. Egg albumin or other demulcent fluids may be given through Ryle's tube. Potassium ferrocyanide 600mg in water may given as antidote.



## Basic principles in the management of poisoning

**1.Removal of the poison**

This is done either by emesis, by gastric lavage, by cathartics, forced diuresis or rare means like dialysis, or exchange transfusion. For emesis warm saline water, syrup of ipecac may be used but the best way to induce vomiting is by irritation of pharynx by finger stall or by the blunt end of a spoon. Emesis is contraindicated in poisoning with corrosives, strychnine, petroleum distillates and in comatose subjects. Cathartics like Caster oil, Milk of magnesia or bowel wash may be provided there is no contraindicatoin.

Gastric lavage:

It should always be given be asquickly as possible within 2 hours after ingestion of the poison in cases where poison was taken after full meal or with milk or the poison was enteric coated. Gastric lavage may be given after 3 hours of ingestion. Gastric lavage should not be given in cases of poisoning with strong corrosive, strychine,petroleum distillates or in comatose patients with depression of cough reflex. In cases of poisoning with petroleum distillate, gastric lavage may be given after passing an endotracheal tube. In corrosive poisoning gastric lavage may be given within 1 hour of ingestion. Patient should always be kept in the left lateral position with head ethir over the edge of the table or with raised foot end of the bed. Gastric lavage may be given with tap water but as there is danger of water intoxication at times at times, it is beter to use normal saline or half strnth normal saline. 300cc of warm water (38°c) may be used and lavage should be repeated 10-12 times until the recovered fluid become clear. Non -specific antidotes like Tannic acid (30- 50 gm in a litre of water, useful in strchine,

lead poisoning) Potassium permanganate (1:10,000 useful in strychine, nicotine, physostigmine, mmorphine); Milk (diluted with equal parts of water, useful min copper sulphate poisoning)activated charcoal in (1 or 2 table spoonful of activated charcoal in 240cc of water for all poisoning except cyanide poisoning) normal saline ( 1 teaspoonful of common salt in 500 ml of water, useful in silver nitrate poisoning)

Symptomatic therapy:-

1.Respiratory distress and failure

In this situation airway should be kept clean. An endotracheal tube should be continued by a mask.

Sock and Callapse:

Foot end of the bed should be raised. Vasopressor drugs Mephantermine or Dopamine may be used to maitain the systolic blood presure at or above 100mm of mercury. ECG monitoring.

Maintenance of Homeotasis;

Fluid, electrolyte acid -base imbalance should be corrected treated aaordingly.

Pulse, respiration, temparature, blood pressure should be recorded after every 10-15 minutes for first few hours.

General care and nursing;

Care of skin particulary pressure points and mucous surfaces Emergency epuipments including infusion set, catheter, lumbar puncture needle, stomach tube ect. should be kept ready at the bed side. Prophylactic antibiotics may be given whenever necessary.



**உசாவியவை:-**

வரதபாண்டியர் அமுதாகாரம் கையெழுத்துப்பிரதி, யாழ்ப்பாணம்
முருகேசு முதலியார் க.ச. நஞ்சு முறிவு நூல் நான்காம்பதிப்பு 2005, சென்னை.
வேலும் மயிலும்.ஆ. விஷக்கடி வைத்தியமுறைகளும் மூலிகைமருத்துவங்களும்,அறத்தமிழ் ஞானம் விநாயகர் தர்மநிதியம்.
சம்புநாதன்.வே. விஷவைத்தியம் வைத்தியன் சஞ்சிகை 1953,1954 யாழ்ப்பாணம்.
அறத்தமிழ்ஞானம் விநாயகர் தருமநிதியம் -1995.
Das.P.C. Text book of medicine Mubmbai.

**நேர்காணல்.**

வைத்தியர் ந.சண்முகம் விஷக்கடி வைத்தியர் இரண்டாவது பரம்பரை தாவடி வடக்கு, கொக்குவில்.

குறிப்பு:- விஷவைத்தியம் சம்பந்தமான மேலதிக தரவுகள் ஏதேனும் தாங்கள் அறியக்கிடந்தால் அனுபவமுறைகளை வெளியிட விரும்பினால் எனக்கு அனுப்பி வைக்கும்பட்சத்தில் அடுத்த பதிப்பில் நிறைவு செய்யலாம் என எண்ணுகின்றேன்.

முகவரி:- 651 கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்:- 021.222 2537.

# நன்றி நவில்கின்றேன்

விஷவைத்தியம் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல ஸ்ரீலங்காவில் சிறப்புற்று விளங்கியுள்ளது. அந்த வகையில் விஷவைத்தியம் இன்றும் அழியாமல் காக்கப்பட்டுள்ளது. இதன் தேவையுணர்ந்து அமுதாகாரம் என்னும் நூலாக வெளியிட்ட சுண்ணாகம் புலவர்சிகாமணி பிரம்மஸ்ரீ. அ. வரதபண்டிதர் அவர்களுக்கும், வைத்தியன் சஞ்சிகையில் விஷவைத்திய முறைகளை எழுதி வடித்து அதன் பயன்பாட்டை ஊக்குவித்தது இந்நூலில் பெருமளவுபகுதி இவரின் ஆக்கங்களே உள்ளடக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் வைத்தியர். சம்புநாதன் அவர்களுக்கும், விஷவைத்தியம் சம்பந்தமான சில தரவுகளைத் தந்த வைத்தியர் தாவடி தம்பு சண்முகம் அவர்களுக்கும், சில அனுபவ விஷவைத்திய அறிவுகளைப் பகிர்ந்து கொண்ட அன்புள்ளங்களுக்கும், சில கையெழுத்துப்பிரதிகளை பார்வையிடத்தந்தவர்களுக்கும், அவற்றைப் பாதுகாத்து வைத்திருந்தவர்களுக்கும் இவர்களின் மனமுவர்ந்த அர்ப்பணிப்பே இந்நூல் உருவாகக் காரணமானது. அந்த வகையில் இவ்வுள்ளங்களுக்கு நன்றிகள் பல. எல்லாவற்றுக்கும் மேலாக இந் நூல் உருவாக்கத்திற்கு ஒத்தாசை புரிந்த எனது மனைவி டாக்டர் அன்புச்செல்வி சிரேஷ்ட விரிவுரையாளர் சித்தமருத்துவப் பிரிவு, யாழ் பல்கலைக்கழகம் அவர்களுக்கும், விரைவாகவும் சிறப்பாகவும் இந்நூலை வடிவமைத்து தந்த ஸ்ரீசாயி அச்சக உரிமையாளர், ஊழியர்களுக்கும் என் மனம் நிறைந்த நன்றிகள். இந்நூலைப் படித்து பயன் பெறும் போது நான் மிக்கற்ற மகிழ்ச்சியடைவேன்

என்றும் அன்புடன்

**க. ஸ்ரீதரன்**

நூலாசிரியர்

14.01.2009.